www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

டிச.07–13,1997

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 234

## ஹெலி வீழ்ந்தது எப்படி?



## இஸ்ரேல் பாணி தாக்குதல்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கருணாநிதிக்கு ஆபத்தா?



## ஐஸ்வர்யா ஐ லவ் யூ

## சேகுவேராவின் கடிதம்

## சோகத்தில் பிறந்த பாடல்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## யார் ஜனாதிபதி?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"இராணுவத்தீர்வு முயற்சி
சரிப்பட்டு வராது!
ஒரு பிரபாகரனை
அழித்தால்,
ஒன்பது பிரபாகரன்கள்
உருவாகுவார்கள்!
அரசியல் தீர்வுதான்
நாட்டுக்கு
விமோசனம் தரும்!"

சபாஷ்!
சரியான கருத்து
என்பீர்கள்!
தூங்குவதுபோல
நடிப்பவர்கள் தவிர,
அனைவராலும்
அங்கீகரிக்கப்பட்ட கருத்துத்தான்!
ஆனால், இக் கருத்து
தமிழ் பேசும் ஒருவரின்
உதட்டிலிருந்து உதிர்ந்திருந்தால்
புலிச்சார்பு
என்று முத்திரை குத்தியிருப்பர்!
புலிகளை நியாயப்படுத்துவதாக
சாயம் பூசியிருப்பர்!
ஆனால், அக் கூற்றுக்களை
வெளியிட்டிருப்பவர்
சாட்சாத்
ஜனாதிபதி சந்திரிக்காவேதான்!
ஜனாதிபதி அடிக்கடி
இவ்வாறு
'அருமையான கருத்துக்களை'
வெளியிட்டு வருகிறார்!
ஜனாதிபதியின் உரைகள்
யதார்த்தமாக உள்ளன!
அவ்வாறு பேசுவதால்தான்
அகில உலக உதவிகளை
அவர் பெற்றுத்தர முடிகிறது!
சிறிலங்கா சுதந்திரமடைந்து
ஐம்பது ஆண்டுகளாகின்றன!
இந்த ஐம்பது ஆண்டுகளில்
பல பிரதமர்களை
சில ஜனாதிபதிகளை
நாடு கண்டிருக்கிறது!
அத்தனை பேரிலும்
இன்றைய அதி உத்தம
ஜனாதிபதியவர்கள்தான்
பேச்சில் வல்லவராக உள்ளார்!
உலகம் என்ன நினைக்கிறது
என்பதையும்,
எப்படிப் பேசினால்
உலகின் வியப்பு விரியும்
என்பதையும்
நன்கு புரிந்து பேசுகிறார்!
சில சமயங்களில்
ஜனாதிபதியின் கருத்துக்களை
கேட்கும்போது,
இந்த நாட்டின்
ஜனாதிபதிதானா பேசுவது
என்ற சந்தேகம் எழுகிறது!
ஏனெனில்,
முப்படைகளின் தளபதி
ஜனாதிபதிதான்!
இந்தியா போன்ற நாடுகளில்
ஜனாதிபதிகளை
'ரப்பர் ஸ்டாம்ப்' என்பர்!
இங்கோ-
ஜனாதிபதி அவர்கள்தான்
'சூப்பர் பவர்!'
"புலிகளை ஒழித்து
போரில் வெல்லுவோம்!" என
அமைச்சர் பெருமக்கள்
சூளுரைப்பதைக் கேட்கிறோம்!
அமைச்சரவைக் கூட்டங்களும்
ஜனாதிபதி தலைமையில்தான்!
ஆயுதக் கொள்வனவு உத்தரவும்
ஜனாதிபதி கைகளில்தான்!
அமைச்சர்கள் பேச்சை
தடுக்கலாம்.
ஆயுதக் கொள்வனவை
நினைத்தால் நிறுத்தலாம்!
போர் முஸ்தீபுகளை
முடக்கி வைக்கலாம்!
அரசியல்தீர்வை
முன்வைத்துக் காட்டலாம்!
மேற்கண்ட அத்தனை
பணிகளையும்
செய்யக்கூடிய
'சூப்பர் பவர்'
ஜனாதிபதியிடம் உள்ளது!
சிறுதொகையான
பேரினவாதிகளின் எதிர்ப்பு,
தோற்கடிக்கப்பட்ட
எதிர்க்கட்சியின் மறுப்பு
இவை எல்லாம்
'சூப்பர் பவர்' முன் தூசு
என்பதுதான் உண்மை!
ஆனாலும் போர் தொடர்கிறது.
தீர்வுப் பொதி கனம்
தினம் குறைந்து வருவதுடன்,
காலதாமதமும் ஆகிறது!
குண்டுகளும், ஷெல்களும்
குடியிருப்புக்களை
பதம் பார்த்து வருகின்றன!
ஆனால் சந்திரிக்கா அம்மையார்,
"இராணுவத்தீர்வு சரிப்படாது
பிரபாகரன்களை ஒழித்தால் மட்டும்
பிரச்சனை தீராது" என்கிறார்!
அப்படியானால்
இந்த நாட்டின்
ஜனாதிபதி யார்?
என்ற கேள்வி
எழுமா? எழாதா?
சொல்லும் செயலும்
ஒன்றாயிருப்பின்
மேற்கண்ட சந்தேகம்
எழவே எழாதல்லவா!
■ ■
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## இடறல்!

# ஆன்மீகம்

நாம் சிலரை ஆன்மீக வாழ்வின் வளர்ச்சிக்காக, உயர்வுக்காக, அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தரக்கூடியவர்கள், வாழ்வின் முன்னேற்றத்திற்காக வழி காட்டக்கூடியவர்கள் என்ற நல்ல அபிப்பிராயம் வைத்திருப்போம்.

நம்மை காண்கின்றபோது, கைகுலுக்கி வரவேற்று உபசரித்து பற்றும் பாசமும், இரக்கமும் மனதுருக்கமும், உடையவர்களாக தம்மைக் காட்டிக்கொண்டு, மறைமுகமாக நமக்கு விரோதமாய் பேசப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆதாரமாக்கி, நம்மில் அன்பு செலுத்தி, அரவணைத்து, ஆதரித்து கடவுளின் வழியிலே நடக்கச் செய்யும் நல்லுள்ளங்களையும் நாசமாக்கி விடுகின்றார்கள்.

இவ்வாறான கூட்டத்தினரை பார்த்து ஆண்டவர் இயேசு சொன்னார்: "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ; அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப் போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்!" (மத்தேயு 9:42)

எனவே, உள்ளொன்றும் புறமொன்றும் பேசி வாழ்க்கைக்கு இடறலாக இருந்து விடாதபடி, ஆண்டவர் இயேசுவின் வார்த்தையை வாழ்வின் ஆதாரமாக்கி மற்றவர்கள் உயர உழைப்போமாக.

சகோ.எஸ்.யேசுநாதன், செங்கலடி.



## சூறத்துல் 'வாகிஆவினதும்', 'தபாரக்கல்லதி' சூறாவினதும் சிறப்புக்கள்

இவ்விரு சூறாக்களினதும் சிறப்புக்கள் பற்றி பல ஹதீஸ்களில் வந்துள்ளன.

சூறத்துல் 'வாகியாவை' ஓதிவருபவர் 'ஜன்னத்துல் பிர்தவ்ஸில்' இடம்பெறக் கூடியவர்களில் அழைக்கப்படுவார். அதோடு, 'வாகியா சூறாவை' இரவில் மஃரிப் தொழுகையின் பின், தினமும் எவரொருவர் ஓதிவருவாரோ அவருக்கு வறுமை, கஷ்டங்கள் ஏற்படாது. இந்த சூறா 'சீமான் தனத்தை' வழங்கிவிடும்.

அடுத்து, 'தபாரக்கல்லதி சூறாவும்' பல சிறப்புப் பொருந்தியது. எவரொருவர் இதனையும், 'அலிப்லாம் மீம் ஸஜ்தா' சூறாவையும் 'மஃரிப்பிற்கும் இஷாவிற்குமிடையில் ஓதிவருகிறாரோ அவர், 'லைலத்துல் கத்ரு இரவில்' நின்று வணங்கியவரைப் போன்றவராவார் என ஓர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதோடு, 'தபாரக்கல்லதி சூறாவை' தினம் மஃரிப் தொழுகையின் பின் ஓதிவருபவர் கப்ரின் வேதனைகள், நரக நெருப்பின் தீண்டல்கள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவார்.

எனவே, இந்த சூறாக்களின் பெறுமதியுணர்ந்து அதனை ஓதிவருவது நம் கடமையாகும்.

செல்வி: பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல.231
### பரிசுக்குரிய கவிதை

### விலங்குகள்!

தமிழனாய் வந்ததால்
அகதியாய் ஆனவன்!
அகதியாய் ஆனபின்
கைதியாய் ஆகினேன்!
கைதியாய் ஆனதால்
கைகளில் விலங்குகள்!

அ.கௌரிதாசன்-கிண்ணியா

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:



**இலவசம்!**
அமெரிக்காவால்
வழங்கப்படும்
இலவச இரும்பு
வளையல்!
அ.சூசைராஜ்-வவுனியா.

**பெயர் அல்ல**
தங்கத்தில் இருந்தாலும்
இதற்கு
'விலங்கு' என்றுதான்
சொல்வார்கள்!
சுபா வரன்-கண்டி.

**'பட்ஜெட்'-98**
ஜனவரி முதலாக...
கை விலங்கு
இறக்குமதிக்கான
சுங்கவரி தீர்வு:
விலக்கப்படும்!
இ.சுலோசனா-மட்/கல்லடி.

**தங்கக் காப்பு**
எங்கும் தமிழருக்காகக்
காத்திருக்கும்,
தங்கக் காப்புகள்!
அ.சந்தியாகோ-அசோகா வித்தியாலயம், கண்டி.

**விளம்பரம்**
இங்கே உத்தரவாத விலையில்
கைவிலங்குகளைப்
பெற்றுக் கொள்ளலாம்...
தமிழர்களுக்கு மட்டும்
இலவசம்!
கு.திருமால்-அமிர்தகழி, மட்டக்களப்பு.

**கவசம்**
கவசகுண்டலத்துடன்-அன்று
கர்ணன் பிறந்தான்!
கை விலங்குடன்-இங்கே
நாங்கள் பிறந்தோமா?
தி.ரமணன்-வவுனியா.

**காத்திருப்பு**
அப்பாவி
கரங்களின்
வரவுக்காக
காத்திருக்கிறேன்!
எம்.யுவன்-கரையாக்கன்தீவு.

**விலங்கு**
விலங்குகள் பல ரகம்-அதில்
இது ஒரு தனி ரகம்!
கைகளுக்கு மட்டுமென்ன,
மனதுக்கும் விலங்கு வேண்டும்!
எஸ்.நாகராஜன்-காரைதீவு-02.

**சம நோக்கி**
சட்டத்தின் முன்
யாவரும் சமம்!
இன்று இதன் முன்னால்,
தமிழர்கள் யாவரும் சமம்.
கி.ராஜேஸ்வரி-வவுனியா.

**அறிமுகப்படுத்துகின்றோம்!**
முன்னர் திருடர்களுக்கு
இப்போ தமிழர்களுக்கு!
திருமதி விமலாதேவி சபாநாயகம்-மட்/கருவேப்பங்கேணி.

## கவிதைப் போட்டி இல.234



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 13.12.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.234, தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.



### பொறுமைக்கும் எல்லை உண்டு

சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும், 'இலக்கிய நயம்', 'பூலான்தேவி' தரும் ரசிகனுக்கு நன்றிகள் பல நவில்கின்றோம். நாமறியா ரசிகனை, எப்போது 'அறிமுகம்' செய்வதாக உத்தேசம்? தயவுசெய்து எம் பொறுமையை இனியும் சோதிக்க வேண்டாம்.

எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.

■ ■

இனிய முரசே!

எந்தவொரு பெண்ணுக்குமே வரக்கூடாத நிலமைதான பூலானுக்கு ஏற்பட்டது. எந்த நிலமை வந்தும், முன் வைத்த காலை பின் வைக்காத பூலானின் மன உறுதியினை நான் மனப்பூர்வமாக பாராட்டுகின்றேன். மல்லாவைக் கொன்ற, காம வெறி பிடித்த மிருகங்களை பூலான்தேவி வேட்டையாடுவது நியாயம்தான்!

ரி.சுசீலா, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

■ ■

### திருந்தமாட்டார்களா?

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் அவர்கள் நோர்வே முன்னாள் பிரதமருடன் பேசியதைக்கூட சந்தேகக்கண் கொண்டு பார்த்த கூட்டணியினர், முரசு பார்த்தாவது திருந்தமாட்டார்களா? இல்லை! ஏன் என்... பதவியாசை விடமாட்டாதே!

எஸ்.அரசகுமார், [illegible]முனை-02.

■ ■

இனிய முரசே!

காதிலை பூ கந்தசாமி அண்ணரின் 'ஒற்றுமையான உதை' செம அடி. எங்க கையைக் குடுங்க அண்ணர். வார்த்தைத்தான் வதைப்பதற்கு (திருந்தாதவர்களுக்கு) மிக அவசியமான ஆயுதம் என அடிக்கடி நிரூபித்து வருகின்றார். ஆனால் அறிய வேண்டியவர்கள் உணர்ந்து கொள்கின்றார்கள். உணர்ச்சியில்லாதவர்களுக்கு எங்கே உறைக்கப் போகின்றது? முரசுவழி தனி வழி.

அருமைத்துரை பரமேஸ்வரன், நவிண்டிலூர்.

■ ■

# வாசக(ர்)சாலை

வாரம் ஒரு 'கிரைம் கதை' ச்சா... ரொம்பவும் அசத்தல் தான்! 'கிரைம்' சக்கரவர்த்தி ராஜேஷ்குமார் அவர்களுக்கு பாராட்டுக்கள். மேலும் ஆசிரியர் அவர்களே! கவிதைப் போட்டி இல. 229க்குரிய முடிவில் என் கவிதையும் பாராட்டு பெற்றிருந்ததைக் கண்டு மகிழ்வு கண்டேன். அதேவேளை, ஒரு தவறும் இடம் பெற்றிருந்தது. 229க்குரிய முடிவில் அதன் படத்தையும், இலக்கத்தையும் பிரசுரித்திருக்கவில்லையே! வாசகர்கள் எப்படி கண்டு பிடிப்பார்கள் கவிதைக்குரிய அர்த்தங்களை?!

செல்வி ப்ரியநேசி, களுத்துறை (தெற்கு)

தவறுக்கு வருந்துகிறோம்.
ஆ.ர்.

### காந்தவாதிகள்

கூட்டணியினர் தம்மைக் காந்தியவாதிகள் என அழைத்துக் கொள்கின்றனர். அதனை யார் நம்புவது? எனக்கொரு சந்தேகம், அவர்கள் தங்களை காந்திய வாதிகள் என்கிறார்களா? காந்தவாதிகள் என்று சொன்னார்களா? காந்தவாதிகள் என்றால் சரிதான். அரசினால் கிடைக்கும் சலுகைகளை காந்தம்போல கவ்விப் பிடிப்பவர்கள் அல்லவா!

கே.கணேசமூர்த்தி, அலவத்துகொட.

### மூன்றாம் தரப்பு கேட்பது பொய்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்பதாக நாடகமாடியபடி, அரசின் தீர்வு முயற்சிகளில் நம்பிக்கையும் தெரிவித்து வருகிறது கூட்டணி. அதன் மூலம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கே தடையாக இருக்கின்றனர் கூட்டணியினர். தமிழ் மக்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்புகிறார்கள் என்பதால், தாமும் அதற்கு ஆதரவு போன்று நாடகமாடுகின்றனர்.

இ.தியாகரூபன், துனுக்காய்.

### தெய்வச் சந்நிதியா?

இனிய முரசுக்கு;

"பாராளுமன்றம் பன்றித் தொழுவம்" என்றார்கள் புரட்சியாளர்கள். மக்கள் அந்த பாராளுமன்றத்தை மலையாக நம்பியிருப்பது தவறு என்பதை நிரூபிப்பதே புரட்சியாளரின் கடமை. அதற்காக பாராளுமன்றத்தில் பங்குக்கொண்டு, அங்கு நின்றே அதன் இயலாத தன்மையை அம்பலப்படுத்தலாம் என்றார் மாமேதை லெனின். அம்பலப்படுத்திவிட்டு வெளியே வர வேண்டும். ஆனால் தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத்தை தெய்வச் சந்நிதி போல காண்பிக்கின்றன. இராஜதந்திரியின் அலசல் அதனை சுட்டிக் காட்டி இருந்தது. பாராளுமன்றத்தை நம்பவைத்து, மக்கள் தான் போராடவேண்டும் என்ற உண்மையை மறைக்க முயல்வதை வெளிப்படுத்திய அலசல் அபாரம்.

கி.திருஞானசுந்தரம், கொழும்பு-06.

### திசைதிருப்பும் பாராளுமன்றம்

இராஜதந்திரியின் அரசியல் அலசல் கண்டேன். கையைக் கொடுத்து பாராட்ட மனம் நாடியது. பாராளுமன்றம் என்பது இனப்பிரச்சனைக்கு தீர்வு தரும் அமைப்பல்ல. மக்களின் கோபாவேசங்களை திசைதிருப்ப அங்கு ஆற்றப்படும் உரைகள் வழிவகுக்கின்றன. நீங்கள் அமைதியாக இருங்கள், நாங்கள் அங்கு போய் பேசிக் கிழிக்கிறோம் என்பார்கள் பாராளுமன்றவாதிகள். அந்த உரைகளும் பத்திரிகைகளில் வரும். விஷயம் அங்கேயே பேசப்பட்டுவிட்டது பிறகென்ன என நினைப்பர் அப்பாவி சனங்கள்! மக்களைப் பார்வையாளர்களாக்கும் பாராளுமன்ற பாதையைச் சாடி, மக்களை பங்காளிகளாக்கும் அரசியல் போராட்டப் பாதையை காட்ட யார் முன் வருவர்? அவ்வாறு முன்வருவோரை வரவேற்க நாம் தயார்.

அ.சகாதேவன், அன்புவழிபுரம், திருமலை.

### இனியும் ஏன்?

'ஆயுதம் ஏந்த வேண்டாம், அரசியல் ரீதியாக, அமைதி வழியில் போராடலாம்' என்று எடுத்துரைத்தார் இராஜதந்திரி. தமிழ்க் கட்சிகளின் செவியில் ஏறுமா? இனியும் தாமதிக்க என்ன இருக்கிறது? வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு ஆதரவு என்றால் தீர்வு முயற்சியை ஆதரிக்கலாம். சம்மதம் இல்லையானால் செயல் ரீதியாக (வாய்ப் பேச்சில் அல்ல) எதிர்ப்புக் காட்டவேண்டியதுதானே! கூட்டணியை விடுங்கள், ஏனைய கட்சிகளுக்குமா 'தில்' இல்லை?

எம்.சிவராசா, வவுனியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# யாழில் இருந்து படை நகர்ந்தால் பாரிய தாக்குதல்

# மாவீரர் தினத்தில் யாழில் புகுந்த புலிகள்

மாவீரர் தினத்தை அடுத்து யாழ் குடாநாட்டில் புலிகளின் நடமாட்டங்கள் மேலும் அதிகரித்துள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் உரையாற்றியதை அடுத்து, யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் ஒரே நேரத்தில் பிரபாகரனது உரை அடங்கிய பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மாலை 5.11.க்கு புலிகளின் தலைவர் பிரபாகரனது உரை புலிகளின் குரல் வானொலியில் ஆரம்பமானது. பின்னர் 6.05க்கு நினைவொலி எழுப்பப்பட்டது.

வன்னியில் அந்த நினைவொலி எழுப்பட்ட அதே நேரம் யாழ் குடாநாட்டில் உள்ள சில ஆலயங்களில் இருந்த மணிகளும் ஒலிக்கச் செய்யப்பட்டன.

மாலை 6.07க்கு ஈகைச் சுடர் ஏற்றும் நேரம் என புலிகளின் குரல் அறிவித்திருந்தது. அதே நேரம் யாழ் குடாநாட்டில் கோப்பாயில் முன்னர் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன.

ஆயுதம் ஏந்திய குழுவாக வந்த புலிகள் இயக்க உறுப்பினர்களே விளக்குகளை ஏற்றி வைத்தனர். அணிவகுத்து நின்று வணக்கமும் செலுத்தினர்.

கோப்பாயில் மாவீரர் துயிலும் இல்லம் படையினரால் அழிக்கப்பட்ட பின்னர், தற்போது வெறும் மைதானமாக காட்சியளிக்கிறது. பல நூற்றுக்கணக்கான புலிகள் இயக்க உறுப்பினர்களது உடல்கள் புதைக்கப்பட்ட இடமே அதுவேயாகும்.

வன்னியில் இருந்து பிரபாகரனின் உரைகள் அடங்கிய பிரசுரங்கள், படகுகள் மூலமாக யாழ் குடாநாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டன.

ஐம்பதுக்கு மேற்பட்ட புலிகளின் படகுகள் யாழ் குடாநாட்டின் கடற்கரைப் பகுதிகள் சிலவற்றில் கொண்டுவந்த பிரசுரங்களை இறக்கிவிட்டுச் சென்றன.

அரியாலை கடற்பகுதியில் புலிகளின் படகுகளின் நடமாட்டம் பற்றி அறிந்த படையினர் அப் பகுதி நோக்கி ஷெல்வீச்சு நடத்தினர். பூநகரி பகுதி நோக்கியும் ஆட்டிலெறி ஷெல்கள் ஏவப்பட்டன.

யாழ் குடாநாட்டிற்கான புலிகளின் பின்தளப் பகுதியாக பூநகரி இருப்பதாக படைத்தரப்பு சந்தேகிக்கிறது. யாழ் தளபதி பொட்டம்மானும் அங்குதான் தங்கி உள்ளார் என்றும் நம்பப்படுகிறது. அதனையடுத்தே பூநகரிப் பகுதியில் விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

எனினும் புலிகளுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. இதேவேளை தற்போது வலிகாமப் பகுதிகளான கோப்பாய், இருபாலை உட்பட பல பகுதிகளுக்குள் படையினர்மீது புலிகள் தாக்குதல்களை தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

முன்னர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில்தான் புலிகளின் அணிகளது நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்பட்டன. மாவீரர் தினத்தின் பின்னர் வலிகாமப் பகுதியிலும் புலிகளின் நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன.

இத் தகவல்கள் படையினருக்கும் எட்டியதால், சுற்றிவளைப்புத் தேடுதல்கள் தீவிரமாகியுள்ளன.

யாழ் குடாநாட்டில் உள்ள ஒரு இயக்கத்தினர் படையினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிகிறது. மாவீரர் தினத்துக்கு முன்பாக யாழ் நகரை சுற்றிவளைத்து படையினர் தேடுதல் நடத்தினர். அப்போது குறிப்பிட்ட இயக்க உறுப்பினர்கள் முக மூடிகளுடன் நின்று ஒத்துழைத்தனராம்.

தேடுதல் நடைபெற்ற தினத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரது மரணச் சடங்கு நடைபெற்றது. அந்த மரணச் சடங்கில் கலந்து கொள்ள சென்றோரும் தேடுதல் வேட்டை காரணமாக தடுக்கப்பட்டனர் என்று ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

வன்னி நடவடிக்கைக்காக யாழ் குடாநாட்டில் இருந்து மேலும் படையினர் கொண்டு செல்லப்பட்டால், யாழில் பாரிய தாக்குதல்களில் புலிகள் ஈடுபடக்கூடும் என்று தெரிகிறது.

இதேவேளை யாழ் குடாநாட்டில் ஷெல் தாக்குதல்கள் நடத்த படையினர் ஆரம்பித்தால் அங்குள்ள மக்களிடம் பாரிய அதிருப்திகள் தலைதூக்கும் எனவும் கூறப்படுகிறது. ■

## பிரபா விடுத்த எச்சரிக்கை

## தலைநகர தாக்குதல் தொடருமா?

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரன் ஆற்றிய உரை பல்வேறு பத்திரிகைகளில் வெளியாகிவிட்டன. எனினும் முழுமையான உரை வெளியாகவில்லை.

பிரபாகரன் தனது உரையில் பின்வருமாறு எச்சரிக்கையும் விடுத்திருந்தார்: "கடந்த ஐம்பது ஆண்டு காலமாக அடக்குமுறை என்ற ஒரே வழியில் சிங்கள தேசம் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் குருட்டுத்தனமான அணுகுமுறையால்தான் இலங்கையில் அமைதி குலைந்து, போரும் வன்முறையும் தலைதூக்கி நிற்கின்றன.

இந்த அணுகுமுறையை சிங்கள தேசம் மாற்றிக்கொள்ளாவிடின், முடிவில்லா யுத்தத்தையும்,பேரழிவையும் அது சந்திக்க வேண்டிவரும். இந்த அழிவுப் பாதையை தேர்ந்தெடுத்து நிற்பது சிங்களப் பேரினவாதிகளேயன்றி நாமல்ல. இராணுவ அடக்குமுறைக் கொள்கையால் சிங்கள தேசம் தன்னைத் தானே அழித்துக் கொண்டிருக்கிறதே தவிர தமிழினத்தின் சுதந்திர எழுச்சியை அதனால் அழித்துவிட முடியாது.

இந்த உண்மையை சிங்களப் பேரினவாதம் என்றோ ஒருநாள் உணர்ந்தேதீரும். ஆயினும் இராணுவ வன்முறைப் பாதையை கைவிட்டு சிங்கள தேசம் நீதி வழங்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

அந்த எதிர்பார்ப்புடன் நாம் போராட்டத்தை ஆரம்பிக்கவும் இல்லை" என பிரபாகரன் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

'பேரழிவை சந்திக்க வேண்டி வரும்' என பிரபாகரன் எச்சரித்திருப்பது, தலைநகரில் பாரிய தாக்குதல்களுக்குப் புலிகள் திட்டமிட்டுள்ளதையே வெளிப்படுத்துகிறது.

## மனித உரிமை மீறல் தொடர்கிறது

## இலண்டன் நீதிமன்றம் தீர்ப்பு!

இலங்கையில் தமிழ் மக்கள்மீதான மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்கள் மீது கொடூரமான சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியவரை இலங்கைக்கு அனுப்புவது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர் ஒருவர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கிய இலண்டன் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி டாக்டர் ஈ.ஏ.பிரின்ஸ் முன்கண்டவாறு தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

1994ம் ஆண்டு பிரிட்டனுக்கு வந்து அரசியல் புகலிடம் கோரிய கிழக்கு மாகாணம், கல்முனையைச் சேர்ந்த கோணேஸ் என்ற 22 வயது தமிழ் இளைஞர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு வழக்கிலேயே மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

1994ம் ஆண்டு அரசியல் புகலிடம் கோரிய கோணேஸின் விண்ணப்பம் அந்த ஆண்டே நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து உள்நாட்டு அமைச்சரின் நிராகரிப்பு உத்தரவுக்கு எதிராக அந்த இளைஞருக்காக சட்டத்தரணிகள் மேன் முறையீடு செய்தனர். இந்த மேன்முறையீட்டு வழக்கில் அந்த இளைஞருக்கு ஆதரவாக பிரபல பரிஸ்டர் மைக்கல் மேவி ஆஜரானார்.

மேன்முறையீட்டை விசாரித்த பிரின்ஸ் தனது தீர்ப்பில் பின்வருமாறு தெரிவித்தார்:

"இலங்கை ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளுடனான போரை முடுக்கிவிட்டதன் மூலம் ஆயுதப்படையினரின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருக்கின்றன. தமிழர் மீதான சித்திரவதை கொடூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப் படையினர் தமிழ் மக்களைச் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்ட ரீதியில் படுகொலை செய்து வருகின்றனர்.

கைதாகி ஆயுதப்படையினரின் பிடியிலிருந்து காணாமற்போகும் தமிழர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. காணாமற்போகும் தமிழர்களின் எண்ணிக்கை வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல, கொழும்பிலும் அதிகரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் ஏனைய தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டையைத் தீவிரப்படுத்தி வருகின்றது. இதுவே இலங்கையில் இன்றைய பொது நிலவரமாகும்.

இந்நிலையில் குறிப்பிட்ட இளைஞர்மீது 1988 முதல் 1994 வரையிலான காலப்பகுதியில் கல்முனையில் ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான சித்திரவதைகளையும் மேற்கூறிய இன்றைய சூழலையும் கவனத்தில் எடுத்தால் கோணேஸ் அந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவது ஆபத்தானதாகும். அவர் அங்கு அனுப்பப்பட்டால் மேலும் சித்திரவதைக்கு உள்ளாவார்.

ஆகவே அவருக்கு முழு அகதி அந்தஸ்து வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார். ■

## அகதிகள் படையெடுப்பு

(மன்னார் நிருபர்)

வன்னிப் பகுதியிலிருந்து மன்னாருக்கு வரும் அகதிகளின் தொகை தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. வன்னிப் பெருநிலப் பரப்பில் பெய்துவரும் கடும் மழை, மற்றும் சுகாதார சீர்கேடு போன்ற காரணங்களினால் அப்பகுதியில் வாழ முடியாத பலரே இவ்வாறு மன்னாருக்கு வருவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 28.11.97 அன்று 196 பேர் வன்னியிலிருந்து மன்னார் வந்தனர். இவர்கள் பேசாலை நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ளவர்களில் அநேகமானோர் பஸ்களின் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு யாழ் அனுப்பப்படுகின்றனர். 30.11.97 அன்று வரை இங்கிருந்து 500பேர் வரை திருமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு மற்றும் காலநிலை சீர்கேடு காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மன்னார் காங்கேசன்துறை கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என மன்னார் மாவட்ட செயலாளர் எஸ்.மரியதாசன் குரூஸ் தெரிவித்துள்ளார்.

பெருந்தொகையான அகதிகள் மன்னாருக்கு மேலும் படை எடுத்து வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் எந்நேரமும் வரக் கூடிய இவர்களை உடனுக்குடன் திருமலைக்கு அனுப்பிவைக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. ■

## மன்னாரில் புலிகள் தாக்கினர்

மன்னாரில் 2.12.97 அன்று காலை 8.30 மணியளவில் படையினர் சென்ற பஸ்வண்டி புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

இத்தாக்குதலில் ஒன்பது படையினர் பலியாகினர். இரு பெண் படைவீரர்களும் பலியானவர்களில் அடங்குவர். முருங்கனுக்கும் மடுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்தே புலிகளின் அதிரடிப் படையினர் இத் தாக்குதலை நடத்தினர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கெடுபிடிகள் அதிகரிப்பு

வவுனியாவில் இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ள சில பாடசாலைகளில் புலிகள் இயக்கத்தினர் கருத்தரங்குகள் நடத்தி உள்ளனர். இயக்கத்தில் இணைந்து கொள்ளவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 30.11.97 ஞாயிறு மாலை வவுனியாவில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நாலு வயதுச் சிறுவனும் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரும் பலியானார்கள். இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைதீவுப் பகுதியில் நான்கு இந்திய மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கியதாக அறியப்படுகிறது. அவர்களைத் தேடிச்சென்ற இந்திய மீனவர்கள் இரணைதீவுக் கடற்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட மேற்படி மீனவர்களின் சடலங்களை எடுத்துச் சென்றனர் என்றும், தெரிவிக்கப்பட்டது. ■

## வன்னியில் புதிய உறுப்பினர் திரட்டல்

## பிரபாவின் கட்டுப்பாட்டில் சிறுத்தைப் புலிகள்!

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 'சிறுத்தைப் படையணிகள்' என்னும் புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது பற்றி முரசு முன்னரே செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

சிறுத்தைப் படையணி பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கி வருகிறது. பிரபாகரனால் நேரடியாகச் தெரிவு செய்யப்படும் புலிகள் இயக்க உறுப்பினர்களே சிறுத்தைப் படையணியில் இணைக்கப்படுகின்றனர்.

சிறுத்தைப் படையணியினர் முதன் முதலில் பங்குகொண்டு பாரிய தாக்குதல் புல்மோட்டையில் இல்மனைட் ஏற்றிய கப்பல் மீதான தாக்குதலாகும்.

'ஜயசிக்குறுய்' படையினர் மீதான பாரிய தாக்குதல்களுக்கு சிறுத்தைப் படையணிகள் தயார் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை வன்னியில் போராளிகள் சேரும் அலுவலகங்களில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்து வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

'ஜயசிக்குறுய்' படையினர் கடந்தவாரத்திலும் தற்காப்புக்கான தாக்குதல்களிலேயே ஈடுபட்டிருந்தனர். தங்கள் நிலைகளை புலிகள் அண்மித்துவிடாமல் இருக்கும் வகையில் ரோந்துகளில் ஈடுபட முயன்றனர்.

ரோந்தில் ஈடுபட முயன்ற படையினரை நோக்கி புலிகளும் தாக்குதல் தொடுத்தனர். சிறு மோதல்களும் மூண்டன.

இதற்கிடையே கடும் மழை காரணமாக படையினரின் காவல் அரண்களும், பதுங்கு நிலைகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பெரிய மடுப்பகுதியில் சில டாங்கிகளும் சேற்றில் சிக்கி உள்ளதாகவும், அந்த டாங்கிகளுக்கு அருகில் ஆட்டிலெறிகளை நிறுத்திவைத்து படையினர் ஷெல் தாக்குதல் நடத்துவதாகவும் அறியப்படுகிறது.

மழைக்காலத்தில் தமது தற்காப்பை பலப்படுத்துவதற்கான தாக்குதல்கள் தவிர, புதிய பகுதிகளை படையினர் கைப்பற்றக் கூடிய சாத்தியம் எதுவும் காணப்படவில்லை.

## போரில் பெண் விமானிகள்

இலங்கை விமானப்படையின் பெண் விமான ஓட்டிகளுக்கான விண்ணப்பமுடிவு திகதி இம்மாதம் 15ம் திகதியெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே 250 பெண்கள் இப் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர் என விமானப்படையினர் தெரிவிக்கின்றனர்.

சில விண்ணப்பதாரிகள் 'யாழ்ப்பாணம் சென்றாவது சேவை புரியத் தயார்' என்று தங்களது விண்ணப்பப் படிவங்களில் கோடிட்டுக் காட்டியுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது. எதிர்காலத்தில் மேலும் பல பெண் விமான ஓட்டிகளை நியமனம் செய்யத் திட்டமுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

பிறநாடுகள் பலவற்றில் விமானப் படையில் பெண்கள் விமானிகளாகச் சேவைபுரிவது பழைய செய்தி எனினும் இலங்கையில் புதியவிடயமே. ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்படும் அதேவேளை பெண்விமான ஓட்டிகள் வடக்கு- கிழக்கு யுத்தத்திற்கும் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம். ■

## இரகசியங்களை வெளியிடுவது யார்?

## ஆங்கில வார இதழ் கேள்வி

"அரச செய்தி நிறுவனங்கள் பாதுகாப்புத் தரப்பு அந்தரங்கங்களை பொறுப்பற்ற விதத்தில் வெளிக்கொணர்கின்றன என்ற உண்மையைப் புறக்கணித்துவிட்டு தனியார் செய்தி நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் அவ்வாறான இரக்சியங்களை வெளியிட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டுவது அபத்தமானது." என்கிறது கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று.

கொழும்பிலிருந்து வெளிவரும் மேற்படி ஆங்கில வார இதழில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கடந்த வெள்ளி இரவு (28.11.97) சுயாதீன தொலைக்காட்சியில் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் போது 5 படையினர் கொல்லப்பட்டதாக செய்தி வாசிக்கப்பட்டது. அதேவேளை பாதுகாப்பமைச்சின் நடவடிக்கைத் தலைமைச்செயலகம் வெளியிட்ட செய்தியில் 5 விடுதலைப்புலிகளே கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு உதாரணம்- இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பொங்ஷ்வை 8 விமானமொன்று செப்டம்பர் 4, 1995 அன்று தரையிறங்கி பலாலி விமான தளத்தில் உருமறை உறையால் மூடப்பட்டுப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ.யினர் அவ்வேளை, அவ் விமானத்தின் மீதும், ஓடுபாதையிலும் குறிவைத்து மோட்டார் குண்டுகளை வீசித் தாக்குதலை மேற்கொண்டனர்.

அன்று மாலையில் மூத்த படையதிகாரிகள் தலையில் கைவைத்தபடி ஏங்கிப் போய் நின்றிருந்தனர். காரணம், அப்போது இலங்கை அரச வானொலி செய்தியிலும், ரூபவாகினியிலும் வெளியான செய்திகளில் 'விமான ஓடுபாதையும், விமானமும் புலிகளின் மோட்டார் தாக்குதல்களால் சேதமாக்கப்பட்டன' என்று கூறப்பட்டது.

இவ்வாறு கூறப்பட்ட புலிகள் தங்களது தாக்குதல் நிலைக்கும், இலக்குக்கும் இடையேயான தூரம், மோட்டாரை நிலைப்படுத்த வேண்டிய இடம் என்பவற்றை உறுதிப்படுத்தவதற்கு உதவியதாகவே முடிந்தது. என்றும் அந்த வார இதழ் தெரிவித்துள்ளது.

தலைநகரில் மிக மிகப் பிரபல புள்ளியொருவரின் இல்லத்தினருகே உள்ள உயரமான கட்டடத்தின் உச்சியில் விமான எதிர்ப்புத் துப்பாக்கி நிலைப்படுத்தப்பட்ட புகைப்படத்தையும் செய்தியையும் யார் வெளியிட்டதென்று? கேள்வி எழுப்பியுள்ளது. ■

## மேதகு பிரபாகரன்

மாவீரர் தினத்தை முன்னிட்டு பிரபாகரனின் உரை அடங்கிய பிரசுரங்கள் யாழ் குடாநாட்டிலும், கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டன.

அப்பிரசுரத்தின் ஆரம்பத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

"தமிழீழ மாவீரர் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர், மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரை" என குறிப்பிடப்பட்டிருந்தது.

புலிகளின் குரல் வானொலியிலும் அவ்வாறுதான் அறிவிக்கப்பட்டது. நாட்டின் ஜாதிபதியையும் மேதகு என மரியாதையாக குறிப்பிடுவது வழக்கமாகும்.

## யாழில் பொதுத் தொலைபேசி

பொதுத் தொலைபேசி கூண்டுகள் யாழ் நகரில் நிறுவப்பட்டுள்ளன. 01.12.97 முதல் இந்த பொதுத் தொலைபேசிகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

எட்டுப் பொதுத் தொலைபேசிக் கூண்டுகளில் ஒன்று வல்வெட்டித்துறையிலும், ஏனையவை யாழ் நகரிலும் இயங்கும். இவற்றில் நாணயக் குற்றிகளைப் போட்டு இலங்கையின் எப்பாகத்தோடும் தொடர்பு கொள்ள முடியும். வெளிநாட்டு அழைப்புக்கள் பெற இயலாது. ■

## எரி குண்டு வீசியதால் மக்கள் ஓட்டம்!

மட்டக்களப்பு-ஏறாவூர் 5ம் குறிச்சிப் பகுதி மக்களுக்குத் திடீரென ஏற்பட்ட கண் எரிவு, மயக்கம், வாந்தி என்பன கதிகலங்கச் செய்தது. சுமார் 100 மீட்டர் சுற்றளவுக்கு இந்தக் கண் எரிவு இருந்தது. மக்கள் பெரும் பீதி கொண்டு தங்கள் இடங்களை விட்டு நகர ஆரம்பித்தனர். வீதியில் சென்றோரெல்லாம் இந்தக் கண் எரிவுக்கு ஆளானார்கள். வீதிப் பாதுகாப்புக்கு நின்ற படையினருக்கும் இந்தப் பாதிப்பு ஏற்பட்டது.

ஏறாவூர் சோதனைச் சாவடியில் இருந்த பொலிஸார் விசமத்தனமான விளையாட்டாகவே கேஸ் செறிந்த எரி குண்டை வெடிக்க வைத்தனர் என்று தெரிய வந்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் எந்நேரமும் பயந்து சீவிக்கும் மக்களுக்கு வரும் பாதிப்புக்கள் பொலிசாருக்கு விளையாட்டாகத் தெரிகிறது என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இத்தகைய விஷ வாயுக் குண்டுகளைப் சாதாரண நிலமைகளில் பிரயோகிப்பது தடை செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் கடந்த 30.11.97 அன்று மாலை 5.45 அளவில் இடம் பெற்றது. ■

## அமெரிக்காவுக்கும் ஐ.நா.வுக்கும் செய்தி!

## மாவீரர் தினத்தில் மக்கள் ஊர்வலம்!

புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா தடை செய்திருப்பது முறைகேடான செயல் என்று கண்டிக்கும் மக்கள் ஊர்வலமொன்றைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த மாவீரர் வாரத்தில் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு-வாகரையில் புலிகள் இயக்கத்தின் ஏற்பாட்டின் பேரில் பெருந்தொகையான அவ்வூர்ப் பொதுமக்கள் கலந்து கொண்ட அந்த ஊர்வலத்தின் இறுதியில் "புலிகள் இயக்கத்தை அமெரிக்கா பயங்கர வாத அமைப்பாக தடை செய்து முத்திரை குத்தியிருப்பது அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் மேலும் நசுக்கும் செயலாகும். தமிழ் மக்களின் விடு தலைக்காகவும் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்துப் போராடி வரும் ஒரு விடுதலை இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக நாமஞ்சூட்டியிருப்பது தமிழ் மக்களின் உரிமைகளுக்கு இழைக்கும் அநீதி" என்று கூறும் நீண்டதொரு கண்டன அறிக்கை அங்கு வாசிக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கும், ஐ.நா. செயலாளர் கொபி அனானுக்கும் தனித்தனியே அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. இந்த அறிக்கைகளின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊர்வலம் கடந்த 25.11.97 அன்று வாகரையில் இடம் பெற்றது. ■

## அம்பாறையில் தமிழ், முஸ்லிம் அகதிகள்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்கள் அண்மைக் காலமாக தாக்குதல் நிமித்தம் குடிபெயர்ந்து வருகின்றன.

23.09.97ல் 4ம் கொலனி (தமிழ்) 396 குடும்பங்கள் இடம் பெயர்ந்து சேனைக் குடியிருப்பு கணேசவித்தியாலயத்தில் 2 1/2 மாதகாலமாக தங்கியுள்ளனர்.

27.10.97ல் 11ம் கொலனி (தமிழ்) 246 குடும் பங்கள் இடம் பெயர்ந்து இறாணமடு இந்து வித்தியாலயத்தில் அகதிகளாகவுள்ளனர்.

14.11.97ல் இடம்பெயர்ந்த கென்ரல்காம் பகுதியைச் சேர்ந்த 278 முஸ்லிம் குடும்பங்கள் அங்குள்ள முஸ்லிம் வித்தியாலயத்தில் அகதிகளாகவுள்ளனர்

மொத்தத்தில் சுமார் 1000 குடும்பங்கள் இந்த மாரிமழை அடைகாலத்தில் நுளம்புத் தொல்லைக்கு மத்தியில் காலத்தை கடத்துகின்றனர். ■



படிப்பகம்

www.padippakam.com

## 'டமில்' பேசும் சிங்கள அறிவிப்பாளர்
### நந்தி உடையார் சந்தி உடையாரானார்

22.11.97ம் திகதி சனிக்கிழமை காலை. எம்.ரி.வி. சன் விஷனில் அருமையான ஓர் இன்ரர்வியூ போய்க் கொண்டிருந்தது. மருத்துவம் சம்பந்தமாக வைத்தியர் ஒருவரைக் கேட்டுக் கொண்டிருந்தனர். கை விரல் தவறி ரிமோட் கொண்ரோலரை அமுக்கிவிட்டது. வந்தது நமது ரூபவாகினி.

அறிவிப்பாளர் ஒருவர் இவ்வார நிகழ்ச்சிகள் பற்றி கூறிக் கொண்டிருந்தார். அவர் சொன்னதன் அர்த்தம் இதுதான்: "எம்முடைய நண்பர் ஒருவருடைய சீ.டி நாடக வெளியீடு; இலங்கைத் தமிழ் மக்கள் வரலாற்றில் முக்கியமான சம்பவம்; இதை முன்பு யாழ்ப்பாணத்தில் சில இளைஞர்கள் செய்துள்ளனர்" என்றார்.

அந்த அறிவிப்பாளரின் உச்சரிப்பும் சொன்ன சொல் அடுக்குகளும் சிரிப்பானதாயிருந்தாலும் பிற மொழிக்காரர் என்பதால் மன்னிக்கலாம். (மன்னிப்போம்) அதை விடச் சிரிப்பு இதுதான் - சீ.டியில் வெளிவந்த நாடகத்தின் பெயரை திருப்பித் திருப்பி. 'சந்தி உடையார்'- 'சந்தி உடையார்' என்றார். அவர் சொன்னது அருணா செல்லத்துரையின் 'நந்தி உடையார்' என்பதை விடயம் தெரிந்தவர்கள் அறிவார்கள்.

தமிழ் மக்கள் இன்று சந்தி உடையார் தான். அதை ரூபவாகினி இவர்கள் மூலமாகவா செய்ய வேண்டும்? இவர் போன்றவர்களுக்கு 'நாமும் தமிழ் பேசுவோம்' போன்ற நிகழ்ச்சிகளில் வாய்ப்புக் கொடுக்கலாமே!

தமிழ் அறிவிப்பாளர்களை சிங்கள மொழியில் அறிவிக்க விடுவார்களா? அப்படி நடந்தால் என்னாகும் தெரியுமா? தமிழ் பேசும் நேயர்கள் மட்டும்தான் இளித்தவாயர்களா?

இந்தக் கும்பல்களை நீக்க என்றுதான் 'பணிப்பாளர்' என்ற பதவியை ஏற்படுத்தினார்களாம். அவருக்கும் இயலாதா?

பணிப்பாளர் சபை உறுப்பினர் இது பற்றிக் கவனிப்பாரா?

சி.ஜீவதயாபரன், வெள்ளவத்தை.

## சான்றிதழ்கள் அனுப்ப தாமதம்!

கடந்த 2.11.97 அன்றைய தினம் அகில இலங்கை ரீதியில் விவேகானந்த சபைச் சைவ சமய பரீட்சை நடை பெற்றது. இன்றைய சூழலிலும் இப் பரீட்சையை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதை எண்ணி பெருமிதம் கொள்ள முடிகிறது.

எனினும் இப் பரீட்சை முடிவுகள் வெறுமனே பாடசாலைக்கு அறிவிக்கப்படுகிறதேயன்றி, உரிய மாணவர்களுக்கு உரிய காலத்தில் சான்றிதழ்களை அனுப்பத் தவறி விடுகிறது. சான்றிதழ் கிடைக்காததினால் அடுத்த வருட பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற விரும்புவதுமில்லை. பெற்றோர் பரீட்சைக் கட்டணம் கொடுக்க முன் வருவதும் குறைவு. சான்றிதழ் கிடைக்காத பரீட்சைகளினால் என்ன பயன்? என கேள்வி எழுப்புகிறார்கள்.

முன்னர் கிறிஸ்தவ பாடசாலைகளில் கற்ற சைவ மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள். தற்போது சில பாடசாலை மாணவர்கள் எழுதுவதில்லை என அறிய முடிகிறது. 96ம் ஆண்டு சான்றிதழ் அனுப்பாமலேயே 97ம் ஆண்டு பரீட்சை நடந்து முடிந்துவிட்டது. இன்று எந்த நேர்முகப் பரீட்சைக்கும் சான்றிதழ்கள் அதுவும் அறநெறிப் பாடச் சான்றிதழ்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

அத்துடன் சான்றிதழ் கிடைக்கப் பெற்றால், அடுத்த பரீட்சையை மாணவர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள்.

எஸ்.ஆர்.சந்ரன்,மெல்புர, சிலாபம்.

## தொடரும் பொருளாதாரத் தடை

80 சதுரகிலோ மீட்டர் பரப்புள்ள மூதூர் கிழக்கு பிரதேசத்தில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். சேனையூர், கட்டை பறிச்சான், கடற்கரைச் சேனை, சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, இளக்கந்தை, பாட்டாளிபுரம், கணேசபுரம் கிரவல் குழி, நல்லூர், பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

மூதூர் நகரம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் மூதூர் நகருக்குச் சென்று அத்தியாவசிய பொருட்களைக் கூட வாங்குவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பொருளாதாரத் தடையை நீக்க திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலும் முடியவில்லையா?

அரசை ஆதரிக்கும் பா.உ.க்கள் மக்களின் துயர் துடைக்க முடியவில்லையெனில், அரசை ஏன் ஆதரிக்கின்றனர்.

அ.அச்சுதன், சேனையூர்-06.

## தரம் இழந்த வைத்தியசாலை

(திருமலை நிருபர்)

கிண்ணியா அரசினர் வைத்தியசாலையின் தரம் நாளுக்குநாள் இறங்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். சுமார் எழுபதினாயிரம் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய வைத்தியசாலை ஆஸ்த்துமா நோயாளியைப் போல் அவதிப்படுவதாக அவ்வூர்ப் பெரியவர்கள் முரசு நிருபரிடம் தெரிவிக்கின்றனர்.

மருந்து பற்றாக்குறை பற்சிகிச்சை உபகரணங்களின்மை, அவசர மின்சாரத் தேவைக்கென ஜெனரேட்டர் இல்லாமை போன்ற ஏராளமான குறைபாடுகள் நிலவுவதோடு, நோயாளிகளும் போதியளவு கவனிக்கப்படுவதில்லையெனத் தெரியவருகிறது.

### புகார்கள் புறக்கணிப்பு

தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு தரமற்றதாக காணப்படுகிறது. இவ்விடயத்தில் நிருவாகத்தினருடன் முரண்பட்டதால், இரு சிற்றூழியர்கள் அண்மையில் இடமாற்றத்துக்குள்ளாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்தியசாலை பற்றிய பல முறைப்பாடுகள் ஊரவர்களால் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தும் எவ்வித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

முரசு இதுபற்றி விசாரித்ததில் பலர் நேரடியாக அலுவலகம் வந்தும் முறையிட்டுள்ளனர் என்பதை பிராந்திய சுகாதார அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் ஏற்றுக் கொண்டதோடு, நடவடிக்கை எடுக்கத் தாமதமாகுவது பற்றி எதுவும் கூற மறுத்துவிட்டார்.

## பாலம் மறுசீரமைப்பு!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-சித்தாண்டிக்குத் தென் மேற்கேயுள்ள மகிடடிக் கட்டுப் பாலம் பல மாதங்களுக்கு முன்னர் படையினரால் வாகனங்கள் செல்ல முடியாதவாறு அழிக்கப்பட்டது. புலிகள் இயக்கத்தினர் சித்தாண்டிப் பகுதியில் அடிக்கடி மேற்கொண்டு வந்த வாகனக் கடத்தலைத் தடுக்கவே படையினர் இவ்விதமான உத்தியைக் கையாண்டனர்.

ஆனால் தற்சமயம், படையினரால் அழிக்கப்பட்ட அப்பாலத்தை புலிகள் இயக்கத்தினர் பொதுமக்களைக் கொண்டு சிரமதானம் செய்வித்து வீதியைச் செப்பனிட்டுள்ளனர்.

மாவீரர் தின ஏற்பாடுகளுக்கான போக்குவரத்துக்காகவே இவ்விதம் பாதை சீரமைக்கப்பட்டதாகப் பொதுமக்கள் கூறுகிறார்கள்.

## வவுனியாவில் தேவை

இன்று வவுனியா மாவட்டத்திலும் வன்னிப் பிராந்தியத்திற்கும் தொழில் நுட்பக் கல்லூரி அவசிய தேவையுள்ளது. வட மாகாணத்தில், யாழ்ப்பாணத்தில் மட்டுமே இக் கல்லூரியுள்ளது.

அண்மையில் இக் கல்லூரி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரியதும் குறிப்பிடத்தக்கது. இப் பயிற்சி நெறிகளுக்கு வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்கள் தமிழ், ஆங்கில மொழி மூலம் பயிற்சியைத் தொடரவுள்ளார்கள்.

ஆனால் தமது வன்னிப் பகுதியிலேயே இப்பயிற்சி நெறிகளை பயிலமுடியாதநிலை கவலைக்குரியது. எனவே இத்தேவையை நிறைவுசெய்ய தமிழ்பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

எஸ்.குகனேஸ்வரன், வவுனியா.

## தோட்டப்பகுதிகளில் ஏமாற்று

மேற்படித் தோட்டத் தொழிலாளர்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தமது மாதாந்த சம்பளத்திலிருந்து ஒரு தொகையைச் சேமித்து வைத்துள்ளனர். இப்பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு சில விஷமிகள் முயலுவதாக தெரியவருகின்றது. மேற்படித் தோட்டங்களுக்கு இலவசமாக மின்னிணைப்பு கம்பங்கள் அரசால் வழங்கப்படவிருப்பதாகவும், அதனால் தொழிலாளர்கள் மின் கம்பத்துக்காக சேமித்த பணத்தை, வீட்டு வயரிங் வேலைகளுக்கு செலவழிக்குமாறும், மேற்படி வேலையைத் தமக்கே தருமாறும் வற்புறுத்துவதோடு, தராவிட்டால் அரசுடன் தொடர்பு கொண்டு, மின்கம்பங்கள் இலவசமாக வழங்கப்படுவதை தடைசெய்யப்போவதாகவும் மிரட்டியுள்ளனர்.

மேற்படி தோட்டங்களுக்கு மின்னிணைப்பு வழங்குமாறு தோட்டப்புற வீடமைப்பு பிரதியமைச்சர், பி.சந்திரசேகரன் ஆசியா அபிவிருத்தி வங்கி நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சிபாரிசு செய்துள்ளார். இவ்வேலைத் திட்டம் டிசம்பர் மாதத்தில் நடை பெறவும் உள்ளது. இச் சந்தர்ப்பத்தில் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றும் இப்பேர்வழிகள் தொடர்பாக உஷாராக இருக்க வேண்டும்.

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவை.

## பிறப்புச் சான்றிதழ் எட்டாத தூரத்தில்!
### முப்பது மைல் கடக்க வேண்டும்

"ஒரு பிறப்புச் சான்றிதழைப் பெற வேண்டுமானாற்கூட, முப்பது மைல் கடந்து கடற்பயணமும் மேற்கொண்டு திருக்கோணமலை நகரம் வர வேண்டிய நிலையிலிருக்கிறார்கள் ஈச்சிலம்பற்றைப் பிரிவு மக்கள். இவ்வாறே ஒவ்வொரு சிறு தேவையைக்கூட பெரும் பிரயத்தனத்தின் மத்தியிலேயே இவர்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

எனவே இவர்கள் நலனைக் கருத்திற் கொண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவான ஈச்சிலம்பற்றைப் பிரதேசத்தை, பிரதேச செயலாளர் பிரிவாகத் தரமுயர்த்தித் தாருங்கள்" இவ்வாறு கோரும் மகஜரொன்றை சமூக சேவையாளர் திரு.எஸ். குணநாயகம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஈச்சிலம்பற்றை இருபத்திரண்டு கிராமங்களை உள்ளடக்கிய ஒரு நிலப்பரப்பு. இங்கே இருபதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பாலானோர் வறியவர்கள். இவர்களது பணமும் நேரமும் சிறு தேவைகளுக்காகக்கூட அளவுக்கதிகமாக விரயமாக வேண்டியிருக்கிறது என்றும் அம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர், மாகாண ஆளுநர், பிரதம செயலர், அரச அதிபர் ஆகியோருக்கும் இதன் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தொல்லை பேசியால் வம்பு!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரபல மக்கள் பிரதிநிதியொருவரின் காரியங்களுக்குப் பொறுப்பானவரின் இல்லத்திற்கு அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, மேற்படி நபரின் உறவினருடன் தகாத வார்த்தைகளால் பேசுவாராம் ஒரு வியாபாரி.

விடயத்தை அறிந்த காரியங்களுக்குப் பொறுப்பானவர், மாவட்ட தொலைத் தொடர்பு அதிகாரியிடம் சொன்னபோது, ஒருநாளிரவு மாட்டிக்கொண்டாராம். சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தமாதிரியாச்சு. அவருக்கு இப்போது அவரது தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

இப்படி அநாமோதைய தொலைபேசி அழைப்பு வருவது இம்மாவட்டத்தில் அதிகரித்துவிட்டது. தனியாகயிருக்கும் பெண்களுடன் தகாத முறையில் பேசுவது, அவர்களைக் கேவலமான வசனங்களால் அவமதிப்பது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி. சுந்தரலிங்கம் ஹரிச்சந்திரா.

மலர்வு - 11.02.1960.

மறைவு - 05.12.1995

எங்கள் இன்ப வீட்டினுக்கோர்
இனிய பண்பு ஒளிவிளக்காய்
வாய்த்த ஹரிச்சந்திரா....நீ
மறைந்து வருடம் இரண்டாச்சே!....

குடும்ப தீபமே....
குலமாமணியே....
உன் குணவியல் நெறிகள்
பசுமையாய் நெஞ்சில் பொங்குதே அம்மா....

எண்ணிப் பார்க்கிறோம்
நீ எத்தனை சிறந்தவள்
எமது உயர்வே உனது மூச்சு
என்று வாழ்ந்த தங்க நிலவு நீ.

தெய்வ பூசை காண்பதற்காக
செல்வன் ரஜனிகாந்துடன் சென்றாய்
பாதையில் காலன் பறித்துக் கொண்டான் உன்னுயிரை
புதுக்குடியிருப்பில் கொலைக்களப்பட்டாய்.
கூட வந்த ரஜனிகாந்த் எங்கே?
யாரிடம் தாயே இவ்வினாக் கேட்பது
சோக வலைக்குள் சிக்கித் தவிக்கும்
துயர நெஞ்சின்... நினைவுகள் கோடி.
உங்கள் ஆன்மா சாந்தியடைய
உளம் உருகிப் பிரார்த்திக்கிறோம்.

என்றும்
உங்கள் நினைவால் வாடும்.
பாசமிகு குடும்ப உறவினர்கள்
(இலங்கை, சுவிஸ், ஜேர்மன், இலண்டன்)

தகவல்: திருமதி அ.சிவப்பிரகாசம்,
ஓய்வு பெற்ற ஆசிரியை காரைதீவு-03.


### சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக" உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரிகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்புகொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு.

SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

### காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218


### திதியும் 1ம் ஆண்டு நினைவஞ்சலியும்




அமரர் தில்லையம்பலம் மார்க்கண்டு (ஏழாலை)

தோற்றம் 09-08-1935 மறைவு 21-11-1996

எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எம் நினைவுகள் என்றும்
உங்களோடு
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவையொட்டி எதிர்வரும் 11.12.97 அன்று கொழும்பு கொச்சிக்கடை தம்பையா சத்திர மண்டபத்தில் மு.ப.11 மணிக்கு நடைபெறும் திதிக் கிரியையிலும், அதன் பின்பு நடைபெறும் அன்னாரின் நினைவு அன்னதான வைபவத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!

இங்ஙனம்:
திரு மதி சரஸ்வதி மார்க்கண்டு (மனைவி)
மகன்மார், மகள்மார்,
மரு மக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: சிறீதரன் (மரு மகன்)


### தீபாவளி சிறப்பிதழ்

காஞ்சி காமகோடி சுவாமிகளின் ஆசீர் வாதத்துடன் கூடிய "கங்கை நீர்" பாக்கெட்டுடனும் இணைப்பிதழும் இலவசம்.

லேடிஸ் ஸ்பெஷல்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

1998 ம் வருட சந்தா ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

தொடர்புகொள்க:

Mrs. SHANTHINI PUSHPARAH
67A, Bankshall street, Colombo-11
Tel: 075-336403 / 343632



### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி,
மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

### மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

ஓட்டமாவடி டிசம்பர் 3,4ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி T.P.065-57345
கல்முனையில் டிசம்பர் 6,7,8,9ம் திகதிகளில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329
மற்றைய நாட்களில் Dr.P.Arumugam
No. 33. Tissa Weerasingam Sq,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் டிசம்பர் 14,15,16ம் திகதிகளில்
வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INN ல் சந்திக்கலாம்.
T.P. 024-22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதிய செல்டல் No.072-609388.




படிப்பகம்

www.padippakam.com

வன்னிப் போர் முனையில் 25.11.97 அன்று நள்ளிரவு பெல் 212 ரக ஹெலி ஒன்று வீழ்ந்தது.

வீழ்ந்த உடனேயே முன்னுக்குப் பின் முரணான செய்திகள் கூறப்பட்டன.

வானில் இருந்து நெருப்புக் கோளமாக ஹெலி வீழ்ந்தது என வானொலியின் விசேஷ செய்திகளில் கூறப்பட்டது.

பின்னர் விபத்துக் காரணமாக ஹெலி வீழ்ந்தது என படைத்தரப்பின் செய்தி கூறியது.

**26.11.97 அன்று காலை புலிகளின் குரல் செய்தியில், ஹெலி தமது விமான எதிர்ப்புப் படையணியால் சுட்டு வீழ்த்தப் பட்டதாக உரிமை கோரப்பட்டது.**

மூன்றாம் கட்ட ஈழப் போரின் பின்னர், அதாவது 1995 ஏப்ரல் மாதத்தின் பின்னர் விமானப்படையினர் 10 விமானங்களையும், 5 ஹெலி கொப்டர்களையும் இழந்துள்ளனர். இவை உத்தியோக பூர்வமாக விமானப் படையினர் ஒப்புக் கொண்ட கணக்கு.

இதுதவிர அநுராதபுரத்தில் பயிற்சியின்போது ஒரு ஆளில்லாத வேவு விமானம் தரையில் மோதி உடைந்தது. மற்றும் தாக்குதல்களில் சேதம் அடைந்து பாவனைக்கு உதவாமல் போனவை, தொழில் நுட்ப கோளாறுகளால் பறக்க இலாயக்கற்று இருப்பவை என மேலும் பல வான்கலங்களின் இழப்பு உத்தியோக பூர்வ கணக்கில் சேரவில்லை.

**1995 ஏப்ரலுக்குப் பின்னர் நாலு விமானங்களும், மூன்று ஹெலிகளும் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.**

இவைதவிர, வன்னிச் சமரில் புலிகளின் நிலைகளை தாக்கச் சென்ற ஹெலிகள் பல புலிகளின் தாக்குதலில் சேதமடைந்தன. எனினும் வீழ்ந்துவிடாமல் காயத்துடன் திரும்பிவிட்டன.

இதேவேளை நீர்கொழும்பில் கடலில் வீழ்ந்த அன்டனோக்கள், மற்றும் காணாமல்போன வேவு விமானம், எம்.ஐ.24 ஹெலி கொப்டர் ஆகியவையும் புலிகளால் தாக்கப்பட்டதாக ஊகங்களும், சந்தேகங்களும் கிளப்பப்பட்டன.

**நாம்தான் செய்தோம் என புலிகள் உரிமை கோரியிருந்தால், நம்பக்கூடியதாகவும் இருந்திருக்கும். ஆனால் புலிகள் உரிமை கோரவில்லை.**

தாம் மேற்கொள்ளாத தாக்குதல்களுக்கு புலிகள் உரிமை கோருவது வழக்கமில்லை என்பதை இவ்விடயத்தில் பல தடவைகள் புலிகள் உறுதிப்படுத்தி விட்டனர்.

19.03.97 அன்று எம்.ஐ.24 ஹெலி ஒன்று முல்லைக் கடல் பகுதிக்கு மேலாக பறந்தபோது காணாமல்போனது. புலிகளால்தான் தாக்கப்பட்டிருக்கலாம் என ஊகங்கள் கிளம்பின.

1996 ஜனவரி 6ம் திகதி வெற்றிலைக்கேணி நோக்கி கடற்பரப்புக்கு மேலாக பறந்து சென்ற எம்.ஐ.17 ஹெலி புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

1997ம் ஆண்டு காங்கேசன்துறை கடற்பரப்புக்கு மேலாகச் சென்ற வை-12 விமானம் விமான எதிர்ப்பு துப்பாக்கியால் (ஏவுகணையால் அல்ல) கடற்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அவற்றுக்கு உடனடியாக புலிகள் உரிமை கோரியும் இருந்தனர்.

எனவே, முல்லைக் கடற்பரப்பில் 19.03.97 அன்று காணாமல்போன எம்.ஐ.24 தம்மால் சுடப்பட்டதாக புலிகள் கூறியிருந்தால் அதனை அனைவரும் நம்பியிருப்பர்.

**அதுபோல, அன்டனோக்கள் மீதும் நீர்கொழும்பு கடற்பகுதியில் படகில் நின்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாக புலிகள் கூறியிருந்தால், படைத்தரப்பின் மறுப்பு எடுபட்டிருக்காது.**

**ஆனால், உரிமை கோர எத்தனையோ சாதகம் இருந்தும், தம்மால் வீழ்த்தப்படாத வான்கலங்களுக்கு புலிகள் உரிமை கோரியதில்லை.**

யுத்த களத்தில் புலிகள் அடிப்படையான சில விடயங்களை கடைப்பிடித்து வருகிறார்கள். பலியான தமது உறுப்பினர்களின் தொகையை உள்ளபடியே வெளியிடுவது, சில சமயம் உடனே தெரிவிக்காவிட்டால்கூட சற்று தாமதித்தேனும் விவரங்களை வெளியிடுகின்றனர். அதுபோல தம்மால் மேற்கொள்ளப்படாத தாக்குதல்களுக்கு புலிகள் உரிமை கோருவதும் இல்லை.

**எனவே, 25.11.97 அன்று பெல் 212 ரக ஹெலி தம்மால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக புலிகள் உரிமை கோரியிருப்பதை சந்தேகிக்க இடமில்லை.**

# ஹெலிக்கு வைத்த பொறி

# வன்னியில் வீழ்ந்த வல்லரசுகளின் வாகனங்கள்

தாக்குதல் எப்படி நடத்தப்பட்டது?

**என்பது பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன.**

மாங்குளத்தில் புலிகளின் கராஜ் ஒன்றையும், டீசல் பரல்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் ஒன்றையும் விமானப்படையினர் தாக்கினர். அத் தாக்குதல்களால் புலிகளுக்கு பலத்த நஷ்டம் ஏற்படவில்லை. ஆனாலும், அத்தாக்குதல் பற்றிய விபரிப்புகளுக்கு பதிலடியாக தாக்குதல் ஒன்றைத் தொடுக்க புலிகள் திட்டமிட்டனர்.

முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதக் கப்பல்மீது விமானப்படை நடத்திய தாக்குதல் பற்றி தொலைக் காட்சியில் படம் காண்பிக்கப்பட்டது.

மறுவாரம் அதே முல்லைக் கடற்பரப்பில் எம்.ஐ.24 ஹெலி புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால் வீழ்ந்தது.

வன்னியில் புலிகளின் முகாம்கள் தாக்கப்பட்டதாக தொலைக்காட்சியில் படம் மூலம் காண்பித்த மறுநாள், புளியங்குளத்தில் பெல் ஹெலி வீழ்ந்தது.

**பாரிய தாக்குதல்கள் தம்மீது நடத்தப்பட்டாலோ, அல்லது மறு தரப்பு வெற்றியைக் கொண்டாடினாலோ, அதே தினத்தில், அல்லது அதே வாரத்தில், அல்லது அதே இடத்தில் என்று பதிலடி நடத்துவது இஸ்ரேலியர்களின் பாணியாகும்.**

அதன்மூலம் தமது தரப்புக்குள் ஓர் உத்வேகத்தையும், உற்சாகத்தையும் இஸ்ரேலியர்கள் பேணிவருகின்றனர்.

இஸ்ரேலின் பக்கம் நியாயம் இல்லாவிட்டாலும், இஸ்ரேலின் இராணுவ வல்லமை என்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது.

புலிகளின் தாக்குதல்களும் இஸ்ரேலிய பாணியில்தான் அமைந்துள்ளன.

**தமது பலியான உறுப்பினர்களின் நினைவாக, எந்த முகாமை தாக்கும் முயற்சியில் பலியானார்களோ அந்த முகாம்மீது தாக்குவது, பலத்த தாக்குதல் பற்றி மறுதரப்பு பிரசாரம் செய்தால், அப்பிரசாரத்தை முறியடிக்க தாம் ஒரு பலத்த தாக்குதல் தொடுப்பது என்பவை புலிகளின் அணுகுமுறைகளாக உள்ளன.**

1995 இல் நவாலி தேவாலயப் பகுதியில் புக்காரா விமானம் குண்டுவீச்சு நடத்தியது. பொதுமக்கள் பலர் பலியாகினர்.

ஒரு வாரத்தில் அதே புக்காரா விமானம் நவாலி அருகே புலிகளின் ஏவுகணையால் வீழ்த்தப்பட்டது.

அதுபோல, 2.11.97 ஆயுதக் கப்பல் மீதான தாக்குதலில் பங்கெடுத்த எம்.ஐ.24 ஹெலி அதே கடற்பரப்பில் 10.11.97 தீப்பிளம்பாக விழுந்தது.

கப்பல் எரிந்த அதே கடற்பரப்பில் ஹெலியும் எரிந்தது.

அதுபோலவே, மாங்குளப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய பிரசாரங்களுக்கு பதிலடி கொடுக்க பொறி வைத்தனர் புலிகள்.

எப்படி பொறிவைத்தனர் என்பதை கூற முன்னர் ஹெலி வீழ்ந்த பகுதி பற்றி முதலில் விளக்கம் தேவை.

வன்னியில் 'ஜயசிக்குறுய்' படையினர் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகள் குடைத்தடி வடிவத்தில் உள்ளன.

நீண்டும் முனைப்பகுதியில் வளைந்த கைப் பிடியுடனும் குடைத்தடி காணப்படும். (நவீன குடைகள் சிலவற்றுக்கு வளைந்த கைப்பிடி இருப்பதில்லை)


வவுனியா-யாழ்சாலையில் புளியங்குளம் வரை நிலைகொண்டுள்ள படையினர் குடைத் தடியின் நீளமான பாகம் போல் உள்ளனர்.

புளியங்குளத்துக்கு கிழக்கே பழைய வாடி, நயினாமடு, பெரியமடு போன்ற பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் குடைத்தடியின் வளைந்த கைப்பிடிபோல உள்ளனர்.

இவ்வாறு வவுனியா-யாழ் சாலையிலும், அதன் கிழக்கே உள்ள பகுதிகளிலுமாக குடைத் தடி வடிவ வியூகமாக படையினர் நிலை கொண்டிருந்தாலும், அப்பகுதிகளில் அவர்கள் தொடர்ச்சியாக காணப்படவில்லை.

வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரையான சாலையில் தொடர்ச்சியாக படைகள் நிலைகொண்டுள்ளன.

**ஆனால் நெடுங்கேணி, நயினாமடு, பழைய வாடி, பெரியமடு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய கைப்பிடி வளைவு போன்ற பிரதேசத்தில் படையினர் தொடர்ச்சியாக நிலைகொள்ளவில்லை.**




குறிப்பிட்ட தூரங்களுக்கு அப்பால் பாதுகாப்பு முகாம்கள் இருக்கின்றன. இடைப்பட்ட பகுதிகளுக்குள் படையினர் பதுங்கி இருப்பர். புலிகளும் வந்து பதுங்கி இருப்பர். எதிர்பாராத மோதல்களும் நிகழ்வதுண்டு. புலிகள் ஊடுருவி தாக்கிவிட்டுச் செல்வதும் உண்டு.

இந்த குடைத்தடி வடிவ வியூகத்தை ஊடறுத்துக் கொண்டு ஓமந்தைவரை சென்றும் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

**மிகக் கிட்டத்தில், கண்ணுக்கெட்டும் தொலைவுகளில் இரு தரப்புமே நிலைகொண்டுள்ள போர்முனைதான் வன்னிப் போர் முனை.**

முந்துகிறவர்கள் வெல்வர். விழிப்பாக இல்லாதவர்கள் வீழ்வர் என்ற ரீதியில்தான் களநிலவரங்களும் இழப்புக்களும் காணப்படுகின்றன.

**பெல் 212 ரக ஹெலி வீழ்ந்தது பழைய வாடியில். புளியங்குளத்தில் இருந்து கிழக்கே கிட்டத்தட்ட நாலு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது பழைய வாடி. அதாவது வளைந்த கைத்தடி வடிவமான வியூகப் பகுதிக்குள் இருக்கிறது.**

பழைய வாடிக்கும் புளியங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் புலிகளின் நடமாட்டங்கள் உள்ளன.

அது தவிர, புளியங்குளம் மற்றும், புளியங்குள கிழக்குப் பகுதிகளில் இரவு நேரத்தில் புலிகள் தாக்கினால், காயமடைந்த படைவீரர்களை ஹெலி மூலமே அநுராதபுரத்திற்கு கொண்டு செல்வது வழக்கம்.

இதனை தமது அரண்களில் இருந்து நன்கு கவனித்தே வந்தனர் புலிகள். எனவே அதனை வைத்தே திட்டமும் தீட்டப்பட்டது. பொறிவைக்கப்பட்டது.

பழையவாடி மற்றும் நயினாமடு பகுதியில் உள்ள படை நிலைகளை நோக்கி 24.11.97 அன்று 10.30 க்கும் 11.30க்கும் இடையே புலிகள் மோட்டார் தாக்குதல்களை தொடுக்க ஆரம்பித்தனர்.

**மோட்டார் தாக்குதல்களின் காரணமாக படையினர் தற்காப்பு நிலை எடுத்துக் கொண்டிருக்க, பழைய வாடிக்கும் நயினாமடுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் புலிகளின் விமான எதிர்ப்பு படையணி ஊடுருவியது. தயார் நிலையில் இருந்தது.**

மோட்டார் தாக்குதலில் யராவது பலியாகி இருந்தாலோ, படு காயமடைந்து இருந்தாலோ அவர்களை ஏற்றிச் செல்ல ஹெலி வரும் என்று எதிர்பார்த்தே விமான எதிர்ப்பு படையணி காத்திருந்தது.

பழைய வாடி படைநிலை மீது நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதல்தான் ஹெலிக்கு வைக்கப்பட்ட பொறி.

புலிகள் எதிர்பார்த்தது போலவே அநுராதபுரத்தில் இருந்து பெல் 212 ரக ஹெலி பழைய வாடி படைநிலை நோக்கி பறந்து வந்தது.

**பழைய வாடி படைநிலையில் புலிகளின் மோட்டார் தாக்குதல் காரணமாக படைவீரர் ஒருவர் பலியாகி இருந்தார். இருவர் படுகாயமடைந்த நிலையில் இருந்தனர்.**

அவர்களை அநுராதபுரம் மருத்துவமனைக்கு எடுத்துவரவே ஹெலி பறந்து சென்றது.

கடும் மழை காரணமாக சீரற்ற காலநிலை அப் பகுதியில் இருந்தது. அதனால் 500 அடி உயரத்தில்தான் ஹெலி பறந்திருக்கிறது.

பழைய வாடி படைநிலையில் இறங்க ஹெலி சற்றுப் பதியும்போது ஏவுகணையை செலுத்துவதுதான் புலிகளின் நோக்கம்.

வழக்கமான உயரத்தில் ஹெலி பறந்து வந்திருந்தால்கூட அன்று தாக்கப்பட்டே இருக்கும் என்று தெரிகிறது.

எனினும் மிகத் தாழ்வாக ஹெலி பறந்து வந்தது புலிகளின் வேலையைச் சுலபமாக்கி இருக்கலாம்.

**பெல் 212 ரக ஹெலியில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை மோப்பம் பிடித்தறிந்து விமானியை எச்சரிக்கும் கருவி உள்ளது. ஆனால் அது நடைமுறையில், அதுவும் காலநிலை சீரற்ற சூழலில் எப்படி பயனளிக்கும் என்பது கேள்விக்குறிதான். ஆனால் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணையோ அல்லது, ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்பக்கூடிய வசதியோ பெல் 212 ரக ஹெலியிலும் கிடையாது.**

ஏவுகணையால் மட்டுமல்ல விமான எதிர்ப்பு துப்பாக்கியால் கூட இவ்வாறான ஹெலிகளை சுட்டு வீழ்த்தலாம்.

500 அடியில் பறக்கும் ஹெலியை ஏ.கே.47 துப்பாக்கியால்கூட சுட்டு வீழ்த்த இயலும்.

ஏ.கே. 47 துப்பாக்கியின் சுடுதூரம் 1500 மீட்டர். இதில் 400 மீட்டர் தூரம்வரை (1312 அடி) கில்லிங் றேஞ்ச் என்றழைக்கப்படும். அதாவது குறிதவறாது இலக்கை எய்தலாம்.

எனவே, ஹெலி தாங்கள் எதிர்பார்த்ததைவிட தாழப் பறந்து வந்ததைக் கண்டதும் ஏவுகணையை விரயமாக்காமல், சாதாரண துப்பாக்கியாலோ, அல்லது விமான எதிர்ப்பு துப்பாக்கியாலோ கூட சுட்டிருக்கவும் கூடும்.

ஹெலியின் பெற்றோல் தாங்கியில் துப்பாக்கிக் குண்டு பட்டிருந்தால் வானிலே எரிந்தபடி ஹெலி வீழ்வதற்கு சாத்தியம் உண்டு.

ஹெலியில் சென்ற நான்குபேரும் எரிந்த நிலையில்தான் மீட்கப்பட்டனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்




அரச வானொலி, அரச பத்திரிகைகள் ஆகியவை ஹெலி தீப்பிளம்பாக விழுந்தது என்றே செய்தி வெளியிட்டன. **பின்னர் ஏனைய பத்திரிகைகள்தான் அவ்வாறு செய்தி வெளியிட்டன, அது தவறான தகவல் என்றும், அதே அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் இன்னொரு செய்தி வெளியிட்டதுதான் வேடிக்கை.**

விமானப்படையினரும் விபத்து எனக் கூறினாலும்கூட, விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளனர். ஹெலியை புலிகள் சுட்டனர் என்று உறுதியாகத் தெரிந்தால்கூட, மாவீரர் தினத்தில் புலிகள் வீழ்த்திவிட்டனர் என்று கருதப்படுவதை படைத்தரப்பு விரும்பாது என்பது தெளிவு.

மாங்குளத்தில் நடந்த வான் தாக்குதல் பற்றிய செய்திகளின் ஆரவாரத்தை ஹெலி வீழ்ந்த செய்தி அமுக்கிவிட்டதும் படைத் தரப்புக்கு பிரசார நஷ்டம்தான்.

அதனால்தான் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அதிகாரி "பிரபாகரனுக்கு அதிஷ்டமும் கைகொடுக்கிறது" என்றார்.

10.11.97 ல் எம்.ஐ.24 ஹெலி புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளானது. அது ரசியத் தயாரிப்பு.

25.11.97ல் வீழ்ந்த பெல் 212 ரக ஹெலி அமெரிக்கத் தயாரிப்பு. பெல்ரக ஹெலியின் பெறுமதி 33 கோடி ரூபா.

**வல்லரசுகளின் வாகனங்கள் வன்னியில் அடுத்தடுத்து வீழ்ந்துள்ளன. எதனால் வீழ்த்தினார்கள், சாம் ரக ஏவுகணையா? ஸ்ரிங்கரா? விமான எதிர்ப்புத் துப்பாக்கியா? படைத்தரப்பால் கண்டறிய முடியவில்லை.**

எனினும் தமக்கு தெரியாது என்று கூறக்கூடாது என்பதற்காக, ஸ்ரிங்கர் ஏவுகணை புலிகளிடம் உள்ளது என கூறுகின்றனர். அதேசமயம் புலிகளின் ஏவுகணை ரகத்தை அறிய வெளிநாட்டு நிபுணர் குழு வந்துள்ளாகவும் தகவல்கள் கூறுகின்றன.


எந்த ரக ஏவுகணை என்று கண்டறிந்தால், அந்த ரக ஏவுகணைக்கு ஈடுகொடுக்கக்கூடிய வான் கலங்களை இனிமேல் கொள்வனவு செய்யலாம். ஆனால் கண்டு பிடிப்பதுதான் பிரச்சனை.

**புலிகளுக்குகூட விமான எதிர்ப்பு படையணியில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் அது. எனவே, கைதான புலிகளிடம் இருந்துகூட அது பற்றிய தகவல்களை பெறுவது கடினம் எனக் கூறப்படுகிறது.**

கடந்த வருட மாவீரர் தினம் போல் அல்லாமல், இந்த வருடம் வடக்கு-கிழக்கில் பரவலான தாக்குதல்கள் புலிகளால் நடத்தப்பட்டது. பிரபாகரனின் மாவீரர் தின உரையில் கடந்த முறையை விட இம்முறை குரலிலும், கருத்திலும் பிடிவாதம் தொனித்ததையும் கவனித்தாக வேண்டும். ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**தலைநகரில் செந்தமிழர்** திரைப்படம் பார்ப்பதும் இனிக் கஷ்டம் தானாக்கும். படம் ஓடிக் கொண்டிருக்கும்போதே திரையரங்குக்குள் புகுந்த பச்சை உடையினர், படம் பார்த்துக் கொண்டிருந்தோரின் அடையாள அட்டைகளை பெற்றுக்கொண்டனராம். "படம் முடிய வாருங்கோ வெளியே நிற்போம்" எண்டனராம். அடையாள அட்டையை கொடுத்துப் போட்டு படம் பார்க்க மனம் வருமோ? படம்தான் மனதில் பதியுமோ? பின்னர் வெளியே வந்தவர்களிடம் அனுமதிச்சீட்டையும் கேட்டனராம். படம் பார்க்கிற குசியில்; அனுமதிச்சீட்டால் காது குடைந்துபோட்டு, கீழே எறிந்துவிட்டு வருவோர் ஜாக்கிரதை. அது சரியுங்கோ, திரையரங்கிலும் 'ராக்கிங்'கோ?

**தந்தை செல்வா** சிலை திரைநீக்க விழாவில் சிவத்தாரும் கலந்து கொண்டு பேசினவர். "செல்வா மெல்லிய தோற்றமுள்ளவர். அழகில்லாதவர் என்று அவரது எதிரிகள் கிண்டல் செய்தனர்" எனக் கூறியுள்ளார் சிவத்தார். அந்த எதிரிகள் வேறு யாருமில்லை, அந்தக் காலத்தில் செல்வாவின் எதிரணியில் இருந்த சிவத்தாரும் அதில் அடக்கம். செல்வா அழகில்லை எண்டு தெளிவான பார்வை உள்ள வேறு யாரும் சொல்லியிருக்க முடியாதுங்கோ. அதென்னவோ தெரியேல்லை, அந்தக் காலத்தில் இருந்தே சிவத்தாருக்கு எதிலுமே தெளிவான பார்வை இல்லைப்போல கிடக்கு.

**இலங்கை வானொலி** செய்தி அறிக்கையை 26.11.97 அன்று இரவு கேட்டனியளோ? ஹா ஹா ஹா எண்டு சிரிக்காத குறையாக செய்தி சொல்லப்பட்டது. ரெண்டு எழுத்தாருக்கு நினைவு நாள் அனுஷ்டிக்க இயலாமல் போச்சு. தலைவரும் இந்த முறை உரையாற்றவில்லை. எல்லாம் அவுட் எண்டமாதிரி சொல்லித் தள்ளிப்போட்டினம். கடந்த ஆண்டும் 27ம் திகதிதான் ரெண்டு எழுத்துத் தலைவர் உரையாற்றியவர் எண்ட விஷயம்கூட தெரியாமல், ஏன் அவசரப் பொய் சொன்னவை? பிறகு முகத்தை எங்கே கொண்டு போய்வைச்சவையோ? இப்ப சொல்லுங்கோ, அரசாங்கத்துக்கு கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுப்பது யார்?

**தலைநகரில் இருந்து** யாழ் செல்ல விண்ணப்பித்தால் எத்தனை இழுபறி? எத்தனை பிடுங்குப்பாடு? ஏன்? என்று காரணம் கேட்டால், ரெண்டு எழுத்தார் போய்விடக்கூடாதல்லோ எண்டு விளக்கம். இது பற்றி முன்னரும் எழுதியிருந்தனான். ரெண்டு எழுத்தாரின் தலைவரது உரை அடங்கிய பிரசுரங்கள் கட்டுக் கட்டாக யாழ்ப்பாணத்திற்குள் புகுந்திருக்கு. வீடு வீடாக கடுகதி வேக விநியோகமாம். எந்த விமானத்திலை கொண்டு போனவையாம்? சங்கதி தெரியாமல், சனத்தைப் போட்டு பிசைந்து என்ன செய்யிறது?

**பொலிஸ்காரர்கள்** அந்த தமிழ் இளைஞரை விசாரிக்கப் போனார்கள். யாரோ மொட்டைக் கடுதாசி போட்டதுதான் காரணம். "உங்கள் ஆவணங்களை பார்வையிடவேண்டும்" என்றனர். இளைஞர் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். "நான் இப்போது சிகரெட் பிடிக்கிறேன். பிடித்து முடியும்வரை இருங்கள்" எனறார் அலட்சியமாக அந்த இளைஞர். "ஓ.கே" என்று அமைதியோடு இருந்தனர் பொலிஸ்காரர்கள். பின்னர் இளைஞர் தன் ஆவணங்களைக் காண்பித்தார். எல்லாமே ஒரிஜினல். "சொறி" சொல்லிவிட்டு பொலிசார் விடைபெற்றனர். என்ன, எந்த நாட்டில் இருக்கிறோம்? எண்டு நினைக்கிறியளோ? சரிதான், இது நடந்தது ஜெர்மனியில்!

**கடவுச் சீட்டு** அலுவலகம் சென்று செந்தமிழில் இயம்பினால் பதில் சொல்ல ஆளில்லை. போய்வந்த மனிதர் ஒருத்தர் என்னிடம் சொன்னார், "செந்தமிழும் அரச மொழி எண்டு சொன்னால் உம்மைத் தொலைச்சுப்போடுவேன்" "நான் ஏன் சொல்லப்போகிறேன்? மொழி அமுலாக்கல் உத்தரவை பாராட்டி வழிமொழிந்த ஆட்களிடம் போய்ச் சொல்லும்" என்றேன்.

**தலைநகர சோதனை** அரண்கள் சிலவற்றில் நிற்போர் தமிழ்க் கடைகளில் இருந்து உணவு மற்றும் சிற்றுண்டிகள் தாம் இருக்குமிடம்தேடி வரவேணும் எண்டு உத்தரவு போட்டிருக்கினமாம். கொண்டுபோய் ஈசியாகக் கொடுத்தாலும், ஓசிதானாம்!

**யாழ் குடாநாட்டில்** நல்லூரில் காக்கி உடையினர் இருவர் கொல்லப்பட்டனர். பெண் ரெண்டு எழுத்தார்தான் சம்பந்தப்பட்டவை எண்டு ஒரு தகவல் கூறுகிறது. யாழ் நிலவரம் வரவர சூடாகும் என்பதற்கான சகல அறிகுறிகளும் தெரியுதாம்.

**இந்த வாரம் அரேபியப் பழமொழி.**

**"புத்திசாலியை**
**ஆற்றில் தள்ளிவிட்டாலும்**
**பெரிய மீனுடன்**
**வெளியே வருவான்!"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

159

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அமிருக்கு வைத்த குறி

அமிர்தலிங்கத்தை தீர்த்துக்கட்ட மூன்று பேரை பிரபாகரன் தெரிவு செய்தார்.

ஒருவர் விசு. புலிகள் இயக்க உளவுப் பிரிவுப் பொறுப்பாளர். சொந்தப் பெயர் இராசையா அரவிந்தராம். சொந்த இடம் நெல்லியடி.

இன்னொருவர் அலோசியஸ். இவர் பிரபாகரனுக்கு நம்பிக்கையானவர். பிரபாவின் மெய்க்காவலர்களில் ஒருவராக இருந்தவர். சொந்த இடம் இளவாலை.

மூன்றாமவரின் பெயர் சிவகுமார். புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவின் மெய்க்காவலர்தான் சிவகுமார். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்.

அமிர்தலிங்கத்தாரை தீர்த்துக்கட்ட நாள் குறித்தபோது, அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் பல கட்டங்களை தாண்டியிருந்தன.

புலிகள் இயக்க பிரதித் தலைவர் மாத்தையா பேச்சில் கலந்து கொள்ள தொடங்கியதுடன், புலிகளின் பிரதிநிதிக் குழுவுக்கும் தலைமை தாங்கினார்.

புலிகளின் பிரதிநிதிகள் குழுவில் இருந்த பலருக்கே அமிர்தலிங்கத்தை தீர்த்துக் கட்டப்போகும் செய்தி தெரியாது.

**எனினும், 1977ம் ஆண்டு தமிழ் மக்களிடம் தமிழீழத் தனியரசை அமைப்பதற்காக பெற்ற ஆணையை கைவிட்டு துரோகம் செய்தமைக்காக புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பட்டியலில் முதல் பெயராக இருந்தது அமிர்தலிங்கத்தின் பெயர்தான்.**

அது அனைவரும் அறிந்ததுதான். ஆனால், இரகசியம் காத்தலில் குறியாக உள்ள பிரபாகரன், அமுதரை தீர்த்துக் கட்ட நாள் குறிக்கப்பட்டதை யாரிடமும் கூறவில்லை.

பிரபா, மாத்தையா தவிர, சம்பந்தப்பட இருந்த மூவருக்கு மட்டும்தான் அது தெரிந்திருந்தது.

## காரணம் என்ன?

கூட்டணியில் பல தலைவர்கள் இருந்தும் அமிர்தலிங்கத்தை மட்டும் முதல் இலக்காக கொள்ள காரணம் இருந்தது.

**தமிழீழ முதல்வர் என்று அழைக்கப்பட்டவர் அமிர்தலிங்கம். விடுதலையைப் பெற ஆயுதம் ஏந்துவதும் அவசியம் என்ற எண்ணத்தை தன் எழுச்சியான உரைகளால் ஏற்படுத்திய தளபதியும் அவர்தான்.**

1977ம் ஆண்டு தமிழீழம் அமைக்கும் முடிவுக்கான கருத்துக் கணிப்பில் கூட்டணியினர் அமோக வெற்றி பெற்றனர்.

அதன்பின்னர் பாரிய இனக் கலவரம் நடைபெற்றது. "அரச படைகள் தமிழருக்கு பாதுகாப்பளிக்கத் தவறினால், இந்த நாட்டில் தமிழரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையானால், தங்கள் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை தமிழர்களே செய்து கொள்ள வேண்டி ஏற்படும்" என்று அமுதர் பேசினார்.

பிரபாகரன், உமாமகேஸ்வரன் போன்றோருடன் பிரியமாக இருந்ததுடன், அவர்களைத் தட்டிக் கொடுத்தும் வந்தவர் தளபதி அமிர்தலிங்கம்.

தந்தை செல்வா இறந்தபோது இளைஞர்கள் உட்பட தமிழ்பேசும் மக்கள் அனைவருமே துயருற்றனர்.

அத் துயர் மத்தியிலும் புதிய நம்பிக்கை ஒன்றும் துளிர்விடவே செய்தது.

**அந்த நம்பிக்கை என்ன தெரியுமா? "தந்தைக்குப் பின்னர் தளபதிதானே தலைவர். இனியென்ன ஆயுதப் போராட்டத்துக்கு அமுதர்தான் தளபதி. வீறு கொண்டெழப்போகிறது விடுதலை இயக்கம்" என்று நம்பினர் இளைஞர்கள்.**

அமுதரும் அதற்கு ஏற்பத்தான் பேசிக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. வண்ணை ஆனந்தன் பொலிஸாரை 'நாய்கள்' என்று திட்டிக் கொண்டிருந்தார். "உங்கள் கையில் இருப்பது ஒருநாள் எங்கள் கையில் இருக்கும்" என்று தன் வழக்கமான முழக்கத்தை எழுப்பிக் கொண்டிருந்தார்.

அமுதர் தன் வழக்கமான புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர் அமுதர் பேச எழுந்தார். கேள்விகள் தாள்களில் எழுதிக் கொடுக்கப்பட்டன.

இத் தொடரை எழுதும் அடியேனும் ஒரு கேள்வி எழுதிக் கொடுத்தேன்.

"காந்தியப் பாதையில் தமிழீழம் கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. கிடைக்காவிட்டால் என்ன செய்வீர்கள்?"

கேள்வியை வாசித்துக் காட்டிவிட்டு அமுதர் பதிலளித்தார்: "தமிழீழத்தை அடைய அகிம்சைப் பாதையில் செல்ல முடியவில்லை என்றால் அதற்கு மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறோம். அதனை இங்கே வெளியிடுவது சரியாக இருக்காது" அமிர் குரலில் கணீரென்று வந்தது பதில்.

அகிம்சைப் பாதை தோல்வி கண்டால் மாற்றுத்திட்டம் என்பது ஆயுதப் போராட்டம்தான் என்பது சொல்லித்தானா தெரியவேண்டும். பதிலை கேட்ட எங்களுக்கு பரம திருப்தி. தளபதி என்றால் தளபதிதான் எனப்பெருமிதம்.

எண்ணற்ற இளைஞர்களின் அளவற்ற பாசத்தை அமுதர் பெறக் காரணம் அவர் காந்தியம் பற்றிப் பேசியதால் அல்ல.

அன்று அமுதரின் நிழலில் குளிர்காய்ந்தவர்களும், கணக்கில் எடுக்கப்படாதவர்களும் தான் இன்று கூட்டணியின் தலைவர்களாக பாத்திரம் ஏற்று பவனி வருகிறார்கள். இவர்கள்தான் 'நாங்கள் காந்தியவாதிகள்' என மனசறிந்து பொய் கூறுகிறார்கள்.

இதே கூற்றை அமுதரும் பிற்காலத்தில் கூறினார். அன்றுதான் இளைஞர்களின் மனங்களில் இருந்து அவர் சரிந்து விழுந்தார்.

"சில ஆயுதங்களை வைத்துக் கொண்டு தமிழீழம் பெறலாம் என நினைக்கக்கூடாது. இளைஞர்கள் ஆயுதங்களை கைவிட வேண்டும்" என்றார். அப்போது அவர் எதிர்க்கட்சி முதல்வர்.

## அழைப்பு

அமுதரை சுற்றி இருக்கும் சிவசிதம்பரம் போன்ற வயதான தலைவர்கள்தான் அவரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது.

'இளைஞர் குரல்' என்றொரு பத்திரிகையில், "அமிர் அண்ணா! உங்களைச் சுற்றியிருக்கும் சுவர்களைக் கடந்து வாருங்கள்! எங்களுக்கு தலைமை தாருங்கள்!" என உருக்கமாக அழைப்பும் விடுக்கப்பட்டது.

சிவசிதம்பரம் போன்றவர்கள் அமிரின் நிழலில் நின்றதால்தான் இளைஞர்களால் மதிக்கப்பட்டார்கள். தலைவர்கள் என்ற ஸ்தானத்தில் வைத்தோ, இவர்கள் தமிழீழம் பெறப் போராடக் கூடியவர்கள் என்றோ யாரும் அவர்களை நம்பியதில்லை.



யோகேஸ்வரன்

அதிலும் சிவசிதம்பரம் பற்றி இருந்த அபிப்பிராயம், முதுகெலும்பு இல்லாதவர் என்பதுதான். யாரையாவது சார்ந்துதான் நிற்பார். (தற்போதும் கூட நீலன், சம்பந்தன் போன்றோரை சார்ந்து நின்று 'அவர்கள் சொற்படி தீர்வுப் பொதியை ஆதரித்துப் பேசிவருகிறார்.)

இதுபற்றி எழுதுவதானால் விரிவாக எழுதலாம். இங்கே இடம் இல்லை.

அமிர் மீதே சகல நம்பிக்கைகளும் இருந்தமையால், அமிர் பின்னர் பாராளுமன்ற மாயைகளில் சிக்கிக் கொண்டபோது, இளைஞர்களின் கோபமும் அவர்மீதுதான் பிரதானமாகத் திரும்பியது.

புலிகள் முதல் இலக்காக அமிர்தலிங்கத்தை தெரிவு செய்தமைக்கும் அதுதான் காரணமாக அமைந்தது.

## சந்திப்பு

கூட்டணிக்குள் அமிர்தலிங்கத்துக்கு அடுத்ததாக இளைஞர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் யோகேஸ்வரன். பழக இனியவர். பண்பாளர். இளைஞர் பேரவைத் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்ட காலகட்டத்தில், இளைஞர் பேரவை பணிகளில் முன்னின்றவர்.

கூட்டணிக்குள் ஆயுதப் போராட்ட இயக்கங்களுடன் தொடர்பாக இருந்தவர்களில் அமிர்தரும், யோகேசும்தான் முக்கியமானவர்கள்.

இத்தனைக்கும் பிரபாகரன் குட்டிமணி, தங்கத்துரை என்று பலர் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். சிவசிதம்பரமும் வடமராட்சிதான். ஆனால் சிவசிதம்பரத்தை நம்பி அவருடன் யாரும் தொடர்பு வைத்ததில்லை.

ஆயினும் சிவசிதம்பரம் இணைச் செயலதிபர் என்ற முறையில் கூட்டணிக்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளை அறிந்தே இருந்தார். இப்போது மறுக்கக்கூடும்.

யோகேஸ்வரன் புலிகளுடனும், பிரபாகரனுடனும் அனுதாபமாக இருந்தார். அமுதர்மீதும் மட்டற்ற விசுவாசம் இருந்தது.

அந்த விசுவாசம் மட்டும் இல்லையென்றால் யோகேஸ்வரன் புலிகளுடன் இரண்டறக் கலந்திருந்தாலும் ஆச்சரியமில்லை.

யோகேஸ்வரனை தீர்த்துக் கட்டுவது என புலிகள் திட்டமிடவும் இல்லை. அமுதருடன் சிவசிதம்பரமோ அல்லது வேறு யாருமோ வந்தால், சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களையும் போட்டுவிடலாம் என்பதுதான் உத்தரவு.

## வந்தனர்

13.7.89 அன்று மாலை 6.30 மணியளவில் அமுதரைச் சந்திக்கலாம் என விசுவுக்கு தகவல் தந்தார் யோகேஸ்வரன்.

அப்போது கொழும்பு புல்லர்ஸ் வீதியில் தான் கூட்டணியின் செயலகம் இருந்தது. அமிர், யோகேஸ், மாவை சேனாதிராஜா ஆகியோர் அங்குதான் தங்கியிருந்தனர்.

"இன்று அலோசியஸ் ஆட்கள் சந்திக்க வருகிறார்கள். சிற்றுண்டியும், குளிர்பானமும் தயாராக இருக்கட்டும்" என்று தன் மனைவியிடம் சொல்லி வைத்திருந்தார் யோகேஸ்.

**அதேபோல, அமிர்தலிங்கத்தின் மெய்க்காவலர்களிடமும், "அலோசியஸ் ஆட்கள் வருவார்கள். அவர்களைச் சோதனையிட வேண்டாம்" எனக் கூறினார் யோகேஸ்வரன்.**

# புல்லர்ஸ் வீதி இல்லத்தில் வேட்டுக்கள்

சோதனையிடுவது அவர்களைச் சந்தேகிப்பது போலாகிவிடும் எனக் கருதியே அவ்வாறு கூறியிருந்தார்.

நேரம் மாலை 6.30 மணி.

புல்லர்ஸ் வீதி கூட்டணிச் செயலக கேட் அருகே ஒரு டாக்ஸி வந்து நின்றது.

அதில் இருந்து மூன்று இளைஞர்கள் இறங்கினார்கள். அவர்களது இடுப்பில் பிஸ்டலும், ரிவோல்வரும் இருந்தன.

கேட் அருகே வந்த அலோசியஸை காவலர்கள் விசாரிப்பதற்கு இடையே, வீட்டின் மேல்மாடியில் நின்ற யோகேஸ்வரன் அவர்களைக் கண்டுவிட்டார்.

"அவர்களை மேலே விடுங்கள்" என்று காவலர்களுக்கு கட்டளையிட்டார் யோகேஸ்.

கேட் திறந்தது. மூவரும் உள்ளே நுழைந்தனர்.

அவர்களை மாடியில் அமரச் செய்துவிட்டு, கீழே அறையில் இருந்த அமிர்தலிங்கத்தையும், சிவசிதம்பரத்தையும் அழைத்தார் யோகேஸ்வரன்.

அவர்கள் கீழ் அறையில் தொலைக்காட்சியில் செய்திகள் கேட்டுக் கொண்டிருந்தனர். அமிரின் பாரியாரான மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் அங்கு இருந்தார்.

அவரையும் வருமாறு அமிர் அழைத்தார். வெளிநாட்டில் உள்ள தனது மகனிடம் இருந்து தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தார் மங்கையர்க்கரசி.

"ஃபோன் வந்த பின் வருகிறேன். நீங்கள் போங்கள்" என்றார் மங்கையக்கரசி. போகத்தான் போகிறார் என்பது அப்போது அவருக்கு தெரியாது. 'தவம்' என்றுதான் மனைவியை அழைப்பார் அமிர் என்று ஞாபகம்.

அமிர், சிவா ஆகியோர் மேலே சென்றதும், யோகேசும் அவர்களுடன் அமர்ந்தார்.

வந்தவர்கள் மூன்று பேர். கூட்டணியின் தரப்பிலும் மூன்று பேர்.

சுமுகமாகப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தன. இடைக்கிடையே யோகேஸ் வாய்விட்டுச் சிரித்த சத்தம்கூட அவரது மனைவிக்குக் கேட்டது.

## வேட்டொலிகள்

"குடிக்க என்ன வேண்டும்!" என்று கேட்டார் யோகேஸ். வந்தவர்கள் பிஸ்கெட்டுக்களை சாப்பிட்டு கொண்டிருந்தனர்.

"இரண்டு பேருக்கு கூல், ஒருவருக்கு ரீ" என்றனர். மனைவியிடம் கூறினார் யோகேஸ். வந்தது அருந்தினர்.

**பேச்சின் இடையே "எங்கள் பாதையில் நாங்கள் போகிறோம். உங்கள் பாதையில் நீங்கள் போகிறீர்கள். யாரும் யார் பாதையிலும் குறுக்கிடாமல் இருந்தால் சரிதான்" என அமிர்தலிங்கம் கூறினாராம்.**



அமிர்தலிங்கம்

**"இந்தியப் படையினரின் வெளியேற்றத்தை கோரி அறிக்கை விடலாம்தானே" என்று கேட்டனர். "உடனடியாக படை வெளியேறத் தேவையில்லை" என்ற தனது நிலைப்பாட்டை அமிர் கூறினார்.**

அச்சமயம் சிவகுமார் எழுந்து "பாத்ரூம் எங்கே?" என்று கேட்டுவிட்டு கீழே சென்றார். கீழே இறங்கி மாடிப்படியருகே நின்று கொண்டார்.

நேரம் 7.15 மணி. அமிரின் அருகில் இருந்த ரீப்போவில் கிளாசை வைத்த விசு, நிதானமாக தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவினார்.

அமிருக்கும், யோகேஸ், சிவா ஆகியோருக்கும் தாங்கள் காண்பது கனவா, நனவா என்று சுதாகரிக்கவே நேரம் இல்லை.

விசுவின் பிஸ்டல் அமிரின் தலையை குறிவைத்துச் சுட்டது. நாற்காலியில் அமர்ந்திருந்த நிலையிலேயே சாய்ந்தார் அமிர்.

நிலையை உணர்ந்து சிவசிதம்பரம் பயத்தில் எழ, அவரை நோக்கி சுட்டார் அலோசியஸ். சிவா நிலத்தில் வீழ்ந்தார்.

அதேநேரம் அமிரை சுடாமல் தடுப்பதற்காக, யோகேஸ் குறுக்கே பாய்ந்து நிற்க, அமிரை நோக்கி சிவகுமார் சுட்ட ரவைகள் யோகேஸ்வரனின் மார்புப் பகுதியில் பாய்ந்தன.

உள்ளே துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதும் தன் அறையில் இருந்த மாவை சேனாதிராஜா வெளியே ஓடிவர முயன்றார். அவரது மனைவி பயத்தில் தடுத்துவிட்டார்.

**வேட்டுச் சத்தம் கேட்டதும் அமிரின் மெய்க்காவலர்கள் அச்சமின்றி துரிதமாகச் செயற்பட்டனர்.**

சுட்டுவிட்டு மாடிப்படி வழியாகத்தான் வரவேண்டும் என்று அதன் அருகே நிலை எடுத்து நின்றனர்.



விசு

வேட்டுக்களைத் தீர்த்தபடி மாடிப்படியில் ஓட்டமாக இறங்கிய விசு சுடப்பட்டார்.

அதனை அடுத்து வந்த அலோசியஸ் மீதும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

அதே நேரம் கீழே நின்ற சிவகுமார் பாய்ந்து கேட் வரை தப்பிச் சென்றுவிட்டார்.

மாடியில் நின்ற கந்தசாமி என்ற சப் இன்ஸ்பெக்டர் கேட் அருகே சென்ற சிவகுமாரை மேல் இருந்தே குறிவைத்துச் சுட்டதில், சிவகுமாரும் விழுந்தார்.

அமிருக்கு மெய்க் காவலராக இருந்த சிங்கள பொலிஸ்காரான நிசங்காதான் விசுவைச் சுட்டார். அமிர்மீது அந்தப் பொலிஸ்காரருக்கு தனிப்பட்ட ரீதியிலும் பிடிப்பு இருந்தது.

சிவசிதம்பரம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தீவிர சிகிச்சை காரணமாக உயிர் பிழைத்தார்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் சுடப்பட்ட செய்தி ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எட்டியபோது, அவர் முன்பாக மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், யோகி, திலகர் உட்பட புலிகளின் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தனர்.

**பிரேமதாசாவுக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சு நடந்து கொண்டிருந்த நேரம்தான் அமிர் கொலை நடந்து முடிந்தது.**

தனக்கு கிடைத்த செய்தியை பிரேமதாசா புலிகளின் பிரதிநிதிகளுக்கு கூறினார்.

பிரேமாவுக்கும் அது எதிர்பாராத அதிர்ச்சிச் செய்திதான்.

உடனடியாக புலிகளின் பிரதிநிதிகள் ஹில்டன் ஹோட்டலுக்கு திரும்பினார்கள்.

அமிர் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று செய்திகள் சுடச் சுட வெளியாகின.

புலிகள் அதனை மறுத்தனர். ஆனால் அமிர், யோகேஸ் கொலையில் பங்கு கொண்டு பலியானவர்கள் மூவரும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்பது மறைக்க முடியாத விடயமாக இருந்தது.

பலியான மூவரையும் பலருக்குத் தெரிந்திருந்தது.

அதற்கும் புலிகளிடம் பதில் தயாராக இருந்தது.

"அவர்கள் முன்பு எமது இயக்கத்தில் இருந்தவர்கள்தான். பின்னர் விலகிச் சென்று விட்டனர்" என்று கூறிவிட்டார்கள்.

**ஆனால், ஒருவர் மட்டும் அப்போது வாய் திறந்திருந்தால் நடந்தது என்ன, நடந்த சந்திப்பின் நோக்கம் என்ன போன்ற விபரங்கள் வெளிப்பட்டிருக்கும்.**

ஆனால், தலை தப்பியது தம்பிரான் புண்ணியம், வம்பை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று நினைத்தார் அவர்.

கடைசிவரை அந்த கண்கண்ட சாட்சி உண்மையைச் சொல்லவே இல்லை.

**அவர்தான் மு.சிவசிதம்பரம்.**

முதுகெலும்பு இல்லாதவர் என்று இளைஞர்கள் முன்னர் அவரைப் பற்றி கருதியது நூற்றுக்கு நூறு உண்மையானது.

ஆனாலும் இன்றுவரை உள்மனதில் புலிகள் பற்றிய கோபம் சிவசிதம்பரத்துக்கு இருக்கிறது. மறைமுகமாக பழிவாங்கி வருகிறார்.

வெளிநாட்டு பிரதிநிதிகளிடம் புலிகளை பலவீனமாக்க வேண்டும் என்று அவர் கூறிவருவதும், வெளிப்படையாக மட்டும் புலிகளை தாஜா பண்ணிப் பேசுவதும் சமீபகால நிகழ்வுகள்.

பிரேமதாசாவுடன் பேச்சு நடைபெற்ற தருணம் என்பதால், புலிகள் மறுப்பு விட்டனர்.

ஆயினும் பிரபாகரன் தன் வாயல் மறுத்ததில்லை.

**அரசுடன் பேச்சு முறிந்தபின்னர் விசுவுக்கு புலிகள் அஞ்சலி வெளியிட்டனர். மேஜர் தரம் வழங்கி விசு கௌரவிக்கப்பட்டார்.**

1990 இல்தான் புலிகள் மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஆரம்பித்தனர்.

அந்த மாவீரர் தின உரையில் பிரபாகரன் கூறியது இது:

"தமிழீழத்தை கைவிட்டால் அமிர்தலிங்கத்துக்கு மட்டுமல்ல, நாளை பிரபாகரனுக்கும் மரணதண்டனைதான் வழங்கப்பட வேண்டும்."

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# அடிப்படைக் கோட்பாடுகளும் அழுத்தம் கொடுக்கப்பட்ட அம்சங்களும்

இந்த வருட மாவீரர் தினமும், மாவீரர் தினத்தில் பிரபாகரன் ஆற்றும் உரையும் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

27.11.97 அன்று மாலை 5.11க்கு (பழைய நேரப்படி) புலிகளின் குரல் வானொலியில் பிரபாகரனின் உரை ஆரம்பமானது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையை முழுமையாக அறியாமல், அவசரக் குடுக்கைத் தனமாக 'ராய்டர்' செய்தி நிறுவனம் விமர்சனம் வெளியிட்டிருந்தது.

**புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது உரையில் தமிழீழம் என்ற பெயரையே உச்சரிக்கவில்லை எனவும், தமிழர் தேசம் என்றும், தமிழர் தாயகம் என்றும்தான் குறிப்பிட்டார் எனவும் 'ராய்டர்' செய்தி நிறுவனம் ஒரு செய்தி விமர்சனத்தை வெளியிட்டிருந்தது.**

அது மட்டுமல்லாமல், பிரபாகரனின் மாவீரர் தின உரையில் கூறப்பட்ட முக்கிய கருத்துக்கள், அழுத்தம் கொடுக்கப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகள் போன்றவையும் பத்திரிகைகளில் சரிவர இடம்பெற்றிருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகையில் மட்டுமே பிரபாகரனின் முழுமையான உரை அப்படியே பிரசுரமாகி இருந்ததை காணமுடிந்தது.

தலைநகர பத்திரிகைகளில் முழுமை இல்லாமல் வெளியான சில பகுதிகளை கருத்தில் கொண்டே 'ராய்டர்' அவ்வாறான விமர்சனம் செய்திருந்தது.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் 27.11.97 அன்று மாலையிலும், இரவோடு இரவாகவும் பிரபாகரனின் உரை அடங்கிய ஆறுபக்கப் பிரசுரம் வீடு வீடாக விநியோகம் செய்யப்பட்டிருந்தது.

**புலிகளின் குரல் வானொலியில் "என் அன்பிற்கும், மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!" என்று விளித்துத்தான் பிரபாகரன் தனது உரையை ஆரம்பித்தார். உரையை நிறைவு செய்யும்போதும், வழக்கம் போல "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" எனக்கூறியே நிறைவு செய்திருந்தார். உரையின் உள்ளேயும் தமிழீழம் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டே இருந்தது.**

அது மட்டுமல்லாமல், தமிழர் தாயகம், தமிழர் தேசம் என்பதும், தமிழீழம் என்பதும் புலிகளைப் பொறுத்தவரை ஒரே பொருள் குறிப்பவைதான்.

தனது உரையில் பிரபாகரன் அழுத்தம் திருத்தமாகவும், அடிப்படைகளாகவும் கூறியுள்ள விடயங்கள் பின்வருமாறு அமைந்துள்ளனது.

1. திம்பு பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட அடிப்படை நிலைப்பாடுகள்தான் இன்றுவரை புலிகளின் நிலைப்பாடாக உள்ளது.

2. 1977 பொதுத் தேர்தலில் தமிழீழமே ஒரே தீர்வு என்பதனை ஏற்றுக்கொண்டு ஜனநாயக ரீதியாக தமிழீழ மக்கள் வழங்கிய தீர்ப்பை நிறைவேற்றவே புலிகள் போராடி வருகின்றனர்.

3. சிங்கள தேசத்தை ஆளும் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதில்லை.

4. சந்திரிக்காவின் தீர்வுப் பொதி இராணுவத் தீர்வினையும், அதன் விளைவான அழிவுகளையும் உலகின் கண்களில் இருந்து மறைக்கும் நாடகம்.

5. சமாதான வழியில் பேச்சு நடத்தவும், அரசியல் தீர்வு காணவும் புலிகள் தயாராக உள்ளனர். ஆனால் அரசியல் தீர்வு என்பது தமிழ் பேசும் மக்களின் தன்னாட்சி உரிமையை தாயக உரிமையை அங்கீகரிப்பதாக அமைய வேண்டும்.

6. இதுவரைகால ஆட்சிகளில் சந்திரிக்கா ஆட்சியே மிக பாரதூரமானதாக அமைந்துள்ளது.

மேற்கண்ட ஆறு விடயங்களும் மிகவும் அழுத்தம் திருத்தமாக பிரபாகரனின் உரையின் உள்ளடக்கமாக அமைந்திருந்தன.

தீர்வுப்பொதி பற்றி குறிப்பிட்ட போதெல்லாம், "சந்திரிக்காவின் தீர்வுப் பொதி" என்ற பதப்பிரயோகத்தையே பிரபாகரன் பயன்படுத்தியிருந்தார்.

இன்றைய ஜனாதிபதிமீது விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கொண்டுள்ள காட்டமான மனநிலையையே பிரபாகரனின் உரை நன்கு புலப்படுத்தியிருக்கிறது.

1985ம் ஆண்டு திம்புவில் சகல தமிழ் அமைப்புக்களதும் ஒன்றுபட்ட நிலைப்பாடாக நான்கு அடிப்படை கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

**1. வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம்.**

**2. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம்.**

**3. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இவை தவிர நாலாவது நிலைப்பாடு மலையக தமிழ் மக்கள் சம்பந்தப்பட்டதாக அமைந்திருந்தது.**

அடிப்படைக் கோட்பாடுகள் அத்திவாரம் போன்றவையாகும். அவை உறுதியாக இருந்தால்தான் மேற்கொண்டு அதிகாரப் பகிர்வு உட்பட ஏனைய விடயங்கள் பற்றி பேசுவதில் அர்த்தம் இருக்க முடியும். அந்த வகையில்தான் மேற்கண்ட மூன்று நிலைப்பாடுகளும் வடக்கு-கிழக்கு பிரச்சனையின் தீர்வுக்கான அடிப்படைகளாக முன்வைக்கப்பட்டன.

திம்பு பேச்சுவார்த்தைக்கு பின்னர் 12 ஆண்டுகள் சென்றுவிட்டன. அதன் பின்னரே இலங்கை, இந்திய ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் பிரதான குறைபாடாக வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான கருத்துக் கணிப்பே சகல இயக்கங்களாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

**அதன் பின்னர் தற்போது அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகள் எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடமில்லாமல் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு வழிகோலி நிற்கின்றன.**

திம்புவில் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்த இயக்கங்கள் இப்போது ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அரசியல் கட்சிகளாக மாறியுள்ளன.

**இயக்கங்களின் நெருக்கடி காரணமாக திம்புவில் நான்கு அம்சக் கோரிக்கையை ஆதரித்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தற்போது வடக்கு-கிழக்கு பிரிப்புக்கும், அம்பாறை, சேருவில, கந்தளாய், வெலிஓயா போன்ற பாரம்பரிய நிலங்களின் பறிப்புக்கும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.**

ஏனைய தமிழ்க் கட்சிகள் தாம் அதனை எதிர்ப்பதாகக் கூறினாலும், செயலளவில், பிரிப்புக்கான காலச் சூழலை ஏற்படுத்தும் அரசின் உபாயங்களை எதிர்த்துப் போராட முடியாதவையாகவே உள்ளன.

அரசின் தீர்வு யோசனையின் இறுதி நோக்கம் தெட்டத் தெளிவாகத் தெரிந்த பின்னரும், இன்னமும் அரசுக்கு இக் கட்சிகள் வழங்கும் ஆதரவு எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகவே உள்ளது.

தீர்வு யோசனைகளை ஏற்கவில்லை எனவும், தீர்வு யோசனைகளுக்கு எங்கள் மாற்றுக் கருத்தை முன்வைத்துள்ளோம் எனவும் இக் கட்சிகள் கூறிவருவது மக்களை ஏமாற்றுவதாகவே அமைந்திருக்கின்றன.

தீர்வு யோசனையை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு, அந்த தீர்வு யோசனையை முன்வைத்துள்ள அரசுக்கு முண்டுகொடுத்தும் வருகின்றன.

தமிழ் பேசும் மக்களின் தாயகம், தமிழ்த் தேசிய இனம், தேசம் என்ற பதங்கள் எல்லாம் ஏதோ அப்போது தாம் போட்டிருந்த சட்டைகள் போல தமிழ்க் கட்சிகளால் கழற்றி வீசப்பட்டுவிட்டன.

**1987ம் ஆண்டின் பின்னர் கடந்த பத்தாண்டுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சாதனை என்று பட்டியலிட்டால், அக் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றம் சென்றதை மட்டுமே குறிப்பிட முடிகிறது.**



அரசியல் தீர்வு முயற்சிகளை இழுத்தடிப்பதாக ஆட்சியாளர்கள்மீது மட்டும் குற்றம் சாட்ட இயலாது. அரசின் தீர்வு முயற்சிகளில் பங்கெடுப்பதாகவும், மாற்றுயோசனை சொல்லியுள்ளதாகவும் மக்களிடம் கூறிக் கூறியே தமிழ்க் கட்சிகளும் தங்களால் போராட இயலாமையை மூடிமறைத்து வருகின்றன.

அரசியல் அரங்கில் ஜனநாயக ரீதியாகப் போராடவே தெம்பு இல்லாத தமிழ்க் கட்சிகள் திம்பு கோட்பாட்டை பற்றி பேசத் தயங்குவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழு, மற்றும் நாடு தழுவிய விவாதங்கள், எதிர்க்கட்சி மீது பழிபோடுதல் பேயவை தீர்வை இழுத்தடிக்கும் அரசின் உபாயங்களுக்கு உதவிவருகின்றன.

அதே சமயம் தமிழ்க் கட்சிகள் தங்கள் இயலாமையை மூடிமறைத்து, தாங்களும் தமிழ் பேசும் மக்களுக்காக கடுமையாக வாதாடி வருகிறோம் என மார்தட்டிக் கொள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு விவாதங்களும், கண்துடைப்புக்காக தமிழ் கட்சிகளிடம் இருந்து அரசால் பெறப்பட்ட யோசனைகளும் உதவியுள்ளன.

இதுவரை காலத்தில் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களில் உலக அனுதாபத்தை தங்கள் பக்கம் திருப்புவதில் வெற்றி கண்டவர்கள் இன்றைய ஆட்சியாளர்களே.

அதேசமயம் பகிரங்க அரசியல் அரங்கில் மிக மந்தமானதும், மிகவும் இயலாத்தனம் கொண்டவையுமான தமிழ்க் கட்சிகளும் இன்றைய காலகட்டம் போல முன்பு இருந்ததில்லை என்பதும் முக்கிய விடயமாகும்.

தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக வடக்கு-கிழக்கில் அரச நிர்வாகத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கு அன்றிருந்த தலைவர்களால் அமைதிவழியில் போராட முடிந்தது.

இன்று தனிச் சிங்களச் சட்டதைவிட பயங்கரமானதாக, தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை கேள்விக்குள்ளாக்கும் வடக்கு-கிழக்கு பிரிப்பு மற்றும் எல்லை மறுசீரமைப்பு போன்ற திட்டங்கள் விசுவரூபம் எடுத்துள்ளன.

இத் திட்டங்களைக் கொண்ட தீர்வுப் பொதியை உடனே நடைமுறைக்கு கொண்டுவர, தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்போ, அன்றி தமிழ் பேசும் மக்கள் அதிருப்தி கொள்வார்களே என்ற தயக்கமோ ஆட்சியாளர்களுக்கு தடையாக அமையவில்லை.

தமிழ்க் கட்சிகள் முன்வைத்த மாற்று யோசனைகள் எப்போதோ குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டுவிட்டன என்பதை திட்டவட்டமாக அரச தரப்பு தெரிவித்தும் விட்டது.

இந் நிலையில், புலிகளுக்கு இல்லாத அரசியல் சாதகம் ஒன்று ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு உள்ளது.

புலிகள் அரசியல் தீர்வுக்கு வரமாட்டார்கள். ஒத்துழைக்க மாட்டார்கள். அவர்கள்தான் போர் நிறுத்தத்தை முறித்தார்கள் என்று ஆட்சியாளர்கள் தங்களை நியாயப்படுத்தி வருகின்றனர்.

அதன் மூலம் தமிழ் பேசும் தரப்பின் பலத்தை தேயவைத்துவிட்டு, அரை குறைத் தீர்வை முன்வைக்கக்கூடியதாக இராணுவத் தீர்வுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை மட்டும் ஓரம் கட்டும் திட்டம் என்று தமிழ்க்கட்சிகள் இராணுவத்தீர்வு முயற்சிகளை கருதுமானால், அதனைவிட சிறுபிள்ளைத்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

**எனவே, அரசின் தீர்வு யோசனைகளுக்கு தாம் ஒத்துழைத்ததையும், மாற்று யோசனைகள் முன்வைத்து அவை நிராகரிக்கப்பட்டதையும் வெளியுலகின் கவனத்துக்கு தமிழ்க் கட்சிகள் கொண்டு செல்ல வேண்டியவையாக உள்ளன.**

கடந்தகால அரசாங்கங்கள் செய்தது போலவே, இன்றைய அரசாங்கமும் தங்கள் நம்பிக்கைகளை தகர்த்துவிட்டது என்ற உண்மையையே உலகுக்கு சொல்ல தமிழ்க் கட்சிகள் முன்வர வேண்டும்.

தீர்வு யோசனைக்கு தாங்கள் முன்வைத்த திருத்தங்கள் பற்றியோ, தனியாகவும், கூட்டாகவும் முன்வைத்த ஆவணங்கள் பற்றியோ தமிழ் பேசும் மக்களுக்கு இக் கட்சிகள் கூறவேண்டிய அவசியம் இல்லை. அவை வெறும் சுயதம்பட்டங்களாகவே இருக்கும்.

கடந்த ஐம்பதாண்டுகளில் இவ்வாறான சுயதம்பட்டங்கள், அறிக்கைகள், மகஜர்கள், ஆவணங்கள் என்று பலவற்றை தமிழ் பேசும் மக்கள் கண்டுவந்துள்ளனர்.

**எனவே, அரசியல்தீர்வு யோசனைகள் தொடர்பாக இதுவரை தாங்கள் கொடுத்து வந்த ஒத்துழைப்பையும், அந்த ஒத்துழைப்புக்கு பலன் ஏதும் இல்லாமல் போனதையும், தமிழ்பேசும் தரப்புக்கு சாதகமாக உலக அனுதாபத்தை திரட்ட இக் கட்சிகள் பயன்படுத்துவதே விவேகமானதாகும்.**

ஆனால் தமிழ்க் கட்சிகள் அவ்வாறான அரசியல் முன்முயற்சிகளில் ஈடுபடத் தயாராக இல்லை என்பதே புலனாகின்றது.

**கருத்துக் கணிப்பு நடத்தி வடக்கு-கிழக்கை பிரிப்பதில் ஆட்சியாளர்கள் உறுதியாக உள்ள நிலையில், அந்த முடிவை ஜனாதிபதி மறுபரிசீலனை செய்யப் போவது போல கூட்டணியினர் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்து வருகின்றனர்.**

இவையெல்லாம், தங்கள், அரசியல் இயலாமை நிமித்தம் தமிழ்க் கட்சிகள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதோடு தமிழ் மக்களையும் ஏமாற்றுவதாகவே அமைந்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில், தமிழ் பேசும் தரப்பு சார்பாக ஆட்சியாளரின் காய் நகர்த்தல்களை எதிர்கொள்ள பகிரங்க அரசியல் அரங்கில் யாருமற்ற நிலைதான் காணப்படுகிறது.

ஆட்சியாளர்கள் முன்வைக்கும் தந்திரமான கருத்துக்களை எதிர்கொண்டு தக்க பதிலடி கொடுக்க முடியாதவர்களாகவுமே தமிழ் அரசியல் கட்சிகள் செயல் இழந்த நிலையில் உள்ளன.

**அதேவேளை, புலிகள் இயக்கத்தினர் அரசியல், இராணுவ அழுத்தங்கள் • மத்தியிலும் தனித்து நின்று, அடிப்படைக் கோட்பாடுகள் பற்றியும் பேசிவருகின்றனர். பிரபாகரனின் மாவீரர்தின உரையும் அதனையே பிரதிபலித்திருக்கிறது.**

**பிரபாகரன் தனது அதிகாரத்திற்காக போராடுகிறார் என்றே ஏனைய தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன. ஆனால், தமிழ் பேசும் மக்களின் கழுத்துக்கு சுருக்குக் கயிறு வீசப்படும் இன்றைய நெருக்கடி நிலையிலும் கிளர்ந்தெழ முடியாத தமிழ்க் கட்சிகள் யாருக்காக போராடி வருகின்றன? என்ற கேள்வியும் எழச் செய்கிறது.**

தமிழ்க் கட்சிகள் தங்கள் நேர்மையை நிரூபிக்க இதனைவிட்டால் வேறு சந்தர்ப்பம் இருக்கப்போவதில்லை.

ஆயுதம் ஏந்திப் போராடும் புலிகள் முகம் கொடுக்கும் அழுத்தங்களைவிட, தமிழ்க் கட்சிகள் அரசியல் ரீதியில் போராட ஆரம்பித்தால் பாரிய அழுத்தங்கள் அவற்றுக்கு ஏற்படப்போவதில்லை.

புலிகள் செய்துள்ள தவறுகள் பற்றி தமிழ்க் கட்சிகளிடம் விமர்சனங்கள் உள்ளன. அவற்றை கூறியும் வருகின்றன. அவை உண்மையானவை என்றால் புலிகளைவிட தாங்கள்தான் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் கோட்பாடுகளுக்கு விசுவாசமானவர்கள் என்பதை தமிழ்க் கட்சிகள் நிரூபித்துக் காட்டக்கூடியதாகவும் இன்றைய காலகட்டம் அமைந்துள்ளது. ■

---

**ஐயாயிரத்தி இருநூற்றி எண்பது பக்கங்கள். அதனை பொதிகளாகக் கட்டி இந்தியப் பாராளுமன்றத்துக்கு கொண்டு சென்றனர்.**

**மோப்ப நாய்கள் ஒவ்வொரு கட்டையும் முகர்ந்து பார்த்தன. பொதியோடு பொதியாக யாராவது குண்டுப் பொதியை கலந்துவிடலாம் என்று முன்னெச்சரிக்கை.**

**ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. குண்டுப் பொதி எதுவும் அதற்குள் கலக்கவில்லை.**

**ஆனால், குஜ்ரால் அரசை ஆட்டம் காண வைத்த குண்டாகத்தான் அது மாறிவிட்டது.**

**அதுதான் 'ஜெயின் கமிஷன்' அறிக்கை. இடைக்கால அறிக்கைதான் இந்தப்பாடு படுத்தியிருக்கிறது.**

**'முழு அறிக்கையும் வெளியாகி இருந்தால், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் லொறியில்தான் தனக்குரிய பிரதிகளை வீட்டுக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.**

**இடைக்கால அறிக்கையின் ஐயாயிரம் பக்கங்களையும் இன்றுவரைகூட எவரும் படித்திருக்க மாட்டார்கள்.**

**அப்படியிருந்தும் 'தி.மு.க.வை ஆட்சியில் இருந்து விலக்கு உறவை கத்தரித்துக் கொள்' என்று காங்கிரஸ் கட்சி குஜ்ரால் அரசுக்கு**

## கருணாநிதிக்கு ஆபத்தா?

**கூட்டோடு கூடாக உத்தரவு போட்டது ஏன்?**

**ராஜீவ் கொலைக்கு தி.மு.க.வுக்கும், புலிகளுக்கும் இடையிலான உறவுதான் காரணம் என்று ஜெயின் கமிஷன் கூறியதுதான் காரணமா?**

**எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தார் இந்திரா காந்தி. மதுரையில் வைத்து தி.மு.க கறுப்புக் கொடி காட்டியது. அடி தடிகள் நடந்தன.**

**இந்திரா காந்தியை கொலை செய்ய முயற்சித்ததாக தி.மு.க. தலைவர்கள்மீது எம்.ஜி.ஆர். அரசு வழக்குத் தொடுத்தது.**

**அந்த வழக்கு விசாரணை முடிய முன்னரே, தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டது.**

**"நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக" என்று கலைஞர் அழைத்தார். இந்திராவும், கருணாநிதியும் ஒரே மேடையில் தோன்றிப் பேசினார்கள்.**

**இந்திரா காந்தி கொலையை விசாரிக்க டக்கர் கமிஷன் நியமிக்கப்பட்டது. ஜெயின் கமிஷன் மாதிரியே அதுவும் விசாரணை நடத்தியது.**

**இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஆர்.கே.தவன் என்பவருக்கும் இந்திரா**



ஜெயின்

**கொலைக்கும் இடையே தொடர்பு இருப்பதாக டக்கர் கமிஷன் குற்றம் சாட்டியது.**

**ஆனால் அதே தவன் பின்னர் ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியும் கிடைத்தது.**

**டக்கர் கமிஷன் அறிக்கையை ராஜீவ் காந்தி தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டு விட்டார்.**

**அப்படியானால் இப்போது ஜெயின் கமிஷன் அறிக்கை விடயத்தில் காங்கிரஸ் இத்தனை துள்ளுத் துள்ளுவது ஏன்?**

**ஒரே காரணம் சோனியா காந்தி.**

**காங்கிரஸ் கட்சிக்குள் கோஷ்டிப் பூசல்கள் பயங்கரமாக தலைவிரித்தாடுகின்றன. பல கோஷ்டிகள் இருந்தாலும் மக்கள் செல்வாக்கு படைத்த தலைவர் யாருமில்லை.**

**அதனால் சகல கோஷ்டிகளும் தங்கள் அரசியல் உயிர் வாழ்தலுக்கு நம்பியுள்ள ஒரே நம்பிக்கை நட்சத்திரம் சோனியா காந்தி.**

**ராஜீவ் மீது விசுவாசமுள்ளவர்கள் என்று அவரை நம்பவைக்க ஆளாளுக்கு காவடி தூக்குகிறார்கள்.**

**கேசரி அனைவரையும் முந்தி நிற்க விரும்பினார். அதனால் குஜ்ராலின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார்.**

**இந்த மிரட்டலால் மத்திய ஆட்சிதான் ஆடியதே தவிர, தமிழ்நாடு மாநில அரசுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை.**

**ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்கூட மாநில ஆட்சிக்கு ஆபத்து நேராது.**

**அதே சமயம் ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில் கருணாநிதிமீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை திட்டமிட்ட கட்டுக்கதைகள்.**

**முன்கூட்டியே ஒரு முடிவுடன் இருந்தபடிதான் ஜெயின் தனது விசாரணையை துவக்கியுள்ளார். அந்த முடிவுக்கு ஆதாரமான சாட்சியங்களை, அவற்றின் உண்மைத் தன்மையை ஆராயாமல் தொகுத்துத் தந்துள்ளார். தனது குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரமாக்கியும் உள்ளார்.**

**ஒரு உதாரணம், இந்தியப் படையினரை புலிகள் எதிர்த்துப் போரிட்டனர். அவர்களுடன் தி.மு.க. தொடர்பு வைத்ததும், ஆதரித்ததும் தவறு, தேசத்துரோகம் என்கிறார் ஜெயின்.**

**இந்தியப்படை திரும்பிய பின்னர், பத்மநாபா கொல்லப்பட்ட பின்னர், புதுடில்லியில் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்தார் ராஜீவ் காந்தி. பிரபாகரனுக்கு என் வாழ்த்துக்களை தெரிவியுங்கள் என்று கூறினார். அதனை ஏன் ஜெயின் கவனத்தில் கொள்ளவில்லை? இப்படிப் பற்பல இடறுப்பாடுகள் அறிக்கையில் உள்ளன.** ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

குசுமாவின் மூக்கு நுனியில் மெதுவாகக் கடித்தான் குஜால். பின்னர் தன் மூக்கை அவள் மூக்குடன் உரசிக்கொண்டே "என் திட்டம் எப்படி?" என்று கேட்டான்.

குசுமாவுக்கு அவனது திட்டம் வியப்பாகத்தான் இருந்தது. ஸ்ரீராமும், லாலாராமும் பேசிக்கொண்டு இருக்கத்தான் இலாயக்கு. உருப்படியாக திட்டம் போடத் தெரியாதவர்கள் என்பதை குசுமா நன்கு அறிந்து கொண்டுவிட்டாள்.

ஸ்ரீராம் இல்லாத நேரங்களில் லாலாராம் குசுமாவிடம் ஒருமாதிரியாக இளிப்பான். இதுவரை குசுமா இடம் கொடுத்ததில்லை. ஸ்ரீராமுடன் ஏதாவது பிரச்சனை வந்தால் லாலாராமை பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைத்தாள்.

குஜாலைக் கண்டபின்னர், அவனில் குசுமாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. குசுமா இதுவரை சந்தித்த ஆண்களில் குஜால்தான் அவளுக்கு பிடித்தமானவனாகவும் நடந்துகொண்டான்.

ஸ்ரீராமும் லாலாராமும் கிராமம் ஒன்றுக்கு வருவதாக பூலானை நம்ப வைக்க வேண்டும். பூலான் பழிவாங்கும் வெறியோடு தன் குழுவுடன் வருவாள். கிராம எல்லையில் பதுங்கி இருந்து பூலான் கோஷ்டியை கூண்டோடு அழித்துவிடலாம் என்றுதான் திட்டம் தீட்டினான் குஜால்.

அவன் திட்டம் குசுமாவுக்கும் பிடித்திருந்தது. அதனால், அவன் "திட்டம் எப்படி?" என்று கேட்டதும், அவனது கழுத்தை விளைத்து உதட்டை கௌவினாள் குசுமா. வெறி வந்தவள்போல அவனது கன்னங்களிலும், நெற்றிலும் முத்தமிட்டாள்.

குசுமாவின் ஒவ்வொர் செயலும் குஜாலை பைத்தியமாக்கின. ஸ்ரீராமிடம் இருந்தும் தடை ஏதும் இல்லாமையால், அவன் முன்பாகவும் குஜாலை கொஞ்சத் தொடங்கினாள் குசுமா.

குஜாலை கைக்குள் போட்ட பின்னர் ஸ்ரீராம், லாலாராம் இருவரையும் அதிகாரம் பண்ணும் அளவுக்கு குசுமா சென்றதுதான் உச்சக்கட்டம்.

சம்பல் பள்ளத்தாக்கில் அதிகம் பிரசித்தம் இல்லாத கிராமம் பெஹ்மாய். பல கணவாய்கள் மத்தியில் தனியாக உள்ள கிராமம். இங்கு பண்ணையார் ஜாதியினர்தான் வாழ்ந்தனர். நானூறு பண்ணையார்கள் வரை இருந்தனர்.

• அக் கிராமத்தில் நடைபெற இருந்த திருமணம் ஒன்றுக்காக ஸ்ரீராம், லாலாராம் சகோதரர்களை அழைக்க சில பண்ணையார்கள் வந்திருந்தனர்.

பூலான் தேவியால் எந்த நேரத்திலும் ஆபத்து நேரலாம் என்று பயந்து கொண்டிருந்தான் ஸ்ரீராம்.

அதனால் திருமண வீட்டுக்கும் செல்லாமல் இருந்துவிடத்தான் நினைத்தான். குஜால்தான் வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தான்.

பூலானை ஒழித்துக்கட்ட அக் கிராமம் தான் மிக ஏற்ற இடம் என்று தீர்மானித்தான் குஜால்.

அதன்பின்னர் இரகசியத் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஸ்ரீராம், லாலாராம் ஆகியோர் திருமண வீட்டுக்கு வரப்போகிறார்கள், சீர்வரிசை கொடுக்கப் போகிறார்கள் என்று கிராமம் முழுக்க கதை பரவியது.

"உனக்கென்ன பைத்தியமா? நாங்கள் செல்லப்போவதை பூலான் அறிந்தால் என்னாகும் தெரியுமா?" என்றான் குஜாலிடம் ஸ்ரீராம்.

குஜால் சிரித்தான். "பூலானுக்கு தெரிய வேண்டும், அவள் காதுக்கு எட்ட வேண்டும் என்பதற்காக நான்தான் கதையைப் பரப்பச் சொன்னேன்."

"அதுதான் ஏன் என்கிறேன்" ஸ்ரீராமின் குரல் பதற்றப்பட்டது.

குஜாலுக்கு பயந்தாங்கொள்ளியான ஸ்ரீராமைப் பார்க்க கோபம் வந்தது.

"உனக்கு பூலான் சாகவேண்டுமா வேண்டாமா?"

"சாகவேண்டும்!"

"அதற்கு உன்னால் முடியுமா?"

"முடிந்தால் ஏன் உன் உதவியைக் கேட்கிறேன்" என்று ஸ்ரீராம் கூற, 'களுக்' என்று சிரித்தாள் குசுமா.

ஸ்ரீராம் குசுமாவை முறைத்தான். "அவளை ஏன் முறைக்கிறாய், உன்னால் முடியாது என்றால், நான் சொல்லுவது போல செய். கேள்விகள் கேட்காதே. அது எனக்குப் பிடிக்காது" என்றான் குஜால்.

ஸ்ரீராம் "சரி ஏதோ பண்ணித் தொலை" என்றுவிட்டு எழுந்து போய் விட்டான்.

குஜால் போட்ட திட்டத்தில் முதற் கட்டம் பலித்தது.

பெஹ்மாய் கிராமத்திற்கு ஸ்ரீராம் சகோதரர்கள் வரப்போகும் செய்தி பூலானுக்கு எட்டியது.

பெஹ்மாய் கிராமத்தில் இருந்து வந்த மான்சிங்கின் கூட்டாளி ஒருத்தன் தான் அறிந்த கதையை பூலானிடமும், மான்சிங்கிடமும் தெரிவித்தான்.

"எப்போது கல்யாணம்?" என்று கேட்டாள் பூலான்.

"பெப்ரவரி 14ல்" என்றான் தகவல் சொன்ன ஆள்.

பூலானுக்கு கண்கள் சிவந்தன. "இரை வலையில் விழப்போகிறது" என்று பல்லைக் கடித்தபடியே கூறினாள்.

ஸ்ரீராம், லாலாராம் இருவரைப் பற்றி பேச்செடுத்தாலே பூலானின் முகம் விகாரமாகிவிடும் விந்தையை மான்சிங் கவனிக்கத் தவறவில்லை.

அதன்மூலம், அவர்கள் இருவராலும் பூலான் எத்தனை துன்பத்தை அனுபவித்திருப்பாள் என்பது மான்சிங்குக்கு புரியவே செய்தது.

ஸ்ரீராம், லாலா ராம் இருவரையும் பிடித்து தன் கையாலேயே சுட்டுக்கொல்ல வேண்டும். பூலானுக்காக அந்தக் காரியத்தை செய்வதுதான் சந்தோசம் என்று நினைத்திருந்தான் மான்சிங்.

பூலானும், மான்சிங்கும் பழிவாங்கும் எண்ணத்திலேயே குறியாக இருந்தமையால், தங்களுக்கு கிடைத்த தகவலை ஆராய்ந்து பார்க்கத் தவறிவிட்டனர்



பூலான்

# பூலான்தேவி

72

தருவது ரசிகன்

தங்கள் குழுவில் உள்ள 20 பேரை மட்டும் வைத்துக் கொண்டு தாக்குதல் நடத்த முடியாது என்பதால், பாபாவின் உதவியைக் கேட்டனர்.

மான்சிங் சென்று பாபாவுடன் பேசி அவரது ஆட்களில் பதினைந்து பேரை அழைத்து வந்தான்.

1981 பெப்ரவரி 14

பெஹ்மாய் கிராமம் காலையில் விழித்துக் கொண்டபோது, மாலையில் அங்கே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடப்போகிறது என்று யார்தான் நினைத்திருப்பர்?!

மாலையாகிக் கொண்டிருந்தபோது மணமகன் அழைப்பிற்காக அயல் கிராமத்துக்கு சென்றனர் மணமகள் வீட்டார்.



அக் கிராமத்தில்தான் ஸ்ரீராமும், லாலாராமும் வந்து நின்றனர். மணமகன் அழைப்புக்காக வருகின்ற மணமகள் வீட்டாருடன் சேர்ந்து பெஹ்மாய் கிராமத்துக்குப் போகலாம் என்று கருதியே, அங்கு வந்திருந்தனர்.

ஸ்ரீராம் அடிக்கடி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். லாலாராம் மணமகள் வீட்டில் வாளிப்பாகத் தெரிந்த பெண்களை கண்களால் மேய்ந்து கொண்டிருந்தான்.

லாலா ராமும் பயந்தாங்கொள்ளிதான். ஆனாலும் அவனது சபலக் குணத்தால், அவன் கவனம் திசை திரும்பிவிடும்.

குஜாலும் அவன் ஆட்கள் பத்துப் பேரும் பெஹ்மாய் கிராமத்தின் நுழைவாயிலில் உள்ள கணவாய்களை அண்டிய பகுதியில் பதுங்கி இருந்தனர்.

ஸ்ரீராமும், லாலா ராமும் கிராமத்துக்குள் வந்து சேர்ந்த தகவலை உறுதிப்படுத்தாமல் பூலான் வரமாட்டாள். எனவே, மணமகனை அழைத்துக் கொண்டு ஸ்ரீராம் சகோதரர்கள் வந்தபின்னர்தான் மோதலுக்கு தயாராக இருக்க வேண்டும். பூலான் கோஷ்டியில் பத்துப் பதினைந்துபேர்தான் இருப்பார்கள் என்று நினைத்திருந்தான் குஜால்.

கடந்த வாரம்

**பூலான் தேவியை ஒழித்துக்கட்ட குஜால் என்னும் கொள்ளைக் கோஷ்டித் தலைவனுடன் கூட்டுச் சேர்கிறான் ஸ்ரீராம். குசுமாவை அவனுக்கு விட்டுக்கொடுக்கிறான். குஜால் பூலானை ஒழிக்கத் திட்டம் தீட்டுகிறான். இனி...**

பூலான் கொல்லப்படுவதைக் தன் கண்ணால் காணவேண்டும் என்று குசுமாவும் குஜாலுடன் வந்து பதுங்கி இருந்தாள்.

தனது ஆட்கள் பார்க்காத நேரமாகப் பார்த்து குசுமாவை அவன் கிள்ளிய இடத்திற்காக, பொய்யாக முறைத்தாள் குசுமா.

"ஸ்ரீராமுக்காக அல்ல, உனக்காகத்தான் பூலானை ஒழிக்க இத்தனை சிரமப்படுகிறேன்." என்றான் குஜால்.

மல்லாவைக் காதலித்த கதையை அவனிடம் கூறி, பூலானை வில்லியாக சித்தரித்திருந்தாள் குசுமா.

குஜாலின் ஆட்கள் சற்று எட்டத்தில் இருந்தனர். பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தனர். "அத்தனை ஆசையா என்மேல்?" என்று கேட்டுக்கொண்டே குஜாலின் தொடையில் கிள்ளினாள் குசுமா. அவன் வலித்தது போல நடிக்க, வருடிவிட்டாள்.

அதே நேரம், குஜாலின் கணிப்புக்கு மாறாக, பெஹ்மாய் கிராமத்துக்குள் பூலான் கோஷ்டியினர் புகுந்துகொண்டிருந்தனர்.

கிராமத்தின் முன்புறமாக செல்லாமல், பின்புறமாகச் செல்லலாம் என்று மான்சிங் தான் யோசனை கூறி இருந்தான்.

"அது நேரமாகும். நேராகவே செல்லலாம்" என்றாள் பூலான்.

ஆனால் மான்சிங் விடவில்லை. "யாருமே எதிர்பாராத முறைகளில் செயலில் இறங்கினால்தான் வெற்றியும் கிட்டும். எமக்கு பாதுகாப்பும் இருக்கும். இது பாபா சொல்லித் தந்தது" என்றான்.

பூலான் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தாள்.

ஸ்ரீராம், லாலாராமை விரைவாகச் சந்தித்து தீர்த்துக்கட்டவேண்டும் என்பது தவிர வேறு சிந்தனை எதுவும் பூலான் மனதில் எழவே இல்லை.

பெஹ்மாய் கிராமத்தின் பின்புறமாக அவர்கள் நுழைந்தபோது, ஒரு மரத்தின் கீழ் பலர் குழுமியிருந்தனர்.

ஆண்களும், பெண்களும் சிறுவர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் அங்கு காணப்பட்டனர்.

அந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் பூலான் குழுவினர் தப்பாக நினைத்துவிட்டனர். அதுதான் விபரீதமானது.

அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தது கிராமத்து பஞ்சாயத்து. திருட்டு வழக்கு ஒன்றை விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்தைப் பார்த்ததுமே திருமண நிகழ்ச்சிக்காக கூடியிருப்பவர்கள் என்று நினைத்துவிட்டாள் பூலான்.

ஆத்திரம் கண்களை மறைக்கும் என்பது பூலான் விஷயத்தில் சரியாகப் பொருந்தியது.

அடுத்து ஆரம்பமானது விபரீதம்.

சற்றும் யோசிக்கவில்லை.

அக் கூட்டத்தை நோக்கி பூலான் துப்பாக்கியும் கையுமாக ஓடத் தொடங்க, மான்சிங்கும் ஏனையோரும் பின்தொடர்ந்து ஓடினார்கள்.

கூட்டத்தில் நின்றவர்கள் தங்களை நோக்கி துப்பாக்கிகளுடன் ஓடி வருவோரைக் கண்டதும், கலைந்து ஓடத் தொடங்கினார்கள்.

"நில்லுங்கடா டேய்" என்று குரல் கொடுத்தாள் பூலான். ஓடி வரும்போதே, பூலானின் கண்கள் கூட்டத்துக்குள் ஸ்ரீராமையும், லாலா ராமையும் தேடி அலைந்தன.

பெண் குரல் கேட்டதுமே, வருவது பூலான் தேவி என்பது கூட்டத்தினருக்கு தெரிந்துபோனது.

"ஐயோ பூலான் தேவி வந்துவிட்டாள்" என்று ஆளாளுக்கு கத்திக்கொண்டே, முன்னிலும் வேகமாக ஓடத் தொடங்கினார்கள்.

பூலானை அவர்கள் இதற்கு முன்னர் கண்டதில்லை. ஆனால் பூலான் பற்றிய உண்மையும், கற்பனையும் கலந்த கதைகள் பலவற்றை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அதனால்தான் அசுரகதியில் ஓடத் தொடங்கினார்கள்.

"சுடுங்கள்... சுடுங்கள்" என்று கத்திக்கொண்டே பூலானும்கூட, மான்சிங் உட்பட ஏனையோரும் சுடத் தொடங்க, வேட்டுக்கள் பறந்தன.

பின் தங்கி ஓடிய சிலர் முதலில் சுருண்டு விழுந்தனர். முதுகுகளில் ரவைகள் இரத்தக் கோலம் போட்டன.

வேட்டுச் சத்தங்கள் கிராமத்தின் வெளியே பதுங்கி இருந்த குஜால் கோஷ்டிக்கும் கேட்டது.

அதே நேரம் மணமகனை அழைத்துக் கொண்டு ஸ்ரீராம் சகோதரர்களும், பண்ணையார்களும் பவனியாக வந்து கொண்டிருந்தனர்.

**(தொடர்ந்து வரும்)**



லூயிஸ்

சென்றவாரம் அமெரிக்கா அம்மா ஒருத்தர் தன் பிள்ளையைக் கொலை செய்த தகவல் வெளியாகியிருந்தது. இந்தவாரம் அமெரிக்க ஆயா ஒருத்தி செய்த கொலை பற்றிய தகவல்.

அமெரிக்காவில் கார்களைப் பராமரிப்பதில் உள்ள ஈடுபாடு, தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் இல்லாமல் போய்விட்டது. கணவனும், மனைவியும் வேலைக்கு போக வேண்டிய சூழலும் குழந்தைகள் வளர்ப்பில் ஆர்வம் காட்ட முடியாமல் செய்துவிடுகிறது.

இதனால் குழந்தைகளைப் பராமரிக்க ஊதியம் கொடுத்து ஆயாக்களை நியமிக்கிறார்கள். அமெரிக்காவில் குறைந்த சம்பளத்தில் ஆயாக்கள் பெற்றுக் கொடுப்பதற்கு முகவர் நிறுவனங்கள் உள்ளன.

படித்துக் கொண்டே ஆயா வேலை பார்க்கும் மாணவிகளும் உள்ளனர். (டயானாவும் இலண்டனில் ஆயா வேலை பார்த்திருக்கிறார்) அவ்வாறு ஆயா வேலைக்கு சென்ற மாணவிதான் லூயிஸ்.

# ஆயா செய்த கொலை

## திருத்தப்பட்ட தீர்ப்பு

இங்கிலாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு ஆயா வேலைக்குப் போனாள் லூயிஸ். பத்தொன்பது வயது. நல்ல அழகான தோற்றம். சிரித்த முகம். தங்கள் குழந்தை மாத்யூவை அவளிடம் ஒப்படைத்தனர் ஈப்பன் தம்பதியினர்.

மாத்யூ ஒன்பது மாதக் குழந்தை. ஈப்பன் தம்பதி வேலைக்குப் போய்விட்டால்; லூயிஸ் தான் குழந்தையுடன் கொஞ்சிக் கொஞ்சி பொழுதைக் கழிப்பாள்.

குழந்தை மாத்யூவும் லூயிசுடன் ஒட்டிக் கொண்டது. ஈப்பன் தம்பதிக்கும் லூயிசை பிடித்துக் கொண்டது.

திடீரென்று ஒருநாள் அந்தச் செய்தி ஈப்பன் தம்பதியை மட்டுமல்ல, அமெரிக்காவையே உலுக்கியது.

ஆயா லூயிஸ் குழந்தை மாத்யூவை கொலை செய்துவிட்டாள். 'ஒன்பது மாத பிஞ்சைக் கொல்ல எப்படித்தான் மனம் வந்ததோ?' என்று பதறினார்கள், கதறினார்கள் ஈப்பன் தம்பதியினர்.

விடாமல் அழுது அடம் பிடித்தது குழந்தை. அழுகையை நிறுத்த விளையாட்டுக் காட்டியும் குழந்தை மசியவில்லை. பொறுமை இழந்தாள் ஆயா. குழந்தையை சுவரோடு அறைந்திருக்கிறாள். பின் பிடரியில் அடிபட்டிருக்கிறது. உடனே மூச்சுத் திணறியதாம். பயந்துபோன ஆயா குழந்தையை குலுக்கியும், உலுக்கியும் பார்த்தாளாம்.

குழந்தை செத்துப்போனது. பெற்றோர் இடிந்து போயினர். லூயிஸ்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. கடந்த அக்டோபர் 30ம் திகதி பதினைந்து வருட ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதுவே குறைந்த தண்டனைதான். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? தங்கள் நாட்டுப் பிரஜைக்கு தகுந்த நீதி கிடைக்கவில்லை என்று இங்கிலாந்து பத்திரிகைகள் எழுதின.

அமெரிக்கர்கள் பலர்கூட சின்னப் பெண்ணுக்கு இது அதிகமான தண்டனைதான். அனுபவம் இல்லாத வயது குறைந்த பெண்ணை ஆயாவாக வைத்தது ஈப்பன் தம்பதி செய்த மகா தவறு என்று அபிப்பிராயப்பட்டனர்.

தீர்ப்பை அப்பீல் செய்தனர் ஆயா லூயிஸின் பெற்றோர். துரிதமாக விசாரித்து மறுதீர்ப்பும் வந்துவிட்டது.

திருத்தி எழுதப்பட்ட தீர்ப்பு என்ன தெரியுமா?

குற்றவாளியின் இளம் வயதும், அது காரணமாக அவருக்கு இருந்த பொறுப்பு இன்மையுமே கொலைக்கு காரணங்கள். எனவே லூயிஸ் விடுதலை செய்யப்படுகிறார். ஏற்கனவே 279 நாட்கள் சிறையில் கழித்திருப்பதை தண்டனைக் காலமாக கருதி, அவர் விடுதலை செய்யப்படுகிறார்."

தீர்ப்பைக் கேட்டதும் ஈப்பன் தம்பதியினர் மீண்டும் ஒருமுறை இடிந்து போயுள்ளனர். இத் தீர்ப்புக்கு ஆதரவாகவும், எதிராகவும் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

அமெரிக்க நீதியும், நியாயங்களும் விசித்திரமானவைதான்.

# புது நண்பி



நடிகை ஜெயப்ரதா இப்போது எம்.பி.யாக இருக்கிறார். தெலுங்கு தேசக் கட்சி சார்பாக பாராளுமன்றம் சென்றவர் ஜெயப்ரதா. என்.டி.ராமராவ் தான் இவரை எம்.பி.யாக்கி அழகு பார்த்தார்.

ஜெயப்ரதாவுக்கு புது நண்பி ஒருவர் கிடைத்துள்ளார். அவர் வேறு யாருமல்ல பூலான்தேவிதான். இருவரும் இணைபிரியாத தோழிகளாகி விட்டனர்.

பூலான் தேவியை 'பெண் சிங்கம்' என்று பாராட்டியிருக்கிறார் ஜெயப்ரதா. ஜெயப்ரதா மிகச் சிறந்த நடிகை என்றும், தான் அவரது ரசிகை எனவும் புகழ்கிறார் பூலான் தேவி. பரஸ்பரம் மாறி மாறி பாராட்டிக் கொள்கின்றனர். இத் தகவல் டில்லி மிரரில் வெளியாகியுள்ளது.

# 90 வயதுக் கொலைகாரர்

பராகுவே நாட்டில் நடைபெற்றுள்ள சம்பவம் இது. அதாகப்பட்டது ஒரு கொலை.

கொலையை விட கொலைக்கான காரணம்தான் அபத்தம்.

பராகுவே நாட்டில் வயதானவர்களைப் பராமரிக்க முதியோர் காப்பகங்கள் உள்ளன. அவ்வாறான காப்பகம் ஒன்றில் தங்கியிருந்த 90 வயதான முதியவரும் 74 வயது மூதாட்டியும் நண்பர்களாக இருந்தனர்.

ஏதோ காரணத்தால் திடீரென்று நட்பு முறிந்துபோனது. நீண்டகாலமாக ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்வதில்லை.

ஆனால் 90 வயது முதிய ஆசாமிக்கு சும்மாயிருக்க முடியாது. மூதாட்டியை சீண்டி சண்டைக்கு இழுப்பார். இருவருக்கும் அடிக்கடி வாய்ச்சண்டை ஏற்படும்.



அப்படித்தான் சம்பத்தில் ஒருநாள் சண்டை மூண்டது. ஆனால் முடிவு வழக்கம் போல் அமையவில்லை. மூதாட்டியை தள்ளி வீழ்த்தி, அவள் நெஞ்சில் கத்தியால் குத்திவிட்டார் முதிய ஆசாமி.

மூதாட்டியை தகாத எண்ணத்துடன் முதியவர் அணுகியதாகவும், மூதாட்டி எதிர்ப்புக் காட்டியதால் கத்தியால் குத்தியதாகவும் பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். 90 வயதில் மிருகமாக மாறுவதற்கு மனநிலை பாதிப்புத்தான் காரணமா? எனவும் மருத்துவ பரிசோதனை நடக்கிறது.

# மண்டேலா தயார்



தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவும், மொசாம்பிக் முன்னாள் அதிபர் மனைவி கிரேசாவும் காதலித்து வருகின்றனர். இணைபிரியாத ஜோடிகளாக சுற்றுகின்றனர்.

மண்டேலாவுக்கு 79 வயது. கிரேசாவுக்கு 52 வயது. மண்டேலா கிரேசாவை திருமணம் செய்யத் தயாராக உள்ளார்.

சமீபத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்த மண்டேலா பின்வருமாறு கூறியிருக்கிறார். "உங்களுக்கு ஒன்று தெரியுமா? இந்தக் காலத்தில் எந்த முடிவும் எடுப்பது ஆண்கள் கையில் இல்லை. எல்லாமே பெண்கள் கையில்தான் உள்ளது. இந்த விடயத்தில் கிரேசா சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம் தான்" என்றுள்ளார் மண்டேலா.

மணமகனாக மண்டேலாவுக்கு ஆசைதான். மணமகள்தான் பின்னடிக்கிறார்.

# காதுப் பொதி



பொதி என்றதும் வேறு யோசனை வேண்டாம். கிடைக்காத பொதி பற்றியும், அதற்கான தமது யோசனை பற்றியும் தமிழ்க் கட்சிகள் அலட்டிக் கொள்ளட்டும்.

இது இத்தாலி நாட்டில் நடந்த சமாச்சாரம். புடவைக் கடைக்காரர் ஒருவரை கடத்தி வைத்து பணம் கேட்டார்கள் கடத்தல்காரர்கள். கேட்ட தொகை 4 கோடி. பலமுறை எச்சரித்தும் பணம் வந்து சேரவில்லை.

கடத்தல் பேர்வழிகளுக்கு மூக்கின் மேல் கோபம். கத்தியை எடுத்து தொழிலதிபரின் காதை 'சரக்' என்று வெட்டி பார்சல் பண்ணி அவர் வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். பொலிசார் வலை விரித்தும் பயன் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



← யாழ் குடாநாட்டில் இப்போதும் பழைய மொடல் கார்கள்தான் பவனி வருகின்றன. படத்தில் இருப்பது அக்கால வோக்ஸ் வாகன் கார். பெற்றோலில் இயங்கும் இக்காரின் எஞ்ஜினுக்குப் பதிலாக, இரண்டு சக்கர உழவு இயந்திரத்தின் டீசல் எஞ்ஜின் பொருத்தப்பட்டுள்ளது.


## புதிய கண்டுபிடிப்பு


எரிபொருளை மிச்சப்படுத்த அப்படியொரு புதிய உபாயம். இந்த கண்டுப்பிடிப்புக்கு சொந்தக்காரர் தனபதி. யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரியின் முதலாமாண்டு மாணவர். உழவு இயந்திர டீசல் எஞ்ஜினில் சில தொழில்நுட்ப வித்தைகளை செய்து அசத்தியுள்ளார்.

ஒரு லீட்டர் டீசலுக்கு 20 கிலோ மீட்டர் பயணம் செல்லாம். மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும். அது மட்டுமல்ல கார் வீட்டில் நிற்கும்போது இந்த எஞ்ஜினை ஜெனரேட்டராகவும் பாவித்துக்கொள்ளலாம். வீட்டுக்கு மின்சாரம் பெறலாம்.

ஓடினால் கார். நின்றால் ஜெனரேட்டர். செலவும் மிச்சம். பயன்பாடு இரண்டு. நெருக்கடிகளும் புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கும்தான்.

# தகவல் பெட்டி





## நினைவுச் சின்னம்

← இறந்தவருக்கு சிலை வைப்பதும், பின்னர் காகங்கள் அவற்றை கவனித்துக் கொள்வதும் நம்நாட்டிலும் காணக்கூடிய காட்சிகள்தான். (வடக்கில் மட்டும் பிரதான சிலைகள் அடிக்கடி படையினரின் கவனிப்புக்கு உள்ளாவது உண்டு).

படத்தில் இருப்பது பப்புவா நியூகினியாவில் மலிவை என்ற ஊரில் உள்ள காட்சி. சமாச்சாரம் யாதெனில், அந்த ஊரில் வாழ்ந்த தங்கள் அபிமானத் தலைவருக்கு பழங்குடி மக்கள் வைத்துள்ள நினைவுச் சின்னம்தான் இது.

பலநூறு வருடங்களுக்கு முன்னரே மண்டையைப் போட்டுவிட்ட தலைவரின் மண்டை ஓட்டை எடுத்து அப்போதே நினைவுச் சின்னமாக நிறுவிவிட்டனர். வருடா வருடம் திருவிழா எடுத்தும் நன்றிக் கடன் செய்கிறார்களாம் அந்த ஊர்மக்கள்.

## குலதெய்வம்

↑ இதுவும் பப்புவா நியூகினியா நாட்டில் எடுக்கப்பட்ட புகைப்படம்தான். அங்குள்ள செபிக் நதி செல்லும் பாதையில் சம்பிரி என்ற பெயரில் ஒரு ஏரி உள்ளது. அந்த ஏரியில் முதலைகள் அடிக்கடி தோன்றி மீன்பிடிப் படகுகள் மீது தாக்குதல் நடத்தும்.

அப்படியிருந்தும் அப் பகுதி மீனவப் பழங்குடி மக்கள் முதலையைத்தான் தங்கள் 'குலதெய்வமாக' வணங்குகிறார்கள். படத்தில் இருப்பது தோணி. அதன் முன்பகுதி முதலையின் தலைபோல, மிகச் சிரத்தையுடன் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான தோணியில் செல்லும்போது முதலைகள் கண்டால், வேறொரு முதலைதான் போகிறது என்று தாக்குதல் நடத்தாமல் விடுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. சோக்கான தந்திரம்.



## களக் காட்சி

→ வன்னிப் போர்க் களத்தில் ஒரு காட்சி இது. தமது எதிரி நிலைகளை நோக்கி படையினரின் டாங்கிகள் நகர்ந்து செல்லும். தமது எதிரிகளின் வரவை எதிர்பார்த்து புலிகளின் அணிகளும் தயாராய் நிற்கும். குண்டுகளை ஏவிக்கொண்டு செல்லும் டாங்கிகளை நோக்கி புலிகள் வைத்த குறி தப்பாவிட்டால் டாங்கி எரியும். குறி தப்பினால் புலிகளின் பாதுகாப்பு அரணை டாங்கி தகர்க்கும்.

கரப்புக்குத்தி, கரிப்பட்ட முறிப்பு மோதலில் படையினரின் டாங்கி ஒன்று புலிகளின் தாக்குதலால் தீப்பற்றி எரியும் காட்சியே இதுவாகும்.

புலிகளிடம் தற்போது காந்த அடிப்பாகம் கொண்ட மக்நெற் குண்டுகள் உள்ளன. தரையோடு தரையாக நகர்ந்து அவற்றை டாங்கிகளில் ஒட்டவைத்தால், டாங்கிகள் வெடிக்கும். மக்நெற் குண்டுகள் டாங்கிகளுக்கும் அச்சுறுத்தல்.

## ஆள் இல்லாத போர் வாகனம்

↓ சமாதானத்தையும், ஆயுதக் குறைப்பையும் பற்றி உபதேசித்து வருகிறது அமெரிக்கா. ஈராக்கிடம் கணக்கு கேட்கிறது. இந்தியா போன்ற நாடுகள் ஆயுத பலம் பெறுவதை பொறுக்காமல் வயிற்றெரிச்சல் படுகிறது. அந்த அமெரிக்காவோ தினம் ஒரு புதிய போர் ஆயுதம் கண்டுபிடித்து அடுக்கிவைத்துக் கொண்டிருக்கிறது.

படத்தில் இருப்பது அமெரிக்க இராணுவ ஆராய்ச்சி மையத்தினரால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நவீன கவச வாகனம்.

இதில் என்ன விசேஷம் தெரியுமா? ஆள் இல்லாத உளவு விமானம் போல, இதுவும் ஆள் இல்லாத கவச வாகனம். கம்பியூட்டர் மூலம் தொலை தூரத்தில் இருந்து இயக்கலாம்.

எதிரிகளின் வியூகத்திற்குள் புகுந்து படம் எடுக்கவும், நடமாட்டங்களை கண்காணிக்கவும் இதன்முன் பகுதியில் உள்ள கமரா லென்சுகள் உதவும். அந்த கமரா லென்சுகள் எடுக்கும் படங்கள் உடனுக்குடன் இதனை இயக்கும் மையத்தில் உள்ள கம்பியூட்டர் திரையில் தெரிந்து கொண்டிருக்கும்.

எதிரிகள் இதனைக் கைப்பற்ற வருவதாகத் தெரிந்தால் திருப்பி எடுத்துக் கொள்ளக்கூடிய துரித ஏற்பாடுகளும் இதில் உள்ளன. அதையும் மீறி எதிரியின் கையில் சிக்கினால், கமராவில் பதிவான தகவல்களை தானாக அழிக்கும் வசதியும் உண்டு. இன்னமும் பாவனைக்கு வரவில்லை. வந்தாலும் இதனை யாருக்கும் விற்காது அமெரிக்கா.

எனினும் மறுதரப்பு விழிப்பாக இருந்தால் இதனை அழிப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல. எத்தனை புதிய தொழில் நுட்பம் வந்தாலும் அதனை முடியடிக்கவும் புதிய வழிக்ள் தோன்றவே செய்யும்.



## வல்லரசே வாலாட்டாதே



↑ ஈராக்மீது போர் தொடுக்கப்போவதாக அமெரிக்கா மிரட்டியது. ஈராக் மக்கள் வல்லரசின் பொல்லாத ஆயுதங்களை நினைத்து அப்படி ஒன்றும் பயந்து நடுங்கவில்லை. ஈராக் அதிபர் சதாம் உசேனை பாதுகாக்க அணி அணியாய் திரண்டனர்.

மக்களின் எழுச்சியை புரிந்து கொள்ளாத அமெரிக்காவும், அதன் சொற்படி ஆடும் ஐ.நா சபையும் மனிதக் கேடயங்களாக மக்களை பயன்படுத்துகிறார் சதாம் உசேன் என்று ஒப்பாரி வைத்தன. ஆடு நனைகிறது என்று ஓநாய்கள் அழுத கதைதான் அதுவும்.

படத்தில் இருப்பவர்கள் ஈராக் நாட்டு இராணுவத்தில் உள்ள பெண் அதிரடிப்படையினர். பாக்தாத்தில் உள்ள தங்கள் முகாமில் ஈராக் தேசிய கீதத்தை இசைத்துக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம் இது.

அமெரிக்காவின் நவீன படை பலத்தைவிட, ஈராக் மக்களின் மன உறுதி மாபெரும் வலியது.

நம்நாட்டு முஸ்லிம் தலைவர்களாக தம்மைக் கூறிக்கொள்ளும் சிலர் அமெரிக்காவை கண்டிக்கவே இல்லையே! ஏன் தெரியுமா? நம் நாட்டு அரசுக்கு அமெரிக்கா கூட்டாளியாச்சே. இன உணர்வு, மத உணர்வு அனைத்துமே சுயநல அரசியலுக்குள் அடக்கமாகிவிடுகிறது பார்த்தீர்களா?



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 32

# காரில் ஏறாமல் தடுக்கப்பட்ட புன்னகை அரசி

## கவிஞர் மறைந்ததும் கண்ணீர் விட்ட நடிகை

அவர் ஒரு படப்பிடிப்பாளர். சினிமா உலகுக்கு புதுமுகங்களையும் அறிமுகம் செய்பவர். அவரது பெயர் காதம்பரி பாசு.

காலண்டர் ஒன்றுக்காக 'போஸ்' கொடுத்திருந்தார் இளம் பெண் ஒருவர். அப்பெண் சினிமாவில் நடித்தால் நன்றாக வருவார் என்று நினைத்தார் காதம்பரி பாசு.

அப்பெண்ணின் முகவரியை விளம்பரக் கம்பனியில் விசாரித்து அறிந்துகொண்டு தேடிச் சென்றார்.

அப் பெண்ணின் பெயர் தெய்வநாயகி. சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, "உனக்கு சினிமாவில் நடிக்க ஆசையா?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார் காதம்பரி பாசு.

"ஏற்கனவே விளக்கேற்றியவள் என்ற படத்தில் நடிக்க வைப்பதாகச் சொல்லிச் சென்றனர். பின்னர் வரவே இல்லை" என்றார் தெய்வநாயகி.

"உன்னை படம் பிடித்து பேசும் படம் பத்திரிகையில் போடுகிறேன். நல்ல கலர் ரவிக்கையாக போட்டுக்கொண்டு போஸ் கொடு" என்றார் காதம்பரி பாசு.

நன்கு உயரமான கட்டிலுக்கு அடியில் வைத்திருந்த, ஒரு பச்சை நிற தகரப்பெட்டியை இழுத்து, அதிலிருந்து ஏழு, எட்டு ரவிக்கைகளை எடுத்துக் காட்டினார்.

எல்லாமே வெள்ளை நிறத்தில் முழங்கைவரையான ரவிக்கைகள். காதம்பரி பாசுக்கு முகம் சுருங்கிவிட்டது.

"வேறு தைக்க முடியுமா?" என்று கேட்டார்.

"வசதியில்லை" என்று உடனே பதிலளித்தார் தெய்வநாயகி. பின்னர் பேசும்பட பத்திரிகைச் செலவில் ரவிக்கைகள் தைத்துக் கொடுத்துப் படம் எடுத்தார்.

### காரில் வராதே

படம் எடுக்க அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லும்போது, காதம்பரி பாசுவின் காரில் ஏறப்போனார் தெய்வநாயகி. "வேண்டாம், நீ தனியாக டாக்சியில் வா" என்று டாக்சி பிடித்துக் கொடுத்தார் காதம்பரி பாசு.

பேசும் பட அலுவலகத்தில் மேக்-அப்போட்டு அவரை படம் எடுத்து வெளியிட்டனர். புகைப் படம் வெளியானதும், அதனைப் பார்த்தார் இயக்குநர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன். காதம்பரி பாசுவிடம் விலாசம் பெற்றார்.

அதன்பின்னர் சில நாட்களில் 'கற்பகம்' படத்தில் தெய்வநாயகியை கே.ஆர்.விஜயா என்ற பெயர் சூட்டி நடிக்க வைத்தார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

பின்னர் பெரிய நடிகையாகி புதிதாக பங்களா கட்டி குடி புகுந்தார் கே.ஆர்.விஜயா. அந்த புதுமனைப் புகுவிழாவுக்கு காதம்பரி பாசுவையும் மறக்காமல் அழைத்திருந்தார்.

தனது கணவர் வேலாயுதத்திடம் அவரை அறிமுகப்படுத்திய கே.ஆர்.விஜயா, "நான் சினிமாவில் நுழைவதற்கு முன்னர் இவர் என்னைக் காரில் ஏற்றமாட்டேன், டாக்சியில் வா என்றார். இப்போது எம்மிடம் எத்தனை கார்கள் இருக்கின்றன' என்றதும் காதம்பரி பாசுவுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

"தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள் விளையாட்டாகத்தான் சொன்னாள்" என்று சமாதானப்படுத்தினார் வேலாயுதம்.

### மிரட்டல்

இன்னொரு விடயம் என்னவென்றால், கே.ஆர்.விஜயா சினிமா வாய்ப்புத் தேடியபோது பலரிடம் ஏமாந்துள்ளார். ஒரு படப்பிடிப்பாளர் கே.ஆர்.விஜயாவுக்கு ஆசை காட்டி மிகக் கவர்ச்சியான கோணங்களில் எல்லாம் படம் எடுத்திருந்தார். கே.ஆர்.விஜயா பெரிய நடிகையானதும் அப் படங்களை காட்டி மிரட்டினார். பணம் பறிக்க திட்டமிட்டார்.

இதனை காதம்பரி பாசுவிடம் கூறி அழுதார் விஜயா.

"இதற்கு ஏன் பயப்படுகிறாய். யாராவது அந்தப் படங்களைக் காண்பித்தால், ஐய்ய... என்ன அக்கிரமம் இது, என்னுடைய முகத்தை எவளுடைய உடம்பிலோ வைத்து ஒட்டிவிட்டார்களே பாவிகள்..." என்று அடித்துப் பேசிவிடு என்று யோசனை சொல்லிக் கொடுத்தார்.

### கவிஞரின் காதலி

கனகாம்பரம் என்பதற்குள் அந்த நடிகையின் பெயர் அடக்கம். பிரபு போன்ற ஹீரோக்களுடனும் ஜோடியாக நடித்துள்ளா[r] இவரது தாயாரும் பிரபல நடிகை. எம்.ஜி.ஆர், சிவா[ஜி] காலத்தில் கலக்கியவர். அவரது பெயரில் 'தேவி' இருக்கிற[து].

அவருக்கும் அக்கால கவியரசுக்கும் இடையே ஆழமா[ன] நட்பு இருந்தது. கவிஞரை ஒரு குழந்தைபோல நினை[த்து] அன்பு காட்டியதுடன், கவிஞரின் சோகமான நேரங்க[ளில்] உடல், உள ரீதியாகவும் ஆறுதல் கொடுத்தார் நடிகை.

கவிஞரிடம் பல நடிகைகள் உதவிபெற்றுள்ள[னர்] தொடர்பும் வைத்திருந்தனர். அவர்களில் கவிஞர் இற[ந்த] பின்னர் கண்ணீர்விட்டவர்கள் மிகச் சிலர்தான். அ[வர்களில்] ஒருவர் அந்த நடிகை.



நாகார்ஜுன்-தபு

ஊர்மிளா



சினி விசிட்

## மினி சினி

* பிரபு-மீனா ஜோடியாக நடிக்க நடிகர் சிவச்சந்திரன் இயக்கும் படத்திற்கு 'அம்மா' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 'அம்மா' என்ற பெயரில் பிரதாப்-சரிதா நடித்த படமொன்றை ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்துள்ளது.

* ஆர்.வி.உதயகுமார் தெலுங்கில் இயக்கிய 'தாரக ராமுடு' தமிழில் 'வெள்ளி நிலவே' என் பெயரில் மொழி மாற்றப்படுகிறது. ஸ்ரீகாந்த்-சவுந்தர்யா ஜோடியாக நடித்திருக்கு இப்படத்தில், சவுந்தர்யாவுக்கு கலெக்டர் வேடம்.

* 'நாளைய தீர்ப்பு' முதல் 'நேருக்கு நேர்' வரை 16 படங்களில் நடித்திருக்கும் விஜய், முதன் முதலாக தயாரித்து நடிக்கும் படம் அவரது 20வது படமாக வெளிவரவுள்ளது. ஏ.வெங்கடேசன் இயக்கும் இப்படத்திற்கு 'நிலாவே வா' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

* 'பொற்காலம்' படத்திற்குப் பின் அதன் இயக்குநர் சேரன் 5 புதிய படங்களை இயக்க ஒப்புக் கொண்டுள்ளார். இவற்றில் 2 படங்களை 'நந்தினி' படத்தை இயக்கிய மனோபாலா தயாரிக்கவுள்ளார்.

* விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியின் இரண்டாவது மகள் தெலுங்கில் கதாநாயகியாக அறிமுகமான 'ருக்மணி கல்யாணம்' வெற்றி பெற்றுள்ளது. இது தமிழில் மொழிமாற்றப்பட்டு விரைவில் வெளியாகவுள்ளது.

* மம்முட்டியும் முரளியும் முதல் முறையாக புதிய படமொன்றில் இணைந்து நடிக்கவுள்ளார்கள். இப்படத்தை 'தலைவாசல்' செல்வாவிடம் உதவி இயக்குநர்களாக இருந்த மூர்த்தி-ரமேஷ் இயக்குகிறார்கள்.

* 'மன்னன்' படத்திற்குப் பின்னர் தமிழில் நேரடியாகத் தயாராகும் 'தடயம்' படத்தில் நடித்து வரும் விஜயசாந்தி, இன்னும் ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்தை கேயார் இயக்கவுள்ளார்.

* பாண்டியராஜன்-குஷ்பு நடித்து வெற்றி பெற்ற 'கோபாலா கோபாலா' மலையாளத்தில் 'மிஸ்டர் பட்லர்' என்ற பெயரில் தயாராகி வருகிறது. இதில் மலையாள நடிகர் திலீப்-மோகினி ஜோடியாக நடிக்கின்றனர்.

* இந்தியில் 'ரங்கீலா', 'தவுட்' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய ராம் கோபால்வர்மா, அடுத்த படத்தையும் இந்தியிலேயே இயக்கவுள்ளார். இந்தப் படத்திலும் 'ரங்கீலா', 'தவுட்' ஆகிய படங்களில் நடித்த ஊர்மிளாதான் கதாநாயகி.

* தனது படங்களுக்கு 'தாய்க்குலமே தாய்க்குலமே', அட்ராசக்கை 'அட்ராசக்கை', 'கபடி கபடி' என இரட்டைப் பெயர்களை வைக்கும் பாண்டியராஜன், அடுத்து நடிக்கும் படமொன்றிற்கு வைத்துள்ள பெயர் என்ன தெரியுமா? 'டபின்ஸ்'.




சுவாதி

பிரபு-மந்த்ரா
படம்: தேடினேன் வந்தது

### மீண்டும் ரசிகாவுடன்

'கபடி கபடி' படத்தில் பாண்டியராஜனுடன் ஜோடி சேர்ந்தவர் ரசிகா. படத்தில் மட்டுமல்ல, நிஜத்திலும் சென்னை புறநகர்ப்பகுதி கடற்கரை ஹொட்டல் ஒன்றில் ஜோடியாக தங்கினார்களாம். (கதை டிஷ்கஷனாக இருக்குமோ?!) பாண்டியராஜனின் ஸ்டைலே அதுதானாம். சென்னையில் அல்லாமல், சென்னை புறநகரில்தான் ஹொட்டல் ரூம் எடுத்து தங்குவது வழக்கம்.

பாண்டியராஜன்- ரசிகா நெருக்கம் கபடி கபடி வெற்றிக்கும் உதவப்போகிறது. அந்தளவுக்கு படத்திலும் தாராளம் காட்டியுள்ளார்கள். ரசிகா என்ன மாயம் பண்ணினாரோ, தன் அடுத்த படத்திற்கும் அவரையே சிபாரிசு செய்துள்ளார் பாண்டியராஜன். புதிய படத்திற்கு "அதான்டா இதான்டா" என்று பெயர் வைத்துள்ளனர்.



சரத்குமார்
படம்: மூவேந்தர்



படிப்பகம்

www.padippakam.com

## ஐ லவ் யூ ஐஸ்வர்யா

'ஜீன்ஸ்' படத்தில் ஐஸ்வர்யாராயுடன் நடித்த பின்னர், அவரது பரம ரசிகனாகி விட்டார் பிரசாந்த்.

ஐஸ்வர்யாராயும் பந்தா இல்லாமல் பழகினாராம். வெளிநாடுகளில் படப்பிடிப்புக்கள் நடைபெற்றதால் பிரசாந்துக்கு மகா சுதந்திரம். அப்பா தியாகராஜனின் பார்வை படாது என்ற துணிச்சலில் ஐஸ்வர்யாராயுடன் ஆழமாக பழகியிருக்கிறாராம். ஐ லவ் யூ சொல்லத்தான் ஆசை. ஆனால் அழகி தயாராக இல்லை. "நட்பு மட்டும் போதும். நண்பர்களாவே இருப்போம். சந்திக்க வேண்டும்போல இருந்தால் சந்திக்கலாம்" என்று கூறிவிட்டாராம்.

ஐஸ்வர்யாராய் மட்டும் ஒரு வார்த்தை சொன்னால் போதும் அப்பாவுக்கும் டாட்டா காட்டிவிடுவார் பிரசாந்த். முன்னர் நடிகை திவ்யபாரதிமீது பைத்தியமாக இருந்தவர் பிரசாந்த். அவரது மரணத்தின் பின்னர் பிரசாந்த்தை கவர்ந்து பைத்தியமாக்கியிருப்பவர் ஐஸ்வர்யாராய்தான்.

## கொத்திய மயில்கள்

சுவாதி இப்போது நடித்துவரும் படங்களில் ஒன்று 'அண்ணன்'. ராமராஜனுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

படப்பிடிப்புக்காக திண்டுக்கல் போனார் சுவாதி. அங்கு திருமலைக்கேணி முருகன் கோயிலுக்குச் சென்றார். அங்குள்ள மயில்கள் எல்லாம் சுவாதியைக் கண்டதும் ஓடிவந்தனவாம். அவரைச் சுற்றிவளைத்துக்கொண்டு கொத்த ஆரம்பித்தன.

சுவாதி கூச்சத்தால் நெளிந்து போனார். அத்தனையும் ஆண்மயில்களாம். மயில்களுக்கு வேர்க்கடலை போட்டபின்னர்தான் சுவாதி மீண்டுவர முடிந்திருக்கிறது.

## ஒரு காட்சி—35 இலட்சம்

ஊர்மிளாதான் இன்றைய இந்திப் படவுலகில் வீசும் கவர்ச்சிப் புயல். 'இந்தியன்' படத்தில் கமலுடன் நடித்து தமிழ்ப்பட இரசிகர்களுக்கும் கவர்ச்சித் தீனி போட்டவர்.

இன்னொரு தமிழ்ப் படத்திலும் கவர்ச்சித் தரிசனம் தரப்போகிறார். படத்தின் பெயர் 'கோடீஸ்வரன்'. படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டும்தான் இந்தக் கவர்ச்சிப் புயல் வீசும். அதற்காக கொடுக்கப்படப்போகும் ஊதியம் எவ்வளவு தெரியுமா? 35 இலட்சம்!

## மந்த்ராவின் ஆசை

மந்த்ராவுக்கு ஒரே ஒரு பெரிய ஆசைதான் உண்டாம். ஒரே ஒரு படத்திலாவது ரஜினியின் ஜோடியாக நடிக்க வேண்டும் என்பதுதான் அந்த ஒரே ஒரு ஆசையாம்.

மந்த்ராவின் ஒரே ஒரு ஆசையை ரஜினி பரிசீலிப்பாரா தெரியவில்லை. இதற்கிடையே 'தேடினேன்வந்தது' படத்தில் பிரபு ஜோடியாக நடித்ததில் இருந்து பிரபு புராணமும் பாடுகிறார் மந்த்ரா.

'தேடினேன் வந்தது' என்று பிரபுவும் மந்த்ராவுடன் அன்பாகத்தான் இருந்தார். ஆனால் படம்தான் எதிர்பார்த்தளவு வசூலாகவில்லை. படம் மட்டும் பிய்த்துக் கொண்டு ஓடியிருந்தால் பிரபு-மந்த்ரா ஜோடி பிரபு-குஷ்பு ஜோடிபோல பேசப்பட்டிருக்குமாம்.



## காதோடு சொல்லுகிறோம்

சங்கீதமான நடிகைக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புக்கள் வருமாம். பலவற்றில் ஒரே கசமுசா பேச்சுத்தானாம். அந்த அழைப்புகளுக்கு தாய்க்குலம்தான் பதிலடி கொடுத்து வந்தாராம். சமீப காலமாக நடிகையே போனை எடுத்து கிளுகிளுப்பாக பேசிவிட்டு 'கட்' பண்ணிவிடுகிறாராம். அதுவும் ஒரு பொழுதுபோக்குத்தானாம்.

முக அழகு கெட்டு வருவதாக முன்றெழுத்து 'நக்' நடிகை சோகத்தில் இருக்கிறார். போகிற போக்கில் சுருக்கங்கள் அதிகமாகி அவ்வையார் முகம் போல ஆகிவிடுமோ என்றும் கலக்கத்தில் இருக்கிறார். குமார நடிகருடன் தற்போது சற்று இடைவெளி ஏற்பட்டதற்கும் அதுதான் காரணமோ எனவும் தவிக்கிறாராம். விரைவில் 'பிளாஸ்டிக் சர்ஜரி' செய்யப் போவதாகத் தகவல்.

'ராம்' என பெயர் ஆரம்பிக்கும் முன்றெழுத்து நடிகருக்கும், அடிதடி சாந்தி நடிகைக்கும் இடையே அப்படியொரு பாசப் பிணைப்பு. தொடர்ந்து சிபாரிசு செய்கிறார் சாந்தி. இதனை தெரிந்துவைத்துள்ள சாந்தி போன்ற முதிர்ந்த நடிகைகள் பலரும் நடிகருடன் நட்பு கொள்ள ஆரம்பித்துள்ளனராம். சமீபத்தில் நடிகரை அழைத்து விருந்து கொடுத்தவர் சாரத மான நடிகையாம்.

சகலகலாவல்லவரான சூப்பர் நடிகருடன் நடிக்க கிடைத்த வாய்ப்பை தவறவிட்டதால் மீன் நடிகைக்கு உண்மையாகவே வருத்தம்தான். படைப்பாளிகள் பக்கம் உள்ள நடிகையின் காதலரான இயக்குநர்தான் கோடு கிழித்தாராம். அதுதான் நடிகையால் தாண்ட முடியவில்லையாம். தாண்ட முடியாவிட்டாலும் ச்கல கலாவல்லரின்மீது மரியாதை வைத்துள்ளாராம்.

## கௌதமிக்கு 'சாசனம்'

'உதிரிப்பூக்கள்' 'ஜானி', 'முள்ளும் மலரும்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் மகேந்திரன். இப்போது அன்றாட செலவுக்கே கஷ்டப்படுகிறார்.

தேசிய திரைப்படக் கழகம் தயாரிக்கும் படம் ஒன்றை இயக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளது. படத்தின் பெயர், 'சாசனம்'. அரவிந்தசாமி, கௌதமி ஜோடியாக நடிக்கின்றனர். கல்யாணம் பண்ணிக்கொண்டு சினிமா உலகுக்கு கையசைக்க முன்னர் முடியுமானவரை கலைச்சேவை செய்து விட்டுப் போவதுதான் கௌதமியின் ஆசையாம். மருதநாயகத்தில் நடித்து கமலிடம் முத்தம் வாங்கும் பாக்கியம் பெறாவிட்டாலும், இளம் ஹீரோவான அரவிந்தசாமியுடன் ஜோடிசேர வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தலைவாசல் விஜய், மனோரமா, புதுமுகம் சாதனா ஆகியோரும் நடிக்கின்றனர். இசை பாலபாரதி.

## 'ப்ரியமுடன்' விஜய்

இளம் ஹீரோக்களில் விஜய் காட்டில்தான் மழை. பல படங்கள் கைவசம் உள்ளன. இறுதியாக விஜய் ஒப்பந்தமாகியுள்ள படத்தின் பெயர் 'ப்ரியமுடன்'. விஜய்க்கு ஜோடி கவுசல்யா.

இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகரிடம் உதவி இயக்குநராக இருந்த வின்சென்ட் செல்வா இப்படத்தின் மூலம் இயக்குநராகிறார்.

மணிவண்ணன், எஸ்.எஸ்.சந்திரன், ஜெய் கணேஷ் உட்பட பலர் நடிக்கின்றனர். இசை, தேவா.

## உஷ்!

நடிகை சரிதாவின் கணவர் முகேஷ் மலையாள நடிகர். இருவரும் விரைவில் பிரியப் போகின்றனர். நடிகை வாணி விஸ்வநாத் வீட்டில் தங்கத் தொடங்கி விட்டார் முகேஷ். சரிதா அப்செட்!



"காதல் மயக்கம் — அழகிய கண்கள் துடிக்கும் ஆலிங்கனங்கள் பரவசம் — இங்கு அனுமதி இலவசம்!"

—வைரமுத்து

ராம்ஜி-மைனா
படம்: வீரபாண்டிக் கோட்டையிலே



முகப்பில்
பிரசாந்த்
வினிதா

## 'கால் வைக்க மாட்டேன்'

'மருதநாயகம்' படத்தில் கவிஞர் வைரமுத்துவை நடிக்க வைக்க ஆசைப்பட்டார் கமல். தொலைபேசியூடாக அணுகினார்.

"மருதநாயகத்தில் ஒரு நல்ல பாத்திரம் உண்டு நடிக்க முடியுமா?" என்று கேட்டார் கமல்.

வைரமுத்துவுக்கு லேசான தயக்கம். "என்ன பாத்திரம்?" என்று கேட்டார்.

"மறவர்படைத் தளபதியாக நடிக்கலாம். மருதநாயகத்தின் நெஞ்சில் கால்வைத்தபடி வீரமாக வசனம் பேசவேண்டும்" என்றார் கமல்.

உடனே வைரமுத்து கவிதை நடையில் சொன்னது இது:

"என் நெஞ்சில் கை வைத்துச் சொல்கிறேன், நான் உங்கள் நெஞ்சில் கால் வைக்க மாட்டேன்!"

உண்மையில் அதற்காகத்தான் மறுத்தாரா, அல்லது படைப்பாளிகளை பகைப்பானேன் என்று தயங்கினாரா?

## அன்புக் கட்டளை

'பொற்காலம்' படத்தைப் பார்த்த பாரதிராஜா பிரமித்துவிட்டாராம். இயக்குநர் 'சேரனை கட்டித்தழுவி, 'நீதான் என் சிஷ்யன்' என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருக்கிறார். அது மட்டுமா, "இந்தா சிஷ்யா, பிடி முற் பணத்தை" என்று தன் சொந்த தயாரிப்பை இயக்கச் சொல்லியும் விட்டார். தனது மகனையும் சேரனிடம் ஒப்படைத்து, "இவனை பெரிய கதாநாயகனாக்கிக் காட்டு" என்று அன்புக் கட்டளையும் போட்டிருக்கிறார்.

## 'இந்தியா ருடே'

சரத்குமார் கதாநாயகனாக நடிக்க, 'இந்தியா ருடே' என்ற பெயரில் படம் எடுக்க முயற்சி நடந்தது. பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இப்போது மம்முட்டி, மீனா ஜோடியாக நடிக்கும் படத்திற்கு 'இந்தியா ருடே' என்று பெயரிட்டுள்ளனர்.

இயக்கம், பிரதாப்ராஜ், இசை, தேவா. மணிவண்ணன், விஜயகுமார், உதயப்பிரகாஷ், தலைவாசல் விஜய் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## கடும் நிபந்தனை

'உயிரோடு உயிராக' படத்தில் அஜித் குமாரின் ஜோடியாக நடிப்பவர் ரிச்சா. பாடல் காட்சிகளில் அஜித்குமாரும், ரிச்சாவும் உடலோடு உடலாகி நடிக்கின்றனர்.

ரிச்சாவுக்கு துணையாக படப்பிடிப்புக்கு வருகிறார் அவரது தாய்க்குலம். மகளுக்கு கண்டிப்பான கட்டளை ஒன்று பிறப்பித்துள்ளாராம்.

"நடிகர்களுடன் இணைந்து நடிக்கும்போது, எக்கட்டத்திலும் உணர்ச்சிவசப்படக் கூடாது. நெருக்கமாக நடிக்கும்போது மனதை இறுக்கமாக வைத்திருக்க வேண்டும்." என்று கட்டளை மற்றும் நிபந்தனை போட்டுத்தான் நடிக்க வைக்கிறாராம்.

## ஏமாற்றம் கொடுத்த நடிகை

'இனியவளே' படத்தில் பிரபுவுக்கு ஜோடி கீர்த்தி ரெட்டி என்பது தெரிந்ததே. கீர்த்தி ரெட்டியின் வயிற்றை ரொட்டிக்கு மா பிசைவதுபோல பிசைந்தாராம் பிரபு. இக் காட்சி படமாக்கப்பட்டபோது, அந்தக் கண்கொள்ளாக் காட்சியை இரசித்துக் கொண்டிருந்தார் கீர்த்திரெட்டியின் அம்மா.

கீர்த்தி ரெட்டியின் குடும்பம் மிக வசதியானது. பெங்களூரில் பங்களாவும் இருக்கிறது. அதனால் ஏனைய நடிகைகளைப் போல கீர்த்தி ரெட்டியை அவர் விருப்பமின்றி யாரும் நெருங்க முடியாது.

'கல்யாண சுந்தரம்' படத்தில் பார்த்திபன் ஜோடியாக நடிக்கிறார் கீர்த்தி ரெட்டி. படப்பிடிப்பின்போது புது நடிகையாச்சே என்று சில்மிஷம் பண்ணினாராம் நடிகர். படப்பிடிப்பு கோவை மாவட்டத்தில் நடந்தது. அங்கேயே தங்குமாறு நடிகர் விண்ணப்பம் போட்டாராம்.

வெளிப்புறப் படப்பிடிப்புக்களில் ஒரே ஹொட்டலில் தங்குவது பல காரியங்களுக்கு வசதியாம். அதனை முன்னிட்டே நடிகரும் விண்ணப்பம் போட்டாராம். ஆனால் நடிகையோ, கோவை நகருக்கு சென்று பெரிய ஹொட்டல் ஒன்றில் தாய்க்குலத்துடன் தங்கினாராம். பார்த்திபனுக்கு பலத்த ஏமாற்றம்.



படிப்பகம்

# பெண்ணும் முட்கம்பிகளும்

பெண்ணையும் தன்னைப் போல் ஒரு மனித ஜீவியாக, தனக்கிருக்கும் நிறைகளும், குறைகளும் அவளுக்கும் இயல்பே என்பதை உணர்கின்ற ஒரு நவீன சிந்தனை இன்று வரை நமக்கேற்படவில்லை.

ஒழுக்கங்களின் உறைகல் 'செக்ஸ்' அல்ல என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**பெண்ணை தெய்வம் என்று பூஜிப்பதைவிட உணர்ச்சிகள் உள்ள, உரிமைகள் உள்ள, சக மனுசி என்று மதியுங்கள்!**

நாம் நமது பழைய விலங்குகளை அறுத்தெறியாமல், அதற்கு புதிய முலாம் பூசிக் கொள்வதன் மூலம் வளர்ந்துவிட்டவர்களாகிவிட முடியாது.

இன்று பெண் கல்வியும், பெண்களுக்கு உத்தியோக வாய்ப்பும் முன்பு இருந்ததைவிட அதிகமாகி இருக்கிறது. ஆனாலும் அவள் தன் கணவனுக்கு அடிமையாக வாழ்ந்த போது இருந்த அளவுக்குக்கூடச் சுதந்திரம் இல்லாதவளாகவும், நிம்மதியற்றும் வாழ்கின்ற கொடுமைகளையும் என்னால் நிறைய சந்திக்க முடிகிறது.

இன்றைய நமது தமிழகத்தில் வளர்ச்சியுள்ள சராசரித் தமிழ்ப் பெண் என்பவள், படிப்பதற்கும், உத்தியோகம் செய்வதற்கும், சம்பாதித்துக் கொண்டு வ்ந்து கொடுப்பதற்கும் ஓர் ஆணுக்கு இணையானவளாக வளர்ந்திருக்கிறாள்.

அப்படியிருந்தும் அவள் இந்த சமூகத்தின் கைதி மாதிரிக் கண்காணிக்கப்படுகிறாள்.

இரண்டு பக்கமும் அறியாமை அறியாமை என்கிற, அவதூறு என்கிற வேலி கட்டி அதன் வழியே இட் பக்கம், அப் பக்கம் பார்க்காமல் நடந்து செல்ல அவள் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள.

கொஞ்சம் சுயேச்சையாக நடந்து செல்ல அவள் முற்பட்டால், அந்த முட்கம்பிகள்



அவள் மீது கீறிவிடும். கீறிவிடும் என்ற பயமுறுத்தல் சதா நேரமும் அவளை நடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தச் சமூகமாகட்டும், அவளைச் சேர்ந்த குடும்பமாகட்டும், அந்த முள் கீறி விட்டால் அதனை விலக்க நினைப்பதே இல்லை.

மாறாகக் கீறப்பட்ட அவளையே பழிக்கு உள்ளாக்கும். அவளை தீயிலிட்டு விட்டால் எல்லாருக்கும் திருப்தி.

இந்தச் சமூக நிலையால் பாதிக்கப்பட்ட பெண் எத்தனையோ போதைகளில் தன்னை மறந்து வாழ வேண்டி இருக்கிறது. இவள் எப்படித் தனது கணவனின் இனிய பாதியாக வாழ முடியும்?

அவர்களது உணர்ச்சிகளும், சுதந்திரமும் நசுக்கப்பட்டதுபோலவே, ஆன்ம வளமும் குன்றிப் போய்ச் சில்லறை உணர்ச்சிகளுக்குச் சீக்கிரம் அவர்கள் இரையாகி விடுகிறார்கள்.

மனித குல வாழ்வில் மிகப் புனிதமானது தனி மனிதனின் சுதந்திரம். அதை நொறுக்கி முடமாக்கிவிட்டு, நாம் எந்தப் புனிதத்தையும் காப்பாற்றிவிடமுடியாது.

**(தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், முற்போக்குச் சிந்தனையாளருமான ஜெயகாந்தன் தன் நாவல் ஒன்றுக்காக எழுதிய முன்னுரையில் இருந்து பெறப்பட்டது.)**

## பாப்பா வரும் நாள்

'அழகு ரதம் பிறக்கும், அது அசைஞ்சு அசைஞ்சு நடக்கும்' என்கின்ற கனவில் மிதக்கும் கர்ப்பிணிப் பெண்களே! உங்களின் பிரசவ தேதியை இந்த அட்டவணையைப் பார்த்து எளிதாய்த் தெரிந்து கொள்ளலாம்.

கீழே 3 கட்டமாக ஓர் அட்டவணை தரப்பட்டிருக்கிறது.

இந்த அட்டவணைப்படி உதாரணமாக உங்களின் மாதவிலக்குத் திகதி ஓகஸ்ட் 28 என்று வைத்துக் கொள்ளுங்கள்.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ஜனவரி | 7 | ஒக்டோபர் |
| பெப்ரவரி | 7 | நவம்பர் |
| மார்ச் | 5 | டிசம்பர் |
| ஏப்ரல் | 4 | ஜனவரி |
| மே | 4 | பெப்ரவரி |
| ஜூன் | 7 | மார்ச் |
| ஜூலை | 6 | ஏப்ரல் |
| ஓகஸ்ட் | 7 | மே |
| செப்டெம்பர் | 7 | ஜூன் |
| ஒக்டோபர் | 7 | ஜூலை |
| நவம்பர் | 7 | ஓகஸ்ட் |
| டிசம்பர் | 6 | செப்டெம்பர் |

இப்போது நீங்கள் அட்டவணையில் உள்ள 1ம் கட்டத்தில் இருக்கும் ஓகஸ்ட் மாதத்திற்கு எதிரான எண்ணைப்பாருங்கள். அந்த எண்-7 அதை மாதவிலக்குத் தேதியோடு கூட்டுங்கள்.

(ஓகஸ்ட் 28+7=35)

இனி 1ம் கட்ட ஓகஸ்ட்டிற்கு நேராக



இருக்கும் 3ம் கட்டத்தைப் டாருங்கள். மே மாதம் வருகிறதல்லவா? மே மாதத்தில் 35ம் திகதி கிடையாது என்பதால் அதற்கு அடுத்த ஜூன் மாதம் 4ம் திகதி உங்கள் பிரசவத்திகதி ஆகும்.

சில குட்டிப்பாப்பாக்கள் அவசரப்பட்டு முன்னதாகவே ஓடி வந்தும் விடலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CU

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-12-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-:772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 12

புவனா

மரத்தின் பின்னால் ஒரு நபர் மறைந்து கொள்வதைக் கண்ட டயானா உடனடியாக சாள்ஸ்சுக்கு அதனைத் தெரிவித்தாள்.

மீன்பிடித்துக் கொண்டிருந்த சாள்ஸ் தூண்டிலை அப்படியே போட்டுவிட்டு அந்த மரத்தை நோக்கிச் சென்றபோது, கமராவுடன் ஒரு ஆள் ஓடுவதைக் கண்டார்.

தங்கள் இருவரையும் ஒன்றாக சேர்த்து படம் எடுக்கத்தான் அந்த நபர் முயற்சித்திருக்கிறான் என்பது இருவருக்கும் தெரிந்துபோனது.

"இனிமேல் இப்படியான பகிரங்க இடங்களில் சந்திப்பதைத் தவிர்க்கலாமே?" என்று டயானா சொல்லிப்பார்த்தாள்.

"உன்னை ஒருநாள் காணாவிட்டால்கூட என்னால் தாங்கமுடியாது!" எனக் கூறினார் சாள்ஸ்.

சந்திக்கும் இடங்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

படகில் சுற்றி வருதல், தோட்டக் காடுகளைச் சுற்றிப்பார்த்தல் என்று நாளொரு இடமாகச் சென்றனர்.

இயற்கையை இரசிப்பதில் இணையற்ற விருப்பம் கொண்ட டயானாவுக்கு அவ்வாறு சுற்றுவது மகிழ்ச்சியளித்தது.

படகில், நடுக்கடலில் வைத்து டயானாவை முத்தமிடுவார் சாள்ஸ்.

குளிர்ந்த காற்றும், இதமான சுற்றுப்புறச் சூழலும், சூடான முத்தமும் டயானாவை மெய்மறக்கச் செய்யும். சாள்ஸ்சின் அணைப்பு கதகதப்பாக இருக்கும்.

தம்பதியான பின்னர் கிடைக்காத இனிய பொழுதுகள், இருவரும் காதலர்களாக இருந்தபோது கிடைத்தன.

காடுகளில் துள்ளியோடும் மான்கள், ஏரிகளில் குதித்தோடும் மீன்கள், சிறகசைத்து சடசடத்து பறக்கும் பறவைகள் எல்லாமே டயானாவுக்கு மேலும் மேலும் அழகாகத் தெரிந்தன.

சாள்ஸ்சுக்கு அத்தனை இரசனை இல்லாவிட்டாலும், டயானாவை தனிமையில் இரசிக்கவும், இதமாக அணைக்கவும் அந்தச் சூழல்கள் உதவின.

நீச்சல் உடை உட்பட, உடலின் பாகங்கள் தெரியக்கூடிய உடைகளைப் போட்டுக் கொண்டும் புகைப்படங்கள் எடுத்து வைத்திருந்தாள்.

தனது புகைப்படம் பத்திரிகைகளில் வந்ததைக் கண்டதும் முதலில் டயானா மகிழ்ச்சிப்பட்டாள். சாள்ஸ்சுடன் இணைந்து வந்திருக்கிறதே என்பதால் பதற்றப்பட்டாள். தங்கள் காதல் பிரிட்டன் மக்களுக்கு சுவாரசியமான செய்தியாகிவிட்டதை அறிந்தபோது சற்றே கர்வப் பட்டாள்.

## நிலையில்லாத மனம்

எப்போதுமே டயானாவின் மனம் ஒரு நிலையில் நிற்காது. அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும்.

"இன்று சாள்ஸ் வரச்சொன்னார். நான் போகமாட்டேன். தினமும் சென்றால் திகட்டிவிடும். ஒரு 'திரில்' இருக்காது!" என்பாள்.

பின்னர் நன்றாக உடை அணிந்துகொண்டு, "போகாவிட்டால் தவறாக நினைப்பார்" எனச் சொல்லிவிட்டு புறப்பட்டுச் சென்றுவிடுவாள்.

டயானாவின் தோழிகளுக்கு இது பழக்கப்பட்ட குணாம்சம். தங்களுக்குள் சொல்லிச் சிரித்துக் கொள்வார்கள்.

அடிக்கடி தன் முடிவுகளை மாற்றிக் கொள்பவளாக இருந்தாலும், துணிச்சலான முடிவுகளை எடுப்பதற்கும் டயானா பின் நிற்பதில்லை.

தனது மனதுக்கு சரியென்று பட்டு விட்டால், வேறு யாராலும் அவளைத் தடுத்து நிறுத்த முடியாது, தனது முடிவை எடுத்தே தீருவாள். அதுதான் டயானா.

பத்திரிகைகளில் படங்கள் வந்தபோதும் கூட, தனது தந்தையாரோ, சிறிய தாயாரோ தன்னிடம் எதுவும் கேட்கவில்லையே என நினைத்தாள் டயானா.

தன்னைப் பற்றிய எவ்வித கவலையும் இல்லாமல், எக்கேடு கெட்டும் போகட்டும் என்று இருக்கிறார்களே எனவும் டயானா வருத்தமுற்றாள்.

ஆனால், டயானா வீட்டாரும், மகாராணி



பாடசாலைத்தோழி கரோலினுடன் டயானா

குடும்பத்தாரும் திரைமறைவில் திருமணப் பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டனர்.

அந்த விடயத்தை டயானாவிடம் சொல்லவில்லை. சாள்ஸ்சை டயானா காதலிப்பது தெரியும்தானே. அதனால் திருமண ஏற்பாட்டை செய்து முடித்துவிட்டு இறுதியாகக் கூறினால், இன்ப அதிர்ச்சியாக இருக்கும் எனக் கருதி மறைத்து வைத்தனர்.

## தாழ்வு மனப்பான்மை

டயானாவைக் காதலிக்கும்போதே சாள்ஸ்சுக்குள் தாழ்வு மனப்பான்மை குடிகொண்டிருந்தது. தங்கள் இருவருக்கும் இடையேயான வயது வித்தியாசம் பற்றியே சாள்ஸ் உள்ளூரப் பயந்தார்.

மான்குட்டிபோல அழகிலும், திமிறும் குதிரையைப்போல இளமை முறுக்கிலும் காணப்படும் டயானாவுக்கு தான் பொருத்தமானவனா என அடிக்கடி அங்கலாய்த்தார் சாள்ஸ்.

டயானாவை முத்தமிடும் போதும், கட்டியணைக்கும்போதும்

## புகைப்படம் எடுக்க ஆசை

அவள் முகபாவங்கள் எப்படி இருக்கின்றன என்பதை கூர்ந்து கவனித்தார்.

டயானாவோ சாள்ஸ்சின் ஒவ்வோர் முத்தத்திலும் சிலிர்த்தாள். ஒவ்வோர் அத்துமீறலுக்கும் .முகம் சிவந்தாள். அத்துமீறல்களுக்கு கொஞ்சமாய் அனுமதித்தாள்.

அந்தச் சமயங்களில் சாள்ஸ்சும் வானத்தில் பறப்பார். பின்னர் டயானாவைப் பிரிந்து தனிமையில் இருக்கும்போது, மறுபடி தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

சாள்ஸ்சும் டயானாவும் தினமும் சந்திக்கும் இடங்களை மாற்றிக்கொண்டபோதும் கூட், புகைப்படப்பிடிப்பாளர்கள் மோப்பம் பிடித்துவிட்டனர்.

இருவரும் அறியாமலேயே கமராக்கள் 'கிளிக்' செய்தன. இரகசியமாய் வளர்ந்த காதலைப் பதிவு செய்தன.

பத்திரிகைகளில் அப் புகைப்படங்கள் வந்தபோதுதான் சாள்ஸ்சும், டயானாவும் ஆச்சரியப்பட்டனர்.

டயானாவுக்கு சிறு வயதில் இருந்தே புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பது என்றால் அலாதி ஆசை.



சாள்ஸ்சுக்கு மட்டும் திருமண ஏற்பாடுகள் அரசல் புரசலாகத் தெரிந்துவிட்டது.

தாழ்வு மனப்பான்மை தலைதூக்கி அவரை ஆட்டிப்படைக்க ஆரம்பித்தது.

## சாள்ஸ் பயணம்

மனக்குழப்பத்துடன் அரண்மனைக்குள் இருக்க விரும்பாத சாள்ஸ், சுவிற்ஸர்லாந்துக்கு பயணம் செய்தார்.

டயானாவுக்கு சொல்லிக் கொள்ளாமல் சாள்ஸ் சென்றுவிட்டதால், டயானாவுக்கு ஒரு புறம் வருத்தமாகவும், மறுபுறம் கோப மாகவும் இருந்தது.

சில நாட்களின் பின்னர் சாள்ஸ் டயானாவுக்கு ஃபோன் சொய்தார். டயானா சரியாகப் பேசவில்லை. சாள்ஸ் சமாதானம் கூறி டயானாவின் கோபத்தை துடைக்கப் படாதபாடு படவேண்டி இருந்தது.

"நான் திரும்பி



வந்ததும் உன்னுடன் முக்கிய விஷயம் பேசவேண்டும்" என்று சாள்ஸ் கூறினார்.

அப்படி என்ன முக்கிய விஷயம் என டயானா குழம்பிப்போனாள். சாள்ஸ் விரைவாக வந்து அந்த முக்கிய விஷயம் என்னவென்று சொல்லாவிட்டால், டயானாவுக்கு மண்டையே வெடித்துவிடும் போல் இருந்தது.

இன்னொரு உண்மையும் டயானாவுக்கு உறுத்தியது.

சாள்ஸ்சைப் பிரிந்திருந்த அந்த சில நாட்களில் நிலை கொள்ளாமல் தவித்துப் போனாள் டயானா.

சாள்ஸ் இல்லாமல் தன்னால் இருக்க முடியாது, சாள்ஸ்மீது தன் மனம் ஆழமாக ஈடுபாடு கொண்டுள்ளது என்ற உண்மையை பிரிவு நன்கு உணர்த்தியது.

பிரிவுதான் உறவின் கனத்தை பல சமயங்களில் உணர்த்துகிறது.

ஒருவேளை சாள்ஸ் வந்ததும், தன்னை மறந்துவிடும்படி கூறப்போகிறாரோ? என்றும் பயந்தாள் டயானா.

1981 பெப்ரவரி 3ம் திகதி சாள்ஸ் சுவிற்ஸர்லாந்தில் இருந்து இங்கிலாந்துக்கு திரும்பி வந்தார்.

சுவிற்ஸர்லாந்தில் இருந்தபோது, சில இளம் பெண்களுடன் சாள்ஸ் உறவு கொண்டார். தன்னால் சகஜமாக நடந்து கொள்ள முடிகிறதா என்று பரீட்சித்துப் பார்க்க சாள்ஸ் கையாண்ட முறை அது என்று பின்னர் சில அந்தரங்கத் தகவல்கள் வெளியாகின.

எப்படியோ சுவிற்ஸர்லாந்து பயணம் சாள்ஸ்சுக்கு முன்பிருந்ததைவிட தன்னம்பிக்கையை சிறிது அதிகரித்திருந்தது.

## வின்சர் மாளிகையில்

டயானாவை வின்சர் மாளிகைக்கு அழைத்தார் சாள்ஸ்.

தன்னிடம் கூறிக்கொள்ளாமல் புறப்பட்டுச் சென்றதற்காக டயானா முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்தாள்.

"கோபமா? கோபமா?" என்று திருப்பித் திருப்பிக் கேட்டார் சாள்ஸ்.

"உன்னைக் கோபப்படுத்திப் பார்க்கத்தான் அப்படிச் செய்தேன்!" என்று பொய் சொன்னார் சாள்ஸ்.

காதலில் பொய் இனிக்கும். டயானாவுக்கும் இனித்தது.

"கோபத்திலும் நீ எத்தனை அழகாய் இருக்கிறாய் தெரியுமா?" எனக் கூறினார் சாள்ஸ்.

காதல் வசனங்கள், காதல் பொய்கள், காதல் புகழ்ச்சிகள் இவற்றில் சாதாரணர்களுக்கும், சக்கரவர்த்திகளுக்கும் வேறுபாடு இருப்பதில்லை.

டயானா புன்னகைத்தாள்.

சாள்ஸ் தன்கைக்குட்டையை விரித்து டயானாவின் இதழ்களுக்கு கீழே ஏந்தினார்.

"என்ன இது?" என்றாள் டயானா.

"முத்துக் கொட்டினால் சேகரிக்க சித்தமாயிருக்கிறேன்" என்றார் சாள்ஸ்.

முத்துக்கள் உரசினால்போல சிரித்தாள் டயானா.

நெற்றியில் முத்தமிட்டார் சாள்ஸ். அவள் கூந்தல் முடிகளை நீவிக்கொண்டே இருந்தார்.

"என்ன யோசனை?" இது டயானா.

"டயானா... உனக்கும், எனக்கும்..."

"என்ன சொல்லுங்களேன்?"

ஒவ்வொரு வார்த்தையால் எழுத்துக் கோர்ப்பதுபோன்று, "திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன." ஒருவிதமாய் சொல்லி முடித்தார்.

டயானாவின் தலைக்குள் பட்டுப்பூச்சிகள் சிறகடித்தன.

"உள்ளே வரலாமா?" என்று குரல் கேட்க, இருவரும் விலகினார்கள்.

இருவரையும் விழுங்குவது போன்று பார்த்துக் கொண்டே வந்தது வேறு யாருமல்ல–

கமீலா. (அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**செல்வி பி. பொன்னம்பலம்,**
557/15, ஹெவ்லொக் வீதி, பாமன்கடை, கொழும்பு-06.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




www.padippakam.com படிப்பகம்

www.padippakam.com



"மழை பெய்கிறது
ஊர் முழுவதும் ஈரமாகி
விட்டது
தமிழ் மக்கள்,
எருமைகளைப் போல்
எப்போதும்
ஈரத்திலேயே நிற்கிறார்கள்
ஈரத்திலேயே
உட்கார்ந்திருக்கிறார்கள்
ஈரத்திலேயே நடக்கிறார்கள்
ஈரத்திலேயே படுக்கிறார்கள்
ஈரத்திலேயே சமையல்,
ஈரத்திலேயே உணவு
உலர்ந்த தமிழன்
மருந்துக்குக்கூட
அகப்படமாட்டான்
ஓயாமல் குளிர்ந்த காற்று
வீசுகிறது
தமிழ்மக்களிலே பலருக்கு
ஜுரம் உண்டாகிறது...."

-மகாகவி.... சுப்பிர்மணிய பாரதியார் 'காற்று' என்ற தலைப்பில் எழுதிய வசன கவிதை.

## யுகாந்தப் பிரிவும்..... அந்த இறுதிக் கணங்களும்....!

'ஷெல்' மழை மேவிப் பொழிந்து
மனிதப் பயிர்கள் அழுக
எங்கள் யாழ் நகர் பூகம்பித்துக்
கொண்டிருந்த
அந்த வரலாற்றுக் கயிறிழுப்பு!
***
நாங்கள்
பாதுகாப்புத் தேடித்
திசைக் கொருவராய்
ஓடவேண்டியிருந்தது!
***
அன்றுகாலையும்,
சன்னங்கள் துளைத்த
பாதுகாப்பற்ற பிரதேசத்தில்
உனது இல்லம்!
***
எனினும்
காதலின் மகத்துவம்
என்னைக்
கட்டியிழுத்து வந்தது!
***
இறுதிக் கணங்கள் பற்றிய சோகம்
அடங்காக் குழந்தையாய்
உள்ளுக்குள் உதைத்துக் கொண்டிருக்க,
பயப்பிராந்தி அச்சுறுத்தும் மனத்தினால்
எதனையுமே இரசிக்க முடியவில்லை!
***
எங்கள்
கடந்த கால இனிமைகளை
இரைமீட்டுக் கொண்டோம்!
***
இலக்கற்ற திசையில்
சென்று கொண்டிருந்தது
எங்கள் மகிழ்ச்சிகரமான சம்பாஷணை!
***
திடீரென—
அருகில் வெடித்த குண்டு
சூழலின் யதார்த்தத்திற்கு அழைக்க,
("இன்னா தம்ம இவ்வுலகு")
***
அவசர அவசரமாக
எனது மதிய போசனம்,
அதில்
ஒருபிடி உனக்கும்,
அன்று முழுவதற்கும்
உனக்கு
அதுவே போதுமானதாயிருந்திருக்கும்!
***
விடைபெற எத்தனிக்கையில்
உன் அழகான
பஞ்சப் பாதங்களின்
மென்மையான ஸ்பரிசத்தின்மூலம்
உன் அழியாத அன்பினையும்
காலமெல்லாம் காத்திருக்கத் தயாரான
நம்பிக்கையூட்டலையும்
எனக்கு உணர்த்தினாய்!
***
வார்த்தைகள் செயலற்றுப்போன
அந்தச் சிறு நொடியில்
பதிலுக்கு..
நானும் அதுபோலத்தான்.
***

ம.பா.மகாலிங்கசிவம்.

## வெற்றுக் கண்ணீர்

இன்னுமேன்
சீறிக் கொண்டு
பொசுங்கி
வெடிக்கின்றாய்?
**
நீ, பூஜிப்பது
செத்த பிரான்
இல்லை,
சித்தச் சிவபிரானே
பின், ஏன்?
சுத்தமாய்
இரத்த ஆறுகள்
ஓடிக் கொண்டிருக்கின்றது?
புத்த வழிபாட்டின்
யுத்தக் கொலைபாடு
மாறவில்லையோ?
**
அமைதித் தேரில்
அலைய வரும்
சமாதானப் புறாக்களும்
சத்தமின்றி செத்து வீழும்
கட்டமிது!
**
மட்டமின்றி
கசிகின்றதே
இந்த
சிற்றிழத்தின்
நெரிசல்களிலே
வெற்றுக் கண்ணீர்!
**

என்.கே.கண்ணன்,
தம்பிலுவில்.

## யுத்தம் தந்த எச்சம்!

என்
அன்பிற்குரியவளே!
கல்விக் கூடத்திலோ
கல்லூரி வளாகத்திலோ
நம்
காதல் மலரவில்லை;
அகதி முகாமல்லவா
நமக்கு
காதல் கற்றுத்தந்தது.
•••
'பீச்சிலோ, பார்க்கிலோ'
நாம்
காதல் கதைபேசவில்லை;
பங்கர்களும்
வயல் வெளிகளும்
காடுகளுமல்லவா
நம்
காதல் கதை பேசுகின்றன!
•••
அன்பே!
பயப்பட வேண்டாம்
ஷெல்லடியென்ன
அணுகுண்டே போட்டாலும்
உள்நாட்டு யுத்தம்போல்
நம்
காதலும்
தொடர்ந்திருக்கும்;
யுத்தம் தந்த எச்சம்
நம்
காதல் ஒன்னுதானே!
•••

சிவசேகரம் சிவகுமார்,
கல்லடி, மட்டக்களப்பு.

## தேனீர் கிண்ணம்

## குமுறல்

குஞ்சு நிலா சௌக்கியமா
நெஞ்சிப்போ நிறஞ்சிருக்கா
பஞ்சவிழ்ந்து பறப்பது போல்
என் மனசு பிஞ்சிருச்சே!
0—0
உனக்கென்னை நினைவிருக்கா
நான் உருக்குலைந்த தெருவிளக்கா
உன்னருகில் நானிருந்து—
மண்டியிட்ட மடியிருக்கா!
0—0
என்னருகில் நீயிருந்து
கையளைந்து மகிழ்ந்திருந்த—
கணங்களென்ன பொய்யாமோ
அவை கடன்களென்று போமாமோ?
0—0
நிலவெறிந்த பின்னிரவில்
நாம் மட்டும் முற்றத்தில்
மன முருகி கட்டுண்டு
மயங்கிய நாள் இனிவருமா?
0—0
'குஞ்சு'ப் புறா நீயிப்போ
கூடுகட்டி வாழ்ந்திருக்க
மார்வெடித்து உன்னாலே
நானிங்கு விம்முறேண்டி!
0—0
கடலாடி கரைமோதி
முட்டி முட்டி அழுவதுபோல்
என் நாடி துடிதுடித்து
உன்னாலே விம்முதடி.
இது பொல்லாத தொல்லையடி!
0—0

என்.சுஹா.



← இன்றைய இசை ஞானியின் அன்றைய தோற்றம். வீடியோ கமராவுடன் நிற்பவர் இசைஞானி இளையராஜா. அருகில் சகோதரர்கள் கங்கை அமரன். பாஸ்கர்.

## அந்தநாள் ஞாபகம்

↓ இளையராஜாவும், பாரதிராஜாவும் சினிமாவுக்கு வரமுன்பே நண்பர்கள். தற்போதுதான் சிறு விரிசல். இது அந்தக் கால நட்பைச் சொல்லும் படம். கங்கை அமரன், இளையராஜா, பாரதிராஜா, பாஸ்கர்.



## யார் இவர்கள்?

↓ 'பார்த்த ஞாபகம் இல்லையோ?' இந்த நடிகையை. இன்று இவர் பேத்தியும் ஒரு நடிகை. சீதையின் இன்னொரு பெயர் இவர் பெயரில் இருக்கிறது.



↓ நடிகரை மணந்த நடிகை இவர். அந்தக் கால வெற்றிப் படங்களின் கதாநாயகி. விடைகள் உதவி 18ம் பக்கம்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(07.12.1997 தொடக்கம் 13.12.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தேகசுகம் பாதிப்பு, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் சகாயம், கௌரவமிகுதி. | பகல் | 12 | மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், பலவித நன்மை. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- அந்நியர் சகவாசம், மனப் பயம். | பகல் | 11 | மணி |
| **சனி**- உறவினர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, பெரியோர் பகை. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- பலவித நன்மை, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- உறவினரால் தொல்லை, மனக்கிலேசம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம். | மு.ப. | 10 | மணி |
| **சனி**- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- ஆடம்பரச் செலவு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| **திங்கள்**- காரிய சித்தி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வீண் முயற்சி, மனப் பயம். | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, பிரயாண மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **திங்கள்**- தொழில் மேன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- கடன்சுமை, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| **புதன்**- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- அந்நியர் நட்பு, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனப் பயம், தொழில் கேடு. | பகல் | 10 | மணி |
| **திங்கள்**- அந்நியர் சகாயம், கௌரவக் கேடு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், இனசனப் பகை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- பெரியோர் சகாயம், பலவிதச் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், புதன். |
| மகரம் | - வியாழன், வெள்ளி, செவ்வாய். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

★ சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் மேன்மை, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- குடும்ப சுகம், கௌரவமிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்** - தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- பெரியோர் சகாயம், பயனுள்ள செயல். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. | 11 | மணி |
| **திங்கள்**- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- பொருள் இழப்பு, மனஸ்தாபம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- வீண் விரயம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- பெரியோர் நட்பு, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- பிரயாணக் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| **சனி**- தொழில் கஷ்டம், உறவினர் பகை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- பயனுள்ள செயல், பண வரவு. | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பிரயாண மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, தொழில் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| **புதன்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- மனக் கலக்கம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- கடன் சுமை, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- பெரியோர் பகை, பொருள் இழப்பு. | மு.ப. | 10 | மணி |
| **வியாழன்**- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்

www.padippakam.com





உலாவும் மனச்சிறு புள்ளினை
-எங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில்
-ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ....?
-சுப்பிரமணிய பாரதியார்.

**பாப்பா முரசு சிறுகதை**

# சோமுவின் பந்தயம்



ஓர் ஊரில் சோமு என்பவன் இருந்தான். அவனிடம் ஓர் அதிசய பூனை இருந்தது.

அந்தப் பூனையின் வாயில் ஒரு தீப்பந்தத்தைக் கவ்வ வைத்து, அருகில் வைத்திருப்பான். அந்தப் பூனை, வாயில் இருக்கும் தீப்பந்தத்தை சோமு கீழே போடச் சொன்னால் மட்டும் போடும். வேறு யார் என்ன செய்தாலும் அதைக் கீழே போடாதவாறு பழக்கி வைத்திருந்தான்.

சோமு அந்த ஊரில் உள்ளவர்களிடம், பூனையின் வாயில் இருக்கும் தீப்பந்தத்தைக் கீழே வீழ்த்த முடியுமா? என்று பந்தயம் வைத்து அதில் வெற்றி பெற்று வந்தான்.

அவ்வூரில் இருப்பவர்கள் எல்லாரும் சோமுவுடன் பந்தயம்கட்டி தோற்று வந்தனர். பூனை சற்று சக்தி படைத்ததாக இருந்ததால் தீப்பந்தத்தை இறுக்கமாகக் கவ்விக் கொண்டு சோமுவை எப்போதும் வெற்றி பெற வைத்தது.

இதன் காரணமாக சோமுவுக்கு சற்றுத் தலைக்கனம் கூடியது.

இந்த விஷயம் அந்த ஊரில் இருக்கும் மாணிக்கம் என்பவரின் காதுக்கு எட்டியது. மாணிக்கம் மிகவும் புத்திசாலி. அவர், பந்தயத்தில் வென்று சோமுவின் தலைக்கனத்தை அடக்க வேண்டுமென்று எண்ணினார்.

அடுத்தநாள் மாணிக்கம், தான் சோமுவைப் பந்தயத்தில் வென்று காட்டுகிறேன் என்று கூறித் தன்னுடன் சில நண்பர்களை அழைத்துக்கொண்டு சோமுவின் வீட்டிற்குச் சென்றார்.

அங்கு சோமுவிடம் விஷயத்தைச் சொன்னார் மாணிக்கம். சோமு கேலியாகச் சிரித்துக்கொண்டே, பந்தயத்திற்குப் பூனையைத் தயார் செய்தான்.

ஒரு மூலையில் பூனை தீப்பந்தத்தைக் கவ்விக் கொண்டு நின்றது. பூனையின் அருகில் சென்ற மாணிக்கம் மெதுவாகத் தன்னிடமிருந்த வெற்றிலை, பாக்குப் பொட்டலத்தைப்' பிரித்து வெற்றிலை போட்டார்.

அந்தப் பொட்டலத்திற்குள் இன்னும் ஒரு பை இருந்தது. வெற்றிலை போடும் போது, அந்தப் பையைப் பிரித்து பூனையிடம் காட்டிவிட்டு, பொட்டலத்தை மூடிக்கொண்டு வந்தார் மாணிக்கம்.

அவ்வளவுதான். அடுத்த நொடியில் பூனை, தீப்பந்தத்தைக் கீழே போட்டு விட்டு மாணிக்கத்தின் பின்னால் ஓடி வந்தது.

பந்தயத்தில் தோல்வியுற்ற சோமு வெட்கித் தலைகுனிந்தான். அன்று முதல் சோமு தலைக்கனத்தை விட்டொழித்தான்.

சரி அதிசயப் பூனை தீப்பந்தத்தை கீழே போட்டுவிட்டு மாணிக்கத்தின் பின்னால் வந்தது எப்படி?

மாணிக்கம் வெற்றிலை, பாக்குப் பொட்டலத்துடன் ஒரு பையில் சில சிறிய மீன்களையும் சுற்றி எடுத்து வந்திருந்தான். மீன் வாடையை உணர்ந்த பூனை தீப்பந்தத்தைக் கீழே போட்டு விட்டு மாணிக்கத்தின் பின்னால் வந்தது.

# அதிசயம் - ஆனால் உண்மை!




**பழுதடையாத கப்பல்:**

நோர்வேயில் ஈட்ஸ்வோல் என்ற நகரத்தில் உள்ள ஏரியில் எஸ்.எஸ். ஸ்கிப் லாட்னர் என்ற கப்பல் 1856ல் முதன் முதலாக ஓடவிடப்பட்டது. இன்றுவரை இக்கப்பல் பழுதாகாமல் ஓடிக் கொண்டிருக்கிறது.

**விசித்திர ஒளிவட்டம்:**

சூரியனைச் சுற்றி 1913 நவம்பர் முதலாம் திகதி ஸ்பிரிங்ஃபீல்ட் என்னுமிடத்தில் இந்த மாதிரி ஒளி வட்டம் காணப்பட்டது.





**டைமண்ட் ஆமை:**

இந்த இரட்டைத்தலை ஆமை 1937ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள பவல்ஸ் என்ற இடத்தில் காணப்பட்டது.



**பீப்பாய் வடிவ விடுதி:**

ஜெர்மனியில் உள்ள தர்கேம் என்ற இடத்தில் உள்ள ஒரு பெரிய விடுதி சாராய பீப்பாய் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் இருபுறங்களிலும் சாராயப் போத்தல்கள் வடிவில் இரண்டு விளக்குக் கம்பங்களும்அமைக்கப்பட்டன.

# வாரம் ஒரு நாடு

## நைஜர்

தலைநகர் - நியாமே
பரப்பு - 12,67,000 சதுரகிலோமீட்டர்
மக்கள்தொகை - 92 இலட்சம்
மொழி - ஃபிரெஞ்சு, ஹாசா, ஜெர்மா
எழுத்தறிவு - 28%
சமயம் - இஸ்லாம், பழங்குடி சமயம்
நாணயம் - ஃபிராங்க்
தனிநபர் வருமானம் - 310 டொலர்

**அமைவிடம்:**

நைஜர் குடியரசு மேற்கு ஆபிரிக்காவின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

முன்னர் மேற்கு ஆபிரிக்காவின் பகுதியாகவிருந்தது. 1960ல் ஃபிரான்ஸிடம் இருந்து மேற்கு ஆபிரிக்கா சுதந்திரமடைந்தது. 1970ல் நைஜர் தனிச் சுதந்திர நாடானது. 1993 பெப்ரவரியில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. 1996ல் ஜனாதிபதி. ஆட்சிக்கவிழ்ப்பினால் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.



**பொருளாதாரம்:**

மிகக்குறைந்தளவு விவசாய வளங்களைப் பெற்றுள்ளது. முக்கிய விளைபொருட்கள் நிலக்கடலை, பருத்தி. முக்கிய தொழில் கால்நடை வளர்ப்பு. இங்கு யுரேனியம் அதிகளவில் கிடைக்கின்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ருபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.12.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 222
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 220

பரிசுக்குரியவர்:
எம். தினேஷ்குமார்,
க. ரோ.க. தமிழ் வித்தியாலயம், அம்பிட்டிய, கண்டி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.எம். நிலூஜான், கஜு/ஜீலான் மு.ம.கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | எம். ஸாகிர், நு/அல்மின்ஹாஜ் மு.ம.வி, ஹபுக்ஸ்தலாவ. |
| எஸ். வேணுகரன், கமு/ விஷ்ணுமகாவித்தியாலயம், பெரியநீலாவணை-01. | ஆ. அஜந்தன், தி/புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. |
| ஹ.ஃப்ஸா நியாஸ், நாவின்ன முஸ்லிம் வித்தியாலயம், நாவின்ன. | முகம்மது ஆமில், திரித்துவக் கல்லூரி, கண்டி. |
| யோ. சிவரஞ்சன், சிவானந்த வித்தியாலயம், கல்லடி, மட்டக்களப்பு. | சி. கோபிராஜ், வவுனியா தமிழ் ம.ம.வித்தியாலயம், வவுனியா. |
| குகதாஸ் மிதுனா, கார்மேல் பாத்திமா தேசியக்கல்லூரி, கல்முனை-01. | எஸ். ஸ்டெனோசன், புனித பெனடிக் கல்லூரி, கொழும்பு-13. |

# போப்பாண்டவர்

* உலகிலேயே மிகச் சிறிய புகையிரதப் பாதை, போப்பாண்டவர் வசிக்கும் வத்திக்கான் நகரில் உள்ளது. 30 கஜம் நீளமுள்ள இந்தப் புகையிரதப் பாதை இத்தாலி புகையிரதப் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.
* போப்பாண்டவருக்கென தனியாக ஒரு வானொலி நிலையம் உள்ளது. இது வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனியால் அமைக்கப்பட்டது.
* போப்பாண்டவர் வசிக்கும் வத்திக்கான் நகரில் இருந்து 40 மொழிகளில் புத்தகங்களும், பத்திரிகைகளும் அச்சாகின்றன. இவற்றில் தமிழும், சமஸ்கிருதமும் அடங்கும்.
* போப்பாண்டவருக்கு தங்க நிறமும், வெண்மை நிறமும் கொண்ட பட்டுக் கொடி உண்டு.
* போப்பாண்டவரின் உபயோகத்திற்கு தங்கத்திலான தொலைபேசியும் உண்டு.



* 'போப்' என்னும் சொல் 'பாபா' என்னும் இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து உருவானதாகும்.

# மின்சார மீன்


விலாங்கு மீனைப்போன்று நீண்ட உடலமைப்பைக் கொண்ட ஒரு வகை மீனின் பெயர் ஈல். இந்த மீனுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சக்தி உண்டு. இது சுமார் 500 வோல்ட்ஸ் மின்சாரத்தை தன் உடலில் உற்பத்தி செய்கிறது.

இந்த மீனின் உடலில் சுமார் 8 ஆயிரம் நுண்ணிய மின் உயிர் அணுக்கள் உள்ளன. இதன் தலை முதல் வால்வரை எப்போதும் மின்சக்தி ஓடிக் கொண்டிருக்கும்.

ஆனாலும் இந்த மீனின் மின்சார சக்தி இதே இனத்தைச் சேர்ந்த வேறு மீன்களைத் தாக்காது.

# பெயர் வந்தது எப்படி?

உலகிலேயே உயரமான சிகரம் 'எவரெஸ்ட்' சிகரம். இமய மலையின் கிழக்குத் தொடரில் அமைந்துள்ள இந்தச் சிகரத்தின் உயரம் 8848 மீட்டர்.



இதற்கு 'எவரெஸ்ட்' என்ற பெயர் வரக் காரணம் என்ன தெரியுமா? 1852ல் இந்திய அரசாங்கம் இந்தச் சிகரத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க ஜெனரல். சேர் ஜோர்ஜ் எவரெஸ்ட் என்பவருடைய தலைமையில் ஒரு குழுவை அனுப்பி வைத்தது. ஜோர்ஜ் எவரெஸ்ட் தலைமையிலான இக்குழு இந்திய அரசிடம் இந்தச் சிகரம் பற்றிய தகவல்களைக் கொடுத்தது.

இத்தகவல்களைப் பரிசீலித்து, ஜோர்ஜ் எவரெஸ்ட் தலைமையிலான குழுவைப் பாராட்டி இந்த மலைச் சிகரத்திற்கு 'எவரெஸ்ட்' என்று பெயரிடப்பட்டது.

# மிளகு




* **மிளகு என்றால் என்ன?**
உணவுப்பொருட்களில் பயன்படுத்தப்படுகின்ற ஒருவகை வாசனைப் பொருள்.
* **மிளகின் பிறப்பிடம் எது?**
ஆசியாக் கண்டம்.
* **மிளகின் காரமானச் சுவைக்குக் காரணம் என்ன?**
மிளகில் உள்ள 'அகிரிட் ரிசின்' என்ற பொருளாலும் மற்றும் அதில் உள்ள எண்ணெய்த் தன்மையாலும் காரமானச் சுவை கிடைக்கிறது.
* **உணவுப் பொருட்களுக்குப் பயன்படுவதைவிட, மிள்கினால் வேறு எதுவும் பயன் உள்ளதா?**
ஆம். வாயுத்தொல்லைகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது.
* **மிளகை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடுகள் எவை?**
இந்தோனேசியா, பிரேசில், இந்தியா.

# சூரியக் குடும்பம்

சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் உள்ளன. அவை குறிப்பிட்ட கால வட்டங்களில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த ஒன்பது கோள்களைத் தவிர பல்லாயிரக்கணக்கான சிறு கோள்களும் சூரியக்குடும்பத்தில் உள்ளன.

சூரியனைச் சுற்றியுள்ள இந்த ஒன்பது கோள்களும் வருமாறு:

1. புதன் (MERCURY)
2. வெள்ளி (VENUS)
3. பூமி (EARTH)
4. செவ்வாய் (MARS)
5. வியாழன் (JUPITER)
6. சனி (SATURN)
7. யுரேனஸ் (URANUS)
8. நெப்டியூன் (NEPTUNE)
9. புளூட்டோ (PLUTO)




இவற்றைத் தவிர, இந்த ஒன்பது கோள்களுக்கும் பல துணைக்கோள்கள் உள்ளன. சூரியனுக்கு அருகில் புதன் கிரகமும், தொலைவில் புளூட்டோ கிரகமும் உள்ளன.

17ம் நூற்றாண்டுவரை சூரியனைச் சுற்றி புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி என்ற ஆறு கோள்கள் மட்டுமே இருந்ததாகக் கருதப்பட்டது. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய மூன்று கடைசிக் கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# வாரம் ஒரு கிரைம் கதை

# தீர்ப்பு

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

சுந்தரேசன் அந்தக் காலை நேரத்தில் தன் அறையில் உட்கார்ந்து அந்தக் கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தான்.

கடிகாரம் மணி ஒன்பதைக் காட்டியது.

காவல் துறைக்கு,

இந்த சுந்தரேசனின் கடைசி வணக்கம். நீங்கள் இந்தக் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் நேரம் நான் விஷம் சாப்பிட்டு உயிரற்ற உடலாய் கிடந்திருப்பேன். நான் தற்கொலை செய்து கொள்வதற்குக் காரணம் எனக்கு வந்த உயிர்க் கொல்லி நோயான 'எய்ட்ஸ்'தான். இது நானே வரவழைத்துக் கொண்ட விபரீதம். காலா காலத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாமல் உடல் ஆசைப்பட்டபடி, மனம் போனபடி வாழ்க்கை நடத்தியதன் விளைவு...? இப்போது இந்த தற்கொலைக் கடிதத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். என் மரணத்துக்காக யாரையும் சந்தேகப்பட்டு அவர்களை துன்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
இவ்வுலகில் வாழ விரும்பாத,
சுந்தரேசன்.

கடிதத்தை எழுதி முடித்து அதை நான்காய் மடித்துக் கொண்டிருந்தபோது, அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

மேஜை ட்ராயருக்குள் கடிதத்தை மறைத்துவிட்டு வேகமாய் எழுந்துபோய் கதவைத் திறந்தான் சுந்தரேசன்.

வெளியே-

அவனுடைய நண்பன் பலராமன். கேட்டான்.

"என்னடா.... இன்னுமா ட்யூட்டிக்கு கிளம்பலே?"

"இ... இதோ கிளம்பிட்டிருக்கேன்."

"கிளம்பு... கிளம்பு...! இன்னிக்கு நம்ம வீட்ல ஒரே கெஸ்ட் கூட்டம். ராத்திரி சரியானபடி தூக்கமும் இல்லை. அதான் உன் ரூம்ல வந்து படுத்து ரெஸ்ட் எடுக்கலாம்னு.... புறப்பட்டேன். இன்னிக்கு உனக்கு பகல் ட்யூட்டி தானே...?"

"ஆ....ஆமா...."

"போய்ட்டு வா...! நான் ரூம்ல ரெஸ்ட் எடுத்துட்டு இருக்கேன்."

சுந்தரேசன் யோசித்தான்.

'இனி இவன் நகரமாட்டான்! இப்போது ட்யூட்டிக்குப் போய்விட்டு வந்து ராத்திரிக்கு காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டியதுதான்.'

"என்னடா யோசிக்கிறே...?"

"ஒண்ணுமில்லே நீ படுத்து தூங்கு... நான் ட்யூட்டிக்கு கிளம்பறேன்....!" சொன்ன சுந்தரேசன் அடுத்த பத்து நிமிஷத்திற்குள் ட்ரஸ் மாற்றிக் கொண்டு தற்கொலைக் கடிதம் இருந்த ட்ராயரை ஞாபகமாய் பூட்டிக் கொண்டு வேலைக்குக் கிளம்பினான்.

★★★

மாஜி சுகாதார அமைச்சர் பத்மநாபன் கோர்ட் வாசலில் நின்றிருந்தார். கழுத்தில், பெரிய ரோஜாமாலை 'உதட்டில் விரிந்த புன்னகை' சுற்றிலும் கட்சித் தொண்டர்கள் கூட்டம்.

கோஷம் எதிரொலித்தது.

"அண்ணன் பத்மநாபன்...."

"வாழ்க...!"

"பொய் வழக்குகளை".

"பொடிப் பொடியாக்குவோம்."

பத்திரிகை நிருபர்கள் பத்மநாபனை சூழ்ந்து கொண்டு கேள்விகளால் துளைக்க ஆரம்பித்தார்கள்.

"உங்கள் மீது போடப்பட்ட மருந்து ஊழல் வழக்கில் தீர்ப்பு உங்களுக்குச் சாதகமாக கிடைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"



"தர்மம் வென்றது. நான் போலி மருந்துகளை வாங்க அனுமதி கொடுத்ததால், அந்த மருந்துகளைச் சாப்பிட்ட ஏழுபேர் இறந்து போனார்கள் என்று என்மீது போட்ட வழக்கு இப்போது புஸ்வாணமாய் போயிற்று. மக்களுக்கு இப்போது உண்மை புரிந்திருக்கும்."

"நீங்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து சாட்சிகளை கலைத்து விட்டதாக..."

"அது கட்டுக்கதை..."

"எஃப்.ஐ.ஆர். ரிப்போர்ட்டிலிருந்து கோர்ட் வரைக்கும் உங்க பணம் விளையாடியதாக பரவலாய் ஒரு பேச்சு இருக்கிறதே"

பத்மநாபன் சிரித்தார்.

"அது பொய் வழக்குப்போட்டவர்களின் புலம்பல்."

"உங்கள் அடுத்த நடவடிக்கை என்ன?"

"என்மீது அபாண்டமாய் பழி சுமத்தி, வழக்கு போட்ட இந்த அரசின் மீது நான் மானநஷ்ட வழக்குப் போடப்போறேன். மேலும் இந்த அரசை டிஸ்மிஸ் செய்யக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி மாநிலம் தழுவிய போராட்டம் ஒன்றை கட்சி நடத்தும்....." சொன்ன பத்மநாபன் ரோஜா மாலையிலிருந்து இதழ்கள் உதிர உதிர தன் காரை நோக்கிப் போனார்.

கும்பல் கோஷித்துக் கொண்டே பின்னால் வந்தது.

"போடாதே! போடாதே!"

"பொய் வழக்கு போடாதே!"

"போட்ட வழக்குகளை"

"பொடிப் பொடியாக்குவோம்."

எல்லோரையும் பார்த்து கும்பிட்டுவிட்டு காருக்குள் ஏறினார் பத்மநாபன். கும்பலின் கோஷம் அதிகரித்தது.

கார் நகர்ந்தது.

பின் சீட்டில் பத்மநாபனும் அவருடைய தம்பியும் உட்கார்ந்திருக்க முன் சீட்டில் குடும்ப வக்கீல் கோபாலாச்சாரி.

கார் போக்குவரத்தில் கலந்ததும் பத்மநாபன் தன் தம்பியிடம் கேட்டார்.

"நாம வரப்போறதா ஊட்டி பங்களாவுக்குத்தகவல் அனுப்பிட்டியா ராஜீ...?"

"காலையிலேயே ஃபோன் பண்ணி சொல்லிட்டேன்."

"ஒரு மாசமாவது ஊட்டியில தங்கினாத்தான் என் மனசுக்குள்ளே இருக்கிற புழுக்கமெல்லாம் குறையும்."

வக்கீல் சிரித்தார்.

"இனிமே பழசைப் பத்தி நினைக்காதீங்கோ. உங்க கையில பணம் எக்கச்சக்கமா இருக்கப்போயி சாட்சிகளை கலைக்க முடிஞ்சுது. இல்லேன்னா நீங்க பண்ணின வேலைக்கு ஏழு வருஷமாவது உள்ளே போக வேண்டியிருக்கும்."

"ஆடு கால்பணம் சுமை கூலி முக்கால் பணங்கிற கதையா நான் மந்திரியா இருந்து தப்ப சம்பாதிச்ச பணமெல்லாம் இப்போ சாட்சிக்காரங்க பைகளுக்குள் போயிடுச்சு.... இனிமே அடுத்த தடவை ஆட்சிக்கு வந்தாத்தான் சம்பாதிக்க முடியும்...."

"அப்பவாவது கேர் ஃபுலா பண்ணுங்க... இது மாதிரி வெள்ளச் சோளமா மாட்டிக்காதீங்க..."

"ஜனங்க மறுபடியும் நம்ம கட்சியை நம்பி வோட்டு போடுவாங்களா?"

"இந்த ஆட்சி ஏதாவது தப்பு. பண்ணாமலா போயிடும்?"

◻◻◻

கார் ஊட்டி மலைப்பாதையில் ஏறிக் கொண்டிருந்தது.

சால்வையை எடுத்து போர்த்திக் கொண்டார் பத்மநாபன். வக்கீல் மப்ளரை சுற்றிக் கொண்டார்.

பத்மநாபனின் தம்பி ராஜு ஸ்வெட்டருக்குள் நுழைந்திருந்தான்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த ட்ரைவரின் தோளைத் தொட்டார் பத்மநாபன்.

"சுந்தரேசா...!"

"ஸ...ஸார்..."

"கோயமுத்தூர் கோர்ட் வாசல்ல புறப்பட்டதிலிருந்து ஒண்ணுமே பேசாம வர்றியே.... நான் விடுதலையானதுல உனக்கு சந்தோஷம் இல்லையா?"

"ரொம்ப சந்தோஷம் ஸார்...!"

"பின்னே... ஏன் முகம் வருத்தமா இருக்கு..."

"அது.... வந்து....ஸார்..."

"சும்மா... சொல்லு..."

சுந்தரேசன் தயங்கிட்டு கேட்டான்.

"ஸார்... எய்ட்ஸுக்கு மருந்து கண்டு பிடிச்சுட்டாங்களா...?"

"இல்லை...."

"அப்படீன்னா அந்த நோய் வந்தவங்க சாகவேண்டியதுதானா...?"

பத்மநாபன் அதிர்ச்சியால் சுந்தரேசனை ஏறிட்டார்.

"இப்ப எதுக்காக இந்த எய்ட்ஸ் பேச்சு...?"


"எனக்கு எய்ட்ஸ் இருக்கு ஸார்..."

"எ....என்ன...?"

"ஆமா....ஸார்... போனவாரம்தான் டாக்டர் ஒருத்தர் உறுதியா சொன்னார்..."

காரில் இருந்த மூன்று பேரும் ஒருத்தரையொருத்தர் திகைப்பாய் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சுந்தரேசன் சொன்னான்.

"ஸார்... இன்னிக்கு காலையில ட்யூட்டிக்கு புறப்பட்டு வர்றதுக்கு முந்தி தற்கொலை பண்ணிக்கலாம்னு லெட்டர் எழுதினேன். தற்கொலை பண்ணிக்கிறதுக்குள்ளே ஃப்ரெண்ட் ஒருத்தன் வந்துட்டான். சாயந்தரமா வந்து காரியத்தை முடிச்சுக்கலாம்னு ட்யூட்டிக்கு புறப்பட்டு வந்துட்டேன்."



பத்மநாபன் பதற்றப்பட்டார்.

"வே... வேண்டாம் சுந்தரேசா... தற்கொலை பண்ணிக்கிற எண்ணமெல்லாம் வேண்டாம். உன்னை ஒரு நல்ல டாக்டர் கிட்டே காட்டி..."

"பிரயோஜனம் இல்ல ஸார்...! மருந்தே இன்னும் கண்டுபிடிக்காத போது... டாக்டரைப் போய்ப் பார்த்து என்ன ஆகப்போகுது. நான் தற்கொலை பண்ணிக்கிற முடிவுக்கு தீர்மானமா வந்துட்டேன்."

வக்கீல் குறுக்கிட்டார்.

"வேண்டாம்.... தற்கொலை பண்ணிக்கிறது பாவம்...."

சுந்தரேசன் சிரித்தான்.

"இல்ல வக்கீல் ஸார். நான் மட்டும் தனியா தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப்போனா அது பாவகாரியம். ஆனா மூணு பாவாத்மாக்களை அழிச்சு என்னோட கூட்டிட்டுப்போனா அது புண்ணிய காரியம்."

"நீ...நீ... என்ன சொல்றே...?"

"சட்டத்தை பணம் கொடுத்து வாங்கலாம். ஆனா உண்மையையும், நியாயத்தையும் அப்படி வாங்கமுடியாது. போலி மருந்துகளுக்கு ஆர்டர் கொடுத்து ஒரு கோடி ரூபாய் ஊழல் பண்ணினீங்க. அந்தபோலி மருந்துகளுக்கு சில உயிர்கள் பலியாயிற்று. அந்த மரணங்கள் என்னைப் பொறுத்தவரைக்கும் கொலைகள்... நியாயப்படி கோர்ட் உங்களுக்கு மரணதண்டனை விதிச்சிருக்கணும். விதிக்கலை. காரணம் சாட்சிகளை நீங்க பணம் குடுத்து வாங்கிட்டீங்க. தீர்ப்பும் மாறிடுச்சு. ஆனா நான் இப்போ கொடுக்கப்போற தீர்ப்புத்தான் சரியான தீர்ப்பு. உங்களுக்கும் உங்க பாதக காரியங்களுக்கு துணையாய் இருந்த உங்க தம்பிக்கும், பொய்களை உண்மை மாதிரி பேசிய வக்கீலுக்கும் மரண தண்டனை விதிக்கிறேன்."

சொல்லிக் கொண்டே அந்த மலைப் பாதையின் வளைவில் ஸ்டியரிங்கை வேகமாய் சுழற்றி வளைத்தான் சுந்தரேசன்.

கார் ரோட்டோர குட்டையான மண் சுவரை இடித்துக்கொண்டு மலைப்பாதையின் அதளபாதாளத்துக்குள் விழுந்து பாறைகளில் மோதி அங்குலம் அங்குலமாய் சிதற ஆரம்பித்தது. ●

---

**புதிய பகுதி: கடித இலக்கியம்**

# "சென்று வருகிறேன்"

உலகின் தலைசிறந்த கெரில்லா போராட்ட தளபதிகளில் ஒருவர் சேகுவேரா. ஆர்ஜெண்டினா நாட்டில் பிறந்தார். கியூபா புரட்சியில் பிடல் காஸ்ரோவோடு கெரில்லாப் போரில் பங்கு கொண்டார்.

புரட்சியின் பின்னர் கியூபாவில் அமைச்சர் பதவி கிடைத்தது. பிடலுக்கு அடுத்த இடமும் கிடைத்தது.

ஒருநாள், யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஒரு குழுவுடன் கியூபாவை விட்டு புறப்பட்டு பொலிவியாவுக்குப் போய்விட்டார் சேகுவேரா.

பொலிவியாவில் அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்ற சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துப் போராடவே 'சே' அங்கு சென்றார்.

பொலிவியா செல்லும்போது தன் உயிர்த்தோழரும், கியூபா அதிபருமான பிடலுக்கு சேகுவேரா எழுதி வைத்துவிட்டுப் போன கடிதம் இது.

...பிடல்! புரட்சிகர வாழ்த்துக்கள்.

மரியா ஆன்டோனியாவின் இல்லத்தில் நாம் முதன்முதலாகச் சந்தித்த நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

அப்போது தாங்கள் எவ்வாறு நமது பயணத்திட்டத்தை முன்வைத்தீர்கள் என்பது பற்றியும், நமது அவசரமான தயாரிப்புக்கள் பற்றியும் நினைத்துப் பார்க்கிறேன்.

இறந்துபோனால் யாரிடம் தெரிவிப்பது என்று கேட்கப்பட்டபோது தான், நாம் மேற்கொண்ட பணியில் இறந்து போகவும் வாய்ப்புள்ளது என்ற உண்மையால் திகைப்புக்கு உள்ளானோம்.

ஒரு உண்மையான புரட்சியில் வெற்றியும் கிட்டலாம். அல்லது இறப்பும் நேரலாம் என்ற உண்மையைப் பின்னர் அறிந்து கொண்டோம்.

வெற்றியின் பாதையின் இரு புறத்திலும் பலர் புதைக்கப்பட்டார்கள்.

இன்றைய நிகழ்ச்சிகள் ஆரவாரம் இல்லாமல் நடப்பதுபோல் தோன்றுகிறது. ஏனெனில் நாம் அனைவரும் பக்குவப்படுத்தப்பட்டு விட்டோம். ஆனால் நிலைமை இன்னும் அதே மாதியாகத்தான் இருக்கிறது.

கியூபாத்தீவில் புரட்சியோடு என்னை இணைத்த கடமையின் ஒரு பகுதியைத்தான் நான் நிறைவேற்றி இருக்கிறேன்.

ஆகவே, நான் உங்களைவிட்டு, எனது தோழர்களைவிட்டு, எனது சொந்த மக்களாக மாறிவிட்ட கியூபா மக்களை விட்டுப் பிரிகிறேன்.

கட்சித் தலைமை, மந்திரிப் பதவி, மேஜர் பொறுப்பு ஆகியவற்றை நான் முறைப்படி இராஜினாமா செய்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட கியூபா பிரஜா உரிமையைத் திருப்பித் தருகிறேன்.

இனி, எனக்கும் கியூபாவுக்கும் முறைப்படியான எந்த உறவும் இல்லை. ஆனால், எனக்குப் பதவிகளும், பொறுப்பும் அளிக்காத வேறுவகையான உறவுகள் தொடர்கின்றன.

எனது கடந்த காலத்தைப் பற்றி யோசிக்கிறபோது, நான் உண்மையாக அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு பணியாற்றி இருப்பதாகவும், புரட்சியின் வெற்றியை நிலைநிறுத்தப்பாடுபட்டிருப்பதாகவும் உணர்கிறேன்.

ஒரு தலைவர், ஒரு புரட்சிக்காரர் என்ற முறையில் தங்களது குணங்களை எடைபோடுவதில் நான் மிகவும் மந்தமானவனாக இருந்தேன்.

கியூபாவில் நான் வரலாற்றுப் புகழ்மிக்க காலத்தில் வாழ்ந்தேன். உங்களுக்கு அடுத்த நிலையில் இருந்தேன்.

..... இப்போது உலகின் வேறு பாகங்களுக்கு எனது



சிறிய பணிகள் தேவைப்படுகின்றன. கியூபாவின் ஆட்சிப் பொறுப்பில் தாங்கள் இருப்பதால், தாங்கள் ஆற்ற முடியாத கடமைகளை நான் ஆற்ற முடியும்.

அந்தப் பணியில் நான் ஈடுபடவேண்டிய நேரம் வந்துவிட்டது.

நான் ஒரே நேரத்தில் மகிழவும், துக்கப்படவும் செய்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

ஒரு கட்டுமானச் சிற்பியின் ஒளிமயமான நம்பிக்கைகளை விட்டு விட்டு நான் புறப்படுகிறேன். தங்களது மகனாக என்னை ஏற்றுக்கொண்ட அந்த மக்களை விட்டு புறப்படுகிறேன். இது என்னை வேதனைப்படுத்துகிறது.

நீங்கள் என்னுள் ஊன்றிய நம்பிக்கை விதையையும், எனது மக்களின் புரட்சிகர ஆன்மாவையும் நான் என்னோடு எடுத்துக் கொண்டு புதிய யுத்த களத்தில் இறங்குகின்றேன்.

## —சேகுவேரா—

மிகப் புனிதமான கடமையை ஆற்றப் போகிற உணர்வோடு, எங்கெல்லாம் ஏகாதிபத்தியம் இருக்கிறதோ, அங்கெல்லாம் அதை எதிர்த்துப் போரிடும் புனிதப் பணியில் இறங்குகிறேன்.

அந்த உணர்வோடு புதிய களம் நோக்கிப் புறப்படுகிறேன். இந்த உணர்வு என் உறுதியை அதிகரிக்கிறது. இந்த உணர்வு என்னுள் மூண்ட வேதனையை பலமடங்கு குறைக்கிறது.

மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்ற உணர்வோடு, எல்லாப் பொறுப்புக்களையும் தந்து விட்டு, நான் கியூபாவை விட்டுக் கிளம்புகிறேன் என்று மீண்டும் கூறுகிறேன்.

எனது குழந்தைகளையும், எனது மனைவியையும் நான் இங்கே விட்டுச் செல்கிறேன். அவர்களுக்கு நான் எந்தவொரு சொத்தையும் வைத்துச் செல்லவில்லை. ஆனால் அது குறித்து விரக்தி அடையவில்லை. மாறாக மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர்கள் வாழத் தேவையான அனைத்தையும் அரசு அவர்களுக்கு வழங்கும் என்பதாலும், அவர்களுக்கு கல்வி கொடுக்கும் என்பதாலும், அவர்களுக்காக நான் எதையும் கேட்க மாட்டேன்.

நான் உங்களுக்கும், நமது மக்களுக்கும் நிறைய சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அவை அதீதமாக இருக்குமோ என அஞ்சுகிறேன்.

நான் சொல்ல விரும்புகிற அனைத்தையும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. ஆகவே காகிதத்தை வீணடிப்பதில் பயன் இல்லை.

எப்போதும் வெற்றியே பெறுவோம்! தாய் நாட்டின் விடுதலை, அல்லது வீர மரணம்!

உண்மையான புரட்சிகர, ஊக்கத்தோடு உங்களை ஆரத்தழுவுகிறேன், தோழரே!

உங்கள்,
-'சே'-



படிப்பகம்

www.padippakam.com

> "வேதாள உலகம் படத்தில் லலிதா-பத்மினி நடனத்தைப் பார்த்த என் நண்பர் பத்மினியைக் கல்யாணம் செய்யாமல் விடுவதில்லை என்று ஒரு வாரமாக தியேட்டர் வாசலிலேயே உட்கார்ந்திருக்கிறார். அவரை மணம் புரிந்து உயிரைக் காப்பாற்றுவாரா பத்மினி?"
>
> -வி.ஆர்.கே.ராமசாமி, விழுப்புரம்- 1949 'கலை' இதழில் ஒரு கேள்வி.

# மேக்கப் புன்னகை



7

பட்டுக்கோட்டை பிரபாகர்

இனியா மிரண்டு போனாள். தன் சகோதரி இப்படிக் கண் கலங்கி நெகிழ்ச்சியோடு பேசிப் பார்ப்பது இதுவே முதல் அனுபவம்.

எப்போதுமே அவளிடமிருந்து வருகிற வார்த்தைகள், இதைச் செய். அதைச் செய்யாதே என்று உத்தரவுகளைச் சுமந்து தான் வந்திருக்கின்றன.

என்ன இப்படித் திடீரென்று குழைகிறாள்? என்மேல் அக்கறை என்கிறாள். என் எதிர்காலத்திற்காகக் கவலை கொண்டு பேசுவதாகச் சொல்கிறாள்.

ஆனால், நான் திரை உலகத்துக்குள் வரவேகூடாது என்கிறாளே... அதுவும் புராண மாந்தர்கள் வரம் கேட்பது போல வாக்குறுதி தரச் சொல்லிக் கேட்கிறாளே... என் தனிப்பட்ட இலட்சியம் என்ன ஆவது?

இவளை எதிர்த்துக் கொண்டு என் சொத்துக்களை இவளின் ஆதிக்கத்திலிருந்து பிரித்துக் கொண்டு விளம்பரத் துறையில் இறங்கத் திட்டமிட்டிருந்தேனே...

மாடலிங் கலையின் நுணுக்கங்களைக் கற்று நம்பர் ஒன் மாடலாக வரத்திட்டமிட்டிருந்தேனே... இந்திய அழகிப் போட்டியில் பங்கு கொள்ள வேண்டும் என்று யோசித்திருந்தேனே....

இவளின் சிபாரிசு இல்லாமல், ஒரு நடிகையின் மகள் என்கிற சலுகை இல்லாமல் என் சொந்த முயற்சிகளில் பல நூறு தயாரிப்பாளர்களை என்னைத் தேடி வரச் செய்து ஒன்றிரண்டு படங்களிலேயே தேசிய அளவில் புகழ் பெற்று, இவளைத் தாண்டி உயரங்களில் மிதக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்காலத் திட்டங்களை மனதில் வகுத்துக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறேனே!

இவள் என்ன என் ஆசைகளின் ஆணி வேரில் அமிலம் ஊற்றி அழிக்கப்பார்க்கிறாள்?

இவள் பேசுவதெல்லாம் விஷயமா, இல்லை விஷமா? நாகரிகமான நயவஞ்சக நாடகமா?



இப்போது இவளுக்கு என்ன குறைச்சல்? பணம், பேர், புகழ் எல்லாவற்றிலும் கொடி கட்டிப் பறக்கிறாள். இவள் தும்மினால், அது பத்திரிகைத் துணுக்காகிறது. புன்னகைத்தால் வரலாற்றுக் கணக்காகிறது. சாலையில் இறங்கினால், போக்குவரத்தே ஸ்தம்பிக்கிறது. எங்கே போனாலும் கையெழுத்துப் போட்டே களைத்துப் போகிறாள். தன்னை ஒரு நொடி தடவிச் செல்லாதா என்று வீட்டு வாசலில் எத்தனை பேர் தவமிருக்கிறார்கள்?

ஒரு தனி மனுஷிக்கு இன்னும் என்ன பெருமை வேண்டும்? இத்தனை மரியாதை உள்ள மகாராணிக்கு மனதில் குறைகளா? அதை நான் நம்ப வேண்டுமா?

"என்ன இனியா அப்படிப் பார்க்கிறே?" என்றாள் மதுமிதா.

"இந்த மாதிரியெல்லாம் மனம் விட்டு என்கிட்டே நீ பேசினதே இல்லையே. அதான் ஆச்சரியமா இருக்குது."

"இப்ப பேச வேண்டிய சூழ்நிலை இனியா."

"ஏதோ ரொம்பப் பெரிய சோகத்தில நீ இருக்கிற மாதிரி ஒரு பிரமையை உண்டு பண்றே மதுமிதா"

"அது பிரமை இல்லை இனியா. ஓரளவுக்கு உண்மை."

"என்னால நம்ப முடியலை. உனக்கு இப்ப என்ன பிரச்சனை? ஒரு முட்டாளுக்குப் புரிய வைக்கிறதா நினைச்சுக்கிட்டு விபரமா சொல்ல முடியுமா?"

"சில விஷயங்களை விபரமா சொல்ல முடியும். சில விஷயங்களை அனுபவிச்சுத்தான் தெரிஞ்சுக்கணும். நான் சொன்னதுக்கு நீ பதில் சொல்லலையே இனியா"

"எதுக்கு?"

"நீ சினிமாப் பக்கம் வரமாட்டேன்னு எனக்கு வாக்குத் தரச் சொன்னேன்."

இனியா அமைதியானாள்.

"என்ன பேச மாட்டேங்கிறே?"

"சில விஷயங்களைத் தெளிவு படுத்துக்கா?"

"என்ன?"

"நீ கல்யாணம் செய்துகிட்டா, அம்மா என்னை நடிக்க வைப்பாங்கன்னு சொன்னியே, அதெப்படிச் சொல்றே"

"அவங்களுக்கு வேற வழியில்லை. இந்த வீட்ல பணம் காய்க்கிற மரம் ஒண்ணு இருந்துக்கிட்டே இருக்கணும்."

"சரி அப்படியே அம்மா விரும்பினாலும், அதில தப்பு என்ன இருக்கு? அம்மா ஒரு நடிகை. நீ ஒரு நடிகை. நானும் நடிகை ஆகிறதில என்ன தப்பு? ஒருவேளை இயல்பாவே எனக்கு இந்தத் துறையில விருப்பம் இல்லைன்னா பரவாயில்லை. எனக்கோ எக்கச்சக்கமான விருப்பம் இருக்கு. லட்ச லட்சமா பணமும் கொடுத்து, புகழும் கொடுக்கற துறை இது. இந்தத் துறைக்கு நான் வரக்கூடாதுன்னு நீ சொல்றது ரொம்ப அழிச்சாட்டியமாத் தெரியுதுக்கா."

"இப்பதானே சொன்னேன்.. இந்தத் துறையில இருக்கற கவர்ச்சி மட்டும்தான் உன் கண்ணுக்குத் தெரியுது. இதில உள்ள சங்கடங்கள், அவமானங்கள் இதெல்லாம் உனக்குத் தெரியாது. சில சமயங்கள்ல நான் ஒரு மனுஷியாக்கூட நடத்தப்பட்டதில்லை. சொல்றதை ரைட் சென்ஸ்ல புரிஞ்சுக்கோ. நான் உனக்குச் சொல்றது சின்சியரான அட்வைஸ். 'நீ எப்படியோ போ, எனக்கென்ன'ன்னு பொறுப்பில்லாம நடந்துக்க முடியாது என்னால. நான் சொல்றதில வேறு எந்த உள்ளர்த்தமும் இல்லை."

இனியா தன் நகங்களைப் பார்த்துக் கொண்டாள்.

"அவ்வளவுதானே? நான் போகலாமா?" என்றாள்.

"நான் சொன்ன எதையும் நீ சரியா ஏத்துக்கறதா இல்லை. அப்படித்தானே!"

"யோசிக்கிறேன்க்கா. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். உன் கைல அடிச்சு சென்டிமென்ட்டலா எதிர்பார்க்காதே விச் ஐ டோண்ட் லைக். அப்படியே நான் உனக்கு ஏதாச்சும் சத்தியம் செஞ்சாலும், அது மனப்பூர்வமானதா இருக்காது. எனக்கு அதில நம்பிக்கை இல்லை. ஒவ்வொரு தனிநபரும் ஒரு சந்தர்ப்பவாதி! நாளைக்கு எனக்கு அனுசரணையா ஒரு சூழ்நிலை அமைஞ்சா உனக்கு செய்யற சத்தியத்தைக் காத்தில பறக்க விடறதுக்கு நான் தயங்கமாட்டேன். அதுவே என்னை பைண்ட் பண்றது எனக்குப் பிடிக்காது."

இனியா சோபாவில் இருந்து எழுந்து கொண்டாள்.

மதுமிதா அருகில் வந்தாள்.

"யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறே?"

"சொல்றேன்."

"ரகசியமாவா, பகிரங்கமாவா?"

"ரகசியமா பண்ணிக்கிட்டு அப்புறம் பகிரங்கப்படுத்தப்போறேன்."

"லவ்வா?"

"ஆமாம்."

"உனக்கு சினிமால மட்டும்தான் லவ் பண்ணத் தெரியும்னு நினைச்சிட்டு இருந்தேன். நிஜமாவே லவ் பண்ணியிருக்கியே... ஆல் தி பெஸ்ட்! நீ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உனக்கு முழு உரிமை இருக்கு. நீ மேஜர். எதுக்காக ரகசியமா பண்ணிக்கணும்?"

"நம்ம அம்மா பண்ணிக்க விடமாட்டாங்க"

"ஏன்?"

"இந்த பணம் காய்க்கிற மரம் வேற ஒருத்தருக்கு சொந்தமாயிடுமே"

"போக்கா! நம்ம அம்மாவை மனிதாபிமானமே இல்லாதவளா நினைக்காதே! நம்ம மேல பாசம் இல்லையா அவங்களுக்கு? நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா நிச்சயமா சந்தோஷப் படுவாங்க!"

"அப்படியா? அக்கா கல்யாணம் பண்ணிக்கிறதில உனக்கு சந்தோஷம்தானேம்மான்னு கேட்டுப்பாரு இனியா"

"சரி... ஒண்ணு சொல்லட்டுமா? யூ நீட் எ சைக்கே தெரபி! ஒண்ணுமே இல்லாதப்போ உள்ளுக்குள்ளே கற்பனையா சோகம் உருவாக்கி சஞ்சலப்படறது ஒருவகை மனவியாதிதான்!"

இனியா சொல்லி விட்டு அறையைவிட்டுப் போக, மதுமிதா சிரித்துக் கொண்டாள்.

டெலிஃபோன் ஒலித்தது. எடுத்தாள். "ஹலோ... மதுமிதா"

"ஹாய்! நான்தான் பேசறேன்."

கீழே வேறு ஒரு ஃபோன் எடுக்கப்படும் ஓசை கேட்டது.

"நீங்க வெச்சிடுங்க. நான் கூப்புடறேன்."

ரிசீவரை வைத்துவிட்டு சற்றுத் தள்ளியிருந்த செல் ஃபோனை எடுத்து எண்கள் ஒற்றிக் காதில் வைத்துக்கொண்டாள்.

"சொல்லுங்க."

"மேரேஜ் ரிஷப்ஷனுக்கு வரணும்னு நினைச்சேன். முடியாமல் போச்சு."

"பரவாயில்லை."

"என்ன பண்ணிக்கிட்டிருக்கே?"

"ஒரு நாவல் பாதியில இருக்கு. படிச்சிட்டிருக்கேன்."

"கமிங் அவுட்?"

"இப்பவா?"

"பத்துதானேம்மா ஆவுது? முழு ராத்திரி மிச்சமிருக்கே"

"காலைல ஆறு மணிக்கு ஷூட்டிங் இருக்கு."

"ரெண்டு மணி நேரத்தில திரும்பிடலாமே"

"எங்கேர்ந்து பேசறீங்க?"

"பார்க் ஷெராட்டன்ல-கேட்ஸ்பி"

"சரி, வர்றேன். மேரேஜ் ரிஷப்ஷன்ல சுபாவைப் பார்த்தேன்!"

"என்ன சொன்னார்?"

"எல்லா விதத்திலேயும் உதவி பண்றேன்னு சொன்னார். அவரோட படப்பிடிப்பு பங்களாவை தாராளமா பயன்படுத்திக்கிடலாம்னு சொன்னார். விபரமா நேர்ல சொல்றேன். பத்து நிமிஷத்தில வந்தடறேன்."

மதுமிதா புறப்பட்டு கீழே வர, அம்மா துர்க்கா, "மதுமிதா கொஞ்சம் உக்காரு, பேசணும்." என்றாள்.

(தொடரும்)

---

## அனுபவம் புதுமை புதிய பகுதி

# "மவுனத்தில் விளையாடும் மனச் சாட்சியே"

**கவியரசு கண்ணதாசன். ஈடு இணையில்லாத கவிச்சுரங்கம். அவர் பக்கத்திலேயே இருந்த உதவியாளர் இராம.கண்ணப்பன். கவியரசு பற்றி அவர் எழுதிய சுவையான அனுபவங்கள் இவை.**

ஐம்பது வயதிற்குப் பிறகு கவிஞரது சிந்தனைப் போக்கில் ஒரு மாறுதல் தெரியத் தொடங்கியது. எழுத்திலும், பேச்சிலும் இது பூடகமாக எதிரொலித்தது. தனிமையை நாடினார். உற்சாகமான பொழுதுகளில்கூட ஆழ்ந்து சிந்திப்பவராகக் காணப்பட்டார்.

தொழிலில் அதிகமாக வருமானம் வந்து கொண்டிருந்த காலம். அரசவைக் கவிஞராகப் பதவி வந்த காலம். எழுதுங்கள், எழுதுங்கள் என்று அன்றைய பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் துரத்தி வந்த காலம்

திருத்தலப் பயணம் மேற்கொண்டவரைப் போல கவிஞர் ஊர் ஊராகச் சென்றுகொண்டிருந்தார்.

*"நினைவுகளே நினைவுகளே*
*நின்று விட மாட்டீரோ?*
*கனவுகளே கனவுகளே*
*கலைந்து செல்ல*
*மாட்டீரோ?*
*இரவு பகல் இப்படி நீர்*
*என்னை வதைப்பதனால்*
*உறவுகளை விட்டே நான்*
*ஓடத் துணிந்து விட்டேன்!"*

-இப்படிக் கவிதை எழுதியபோது இதில் தொனித்த விரக்தியும், வேதனையும் புரிந்தது; ஆனால், அதற்கான காரணம் புரியவில்லை.

பூடகமாக அவர் எதை எழுதினாலும் அதை உடைத்துப் பார்க்கும் திறமை எனக்குண்டு என்பதை கவிஞர் நன்கு அறிவார். காரணம் அவரது வாழ்க்கைச் சம்பவங்கள் அனைத்தும் பெரும்பாலும் எனக்கு அத்துப்படி.

அப்படி உடைத்துப் பார்த்து அந்த இரகசியத்தை இவன் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகவே இந்தக் கவிதையை எழுதியுள்ளார் என்றே எனக்கு அப்போது தோன்றியது உண்மை. ஆனால், ஓரிருமாதங்களில் அந்த உண்மையை நான் புரிந்து கொண்டேன்.

ஊமைக் காயத்தின் உள்வலியை அடிபட்டவனால் மட்டுமே உணர முடியும்; விவரிக்க முடியாது.

'மவுனத்தில் விளையாடும் மனச்சாட்சியே' என்றொரு பாடலை 'நூல்வேலி' என்ற படத்திற்காக எழுதியிருந்தார். அந்தப் பாடலுக்கான கதைச் சூழல் (என் நினைவு சரியாக இருக்குமானால்) இது:

தலைவன், தலைவி, குழந்தை-இவர்களோடு தலைவியின் தங்கை, அளவான குடும்பம்; அமைதியான வாழ்க்கை.

தலைவன் மதுப்பிரியன், நேர்மையானவன், தள்ளாடும் போதையிலும் தடுமாறாத நடத்தையுடையவன்.

தலைவி அழகி; தலைவன் மீது அன்பைச் சொரியும் அடக்கமானவள். தலைவியின் தங்கையோ, பருவ எழில் குலுங்கும் மோகன ராகம்.

மோகன ராகமான மைத்துனியின் அழகு அவனைச் சலனப்படுத்தி விடுகிறது.

பார்வை தடுமாறுகிறபோது பாதம் இடறுவதைப்போல, ஒரு நாள் மது மயக்கத்தில் மதி மறந்து விடுகிறான். அந்த மோகன ராகத்தை முகாரியாக்கி விடுகிறான்.

தலைவிக்குத் தெரிந்து விடுகிறது. இதை யாரிடம் சொல்வது? தலைவனிடம் எடுத்துரைத்து எப்படிப் பரிகாரம் தேடுவது? நடந்தது நடந்ததுதானே? அன்பு ததும்பும் அவளது கண்களில் இரக்கம் குடிகொள்கிறது.

அந்த இரக்கமுள்ள பார்வையை அவனால் எதிர்கொள்ள இயலவில்லை. மனச்சாட்சி அவனை உறுத்துகிறது. நிம்மதி இழந்து தவிக்கிறான்.

-இந்த மனச்சாட்சி என்பது என்ன? எத்தகையது?

பாடலுக்கான சூழலைக் கேட்டதும், "தம்பி, டியூன் ரெடியா!" என்று உற்சாகமாக வினவும் கவிஞர்- அன்று அமைதியாகி விட்டார்.



விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி நெற்றி மேட்டை தேய்த்துக் கொண்டு சிறிது நேரம் இருந்தவர், திடீரென்று பாடத் தொடங்கினார்.

*மவுனத்தில் விளையாடும்*
*மனச்சாட்சியே...*
*ஆயிரம் நினைவாகி*
*ஆனந்தக் கனவாகி*
*காரியம் தவறானால்*
*கண்களில் நீராகி*
*மவுனத்தில் விளையாடும்*
*மனச்சாட்சியே...*

*ரகசியச் சுரங்கம் நீ*
*நாடக அரங்கம் நீ*
*சோதனைக் களமல்லவா நெஞ்சே!*
*துன்பத்தின் தாயல்லவா!*
*ஒருகணம் தவறாகி*
*பலயுகம் தவிப்பாயே*
*ஊமையின் பரிபாஷை*
*கண்களில் வடிப்பாயே*
*மவுனத்தில் விளையாடும்.*
*மனச் சாட்சியே...*

*உண்மைக்கு ஒரு சாட்சி*
*பொய் சொல்ல பலசாட்சி*
*யாருக்கும் நீயல்லவா- நெஞ்சே!*

*மனிதனின் நிழலல்லவா!*
*ஆசையில் கல்லாகி*
*அச்சத்தில் மெழுகாகி*
*யார் முகம் பார்த்தாலும்*
*ஐயத்தில் தவிப்பாய் நீ*
*மவுனத்தில் விளையாடும்*
*மனச்சாட்சியே..!*

மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மாந்தருக்கும் பொருந்தும்படியாக அமைந்த இந்தப் பாடலுக்கு முன்னுதாரணமாக மனச்சாட்சிதான்-மனச்சாட்சி மட்டுமேதான் நிற்கிறதேயன்றி பிறிதொன்றில்லை. மனச்சாட்சிக்கு மதிப்பளித்துக் கட்டுப்படும் கவிஞரால் மட்டுமே இத்தகைய உணர்ச்சிகளை உள்ளடக்கிய பாடல்களை இயற்ற முடியும்.

இந்தப் பாடல் பதிவானதும் அதை ஒலிநாடாவில் பதிவு செய்து தனக்கு அனுப்புமாறு, கவிஞர் தயாரிப்பாளரைக் கேட்டுக் கொண்டார். அவ்வாறே ஒலிநாடா வந்து சேர்ந்தது.

அது வந்த நாளிலிருந்து ஒவ்வொரு நாள் நள்ளிரவிலும் பலமுறை, 'மவுனத்தில் விளையாடும் மனச்சாட்சியே...' ஒலிக்கத் தொடங்கியது.

கதவு மூடப்பட்டிருக்கும் கவிஞரது அறைக்குள், இனம் புரியாத ஒரு சோகம் கவிந்து கொள்ளும்.

நாளடைவில் இந்தப் பாடல் நள்ளிரவுத் தொடர்கதையாயிற்று. வீட்டிலுள்ளவர்கள்கூட, 'கவிஞருக்கு என்னவாயிற்று' என்று வினவத் தொடங்கினார்கள்.

மது அருந்தும் சமயங்களில் தானே இந்தப் பாடலைப் பாடுவார். முடிவில் கண்களைத் துடைத்துக் கொள்வார்.

இந்த சோகத்துக்கும், தன்னிரக்கத்திற்கும் என்ன காரணம்?

'யாருக்கு நான் தீங்கு செய்தேன் இறைவா?' என்று இறைவனையே வினவியவர், மனச்சாட்சிக்கு விரோதமாக என்ன தவறு செய்திருக்கக் கூடும்?

'ஐம்பது வயதுக்கு மேல் நீ சந்நியாசியாகி விடுவாய். அல்லது மவுனியாகி விடுவாய்,' என்று சேலத்து பல் டாக்டர் கெரிஸன் கூறியதாக எழுதியுள்ளாரே, அந்த நினைவு வந்து விட்டதா?

இலட்சம் இலட்சமாகச் சம்பாதித்தும் மிச்சம் வைக்காமல் போகப் போகிறோமே? குடும்பம் என்ன ஆவது? குழந்தைகளின் கதி என்ன என்ற மரணபயம் வந்து விட்டதா?

எதனால் கவிஞரை மனச்சாட்சி பாடாய்ப் படுத்துகிறது; புலம்பித் தவிக்கிறார்?

அவர் வடித்து வைத்துள்ள வாக்குமூலங்களை எல்லாம் படித்து முடித்தேன். என்னால் கண்டு கொள்ள முடியவில்லை.

எந்த இரகசியத்தையும் ஒளிவு மறைவின்றி என்னிடம் பரிமாறும் கவிஞரும், வாய் திறக்கவில்லை. இறுதிவரை அந்த ரகசியத்தை, மனச்சாட்சி விவகாரத்தை மூடி மறைத்துவிட்டார்.

அவரது மறைவுக்குப் பிறகே, அந்த உண்மை எனக்குப் புரிந்தது.

'ஆயிரம் நினைவாகி, ஆனந்தக் கனவாகி, காரியம் தவறானால், கண்களில் நீராகி.. மவுனத்தில் விளையாடும் மனச் சாட்சியே... என்ற கவிஞரின் தன்னிரக்கத் துடிப்பை, அவரது சுவாசத் துடிப்பு அடங்கிய பிறகே என்னால் கண்டு கொள்ள முடிந்தது. ஆம்!

'முதல் ஏற்பாடு சரியாக அமைந்திருக்குமானால், இரண்டாவது ஏற்பாட்டை செய்து கொண்டிருக்க மாட்டேன்,' என்று வாக்குமூலம் சொல்லிய கவிஞர், நிம்மதியாக வாழ்க்கை நதியில் சுகம் கண்ட கவிஞர், மூன்றாவது ஏற்பாட்டைச் செய்து கொண்டாரே. அதன் எதிரொலிதான்-

'மவுனத்தில் விளையாடும் மனச் சாட்சியே...!'

***

**கவிஞர் கண்ணதாசனின் மூன்றாவது மனைவியின் மகள் விசாலி.**



படிப்பகம்

www.padippakam.com

# கட்டித்தேன்

அவர்கள் இருவரும் அந்த திட்டத்தை எனக்குத் தெரியாது என நினைத்து சமையலறைக்குள் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

தற்செயலாக நான் கேட்டு விட்டேன். அதிர்ச்சி தான் மேலிட்டது. சற்று நேரத்துக்கு முன்புதானே கலையும், அவர் கணவரும் இன்முகம் காட்டி என்னை வரவேற்றனர். அதற்குள் இப்படியொரு சதி வலை பின்னி, என்னை சிக்க வைக்கப் பார்க்கின்றனரே! இது நியாயமா? அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் திட்டத்தை நினைத்தாலே வயிற்றில் புளியைக் கரைத்தது.

'இதில் இருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டுமே!' மனம் வேக வேகமாக செயல்பட்டது.



சேது

சமையலறையில் ஒரு புத்தகத்தை புரட்டி அதைப் பார்த்து அவசர அவசரமாக 'சிக்கன்' குழம்பு தயாரித்துக் கொண்டிருந்தார், கலை. அவர் கணவர் வெற்றிப் புன்னகையுடன் வெளியே வந்தார்.

"அப்புறம் சுதிர், வந்தது வந்திட்டீங்க. அப்படியே நம்ம 'வொய்ப்' முதன்முறையா செய்து பழகின 'சிக்கன்' குழம்பையும் ஒரு கை பார்த்திடுங்க," என்றார்.

"அய்யோ வேண்டாங்க. இன்னிக்கு விரதம். பச்ச தண்ணி கூட பல்லுல படக்கூடாது." முழுப் பொய்யை அவிழ்த்துவிட்டேன்.

"அப்ப நீங்க எதுவுமே சாப்பிடக்கூடாதா," ஏமாற்றத்துடன் கேட்டனர்.

நான் சந்தோஷமாக தலையாட்டினேன். ரொம்ப நாளைக்கு அப்புறம் கிடைத்த ஒரு விருந்தினருக்குகூட, சிக்கன் வைத்து கொடுக்க முடியலையே என்ற சோகத்துடன் வழியனுப்பினார். எனக்குத் தெரியாதா? முதல் முறையாக வைத்த சிக்கன் குழம்பு எப்படி இருக்கும் என்று. 'சிக்கன்' குழம்பில் இருந்து தப்பிவிட்ட மகிழ்ச்சியில் பறந்து கொண்டிருந்தேன். ◘

# எனக்கு மட்டும்தான்

நிலை கொள்ளாமல் தவித்தாள் சுகந்தி. வாசலுக்கும், உள்ளுக்குமாய் நடை பழகினாள். புடவை முந்தானையை விரல் நுனியில் சுற்றித் திருகிக் கொண்டு, அடிக்கடி வாசல் பார்த்தாள். நகம் கடித்தாள்.

அசோக் இன்னும் வரக்காணோம். கொஞ்ச நாளாய்த்தான் இப்படி. முன்பெல்லாம் மணி ஆறடித்தால் வாசலில் அசோக்கின் ஸ்கூட்டர் சப்தம் கேட்டு விடும். கையில் மல்லிகை மணக்கப் புன்னகையோடு வருவான்.

ஆனால், இப்போதெல்லாம் மாறி விட்டான். தாமதமாகத்தான் வருகிறான். கேள்வி கேட்டால், ஏதேதோ மழுப்பல் காரணங்கள். மெல்ல மெல்ல மனதுக்குள் சந்தேகம் பற்றிக்கொள்ள ஆரம்பித்தது சுகந்திக்கு. ஆனாலும், அசோக்கிடம் ஒன்றும் கேட்டுக் கொள்ள முடியவில்லை.

இன்று காலை அசோக்கின் சட்டையைத் துவைப்பதற்காக எடுத்தவள், சட்டைப் பையில் தற்செயலாகக் கை விட்டுத் துழாவுகையில், பாதி கிழிக்கப்பட்டிருந்த இரண்டு சினிமா டிக்கெட்டுகளைப் பார்த்துவிட்டாள். தவிர, சட்டையில் மெலிதான 'சென்ட்' நறுமணம் வேறு.

அசோக் செண்ட் உபயோகிப்பவன் இல்லை. அப்படியானால் இந்த செண்ட்? புரிந்துவிட்டது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால், அசோக் தன் அலுவலகத்தில் புதிதாய் ஒரு லேடி ஸ்டெனோ அப்பாயிண்ட் ஆகியிருப்பதாகச் சொல்லியிருந்தான்.

கரெக்ட்! சுகந்திக்கு லேசாய் ஞாபகம் இருக்கிறது. அன்றிலிருந்துதான் அசோக்கின் நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாய் மாறி வருகிறது. அப்படியானால் அந்தச் சாகசக்காரியின் மோக வலையில் அசோக் விழுந்துவிட்டானா?

சுகந்திக்கு மெல்ல மெல்ல திகில் பற்றிக் கொண்டது. 'ஐயோ! என் அசோக் எனக்கு முழுதாய் வேண்டும். அவரை யாரும் பங்கு போட்டுக்கொள்ள விட மாட்டேன்!'

சுகந்தியின் இன்றைய பரபரப்புக்கு இதுதான் காரணம். எப்படியும் இன்று அசோக்கிடம் மனம் விட்டுப் பேசி இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும்.

இதோ ஸ்கூட்டர் சப்தம்! சுகந்தி ஆர்வமாய் வாசலுக்கு ஓடி வந்தாள்.

அசோக் ஸ்கூட்டரை போர்டிகோவில் நிறுத்திவிட்டு, சன்னமாய் விசிலடித்தபடி வந்தான்.

"நில்லுங்க!"

"ஏன்?" என்றான்.

"ஏன் இன்னிக்கு இத்தனை லேட்?"

"அது... அது... வந்து இன்னிக்கு ஒஃபீஸில் கொஞ்சம் ஓவர்டைம் வேலை செய்தேன்."

"எங்கே, என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க!"

"ஏன்? என்ன?"

"கொஞ்சம் முன்னே உங்க ஒஃபீசுக்கு ஃபோன் பண்ணிக் கேட்டேன்: நீங்க அஞ்சுக்கெல்லாம் கிளம்பிட்டதாகச் சொன்னாங்களே?"

"விடு. எவனாவது தப்பாச் சொல்லியிருப்பான்."

"இல்லை. நீங்கதான் தப்பா நடந்துக்கறீங்க."

"என்ன இது? இப்ப என்ன நடந்து போச்சு? ஏன் இப்படி மல்லுக்கு நிற்கிறே?"

"உண்மையைச் சொல்லுங்க. நேற்று சினிமா போனீங்களா?"



பிரியா ராம்குமார்

"இ... இல்லையே... நேற்றும் ஓவர் டைம்தான்."

"எங்கே? தியேட்டர்லயா? பொய் சொல்லாதீங்க. உங்க சட்டைப் பையில் இருந்த டிக்கெட்டை பார்த்துட்டேன்."

"போச்சுடா! அதுவும் பார்த்துட்டியா? சரி போனேன். இப்ப என்ன?"

"யார்கூட போனீங்க?"

"என்ன இது? குறுக்கு விசாரணை பண்றே?"

"சொல்லுங்க. அந்த லேடி டைப்பிஸ்ட் கூடத்தானே?"

மவுனமானான் அசோக்.

சட்டென்று அவன் காலடியில் விழுந்து, அவன் கால்களைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் சுகந்தி.

"நான் உங்களுக்கு என்ன குறை வச்சேன்? எதுக்காக இப்படி தினம் தினம் லேட்டா வர்றீங்க?"

"ஐயோ! என்ன இது? சின்னபிள்ளை மாதிரி அழுதுகிட்டு... எழுந்திரு!"

"மாட்டேன். எனக்கு நீங்க வேணும் அசோக்! எனக்கு... எனக்கு மட்டுமே முழுசா நீங்க வேணும். உங்களை வேறு யாருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க சம்மதிக்க மாட்டேன்."

"சில்லி! இப்ப உன்னை யார் பங்கு போடச் சொல்றா?"

"இல்லை. இப்பத்தான் ஆரம்பம். இன்னும் கொஞ்சம் கொஞ்சமா அந்தச் சாகசக்காரி, என்கிட்டயிருந்து உங்களைப் பிரிச்சுருவா."

"அபத்தமா உளறாதே. எழுந்திரு!"

"மாட்டேன். எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுங்க!"

"என்னன்னு?"

"இனி அவகிட்ட பேசறதில்லை. பழகறதில்லைன்னு."

"சரி. சரி. எழுந்திரு!" அவள் கைகளைப் பற்றியிழுத்து எழுப்பி நிற்க வைத்தான்.

அவனைக் கட்டிக் கொண்டு, அவன் மார்பில் படர்ந்தபடி விசும்பலாய் பேச ஆரம்பித்தாள் சுகந்தி.

"இதப் பாருங்க. இனி முன்ன மாதிரியே, கரெக்டா ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடணும். உங்களுக்காக நான் வழி மேல் விழி வைச்சுக் காத்திருப்பேன்."

"சரி," என்றான் லேசாகச் சிரித்தபடி.

தன் ஒஃபீசில் நண்பனிடம் சொல்லிக் கொண்டிருந்தான் அசோக்.

"எல்லாமே ஒரு சின்ன நாடகம்தான். இந்த சுகந்தி எப்பப் பார்த்தாலும் எதிர் வீட்டுக்குப்போய் கேபிள் 'டி.வி.,'யில மூழ்கிடுவா. ஒஃபீசிலிருந்து களைச்சுப்போய் வந்தால், ஏன்னு கூடக் கேட்கிறதில்லை. யோசிச்சுப் பார்த்தேன். அதுதான் இல்லாத லேடி டைப்பிஸ்ட்டை உருவாக்கி இப்படி ஒரு நாடகம் ஆடினேன். இப்போ என்னை விட்டு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகர்வதே இல்லை. எப்படி ஐயாவோட ஐடியா!" என்று சொல்லி மகிழ்ந்தான். ●

# இப்படியும் ஒருவனா?

'யார் இவன்? பார்த்தால் கொலைகாரன்போல் இருக்கிறானே... இவன் என்னைப் பின் தொடர்கிறானே... ஏன்?'

கலங்கிய மனத்துடன் ஓடி வந்த கமலா, வீட்டினுள் புகுந்து 'டக்' கென்று கதவைச் சாத்தினாள்.

குழப்பங்கள் மனதை உடும்பாகக் கவ்வியது.

பின்னர் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள்... அவன்... அந்தத்தாடிக்காரன், வீட்டு வாசலில் நின்றிருந்தான்.

'என்ன செய்யலாம்' என்று தவித்த கமலா, தன் கணவனுக்கு ஃபோன் செய்து தாடிக்காரனைப் பற்றிச் சொன்னாள். அவன் உடனே வீட்டுக்கு வருவதாக பதில் தந்தான். கணவன் வருவதாக சொன்ன பதில், கமலாவுக்கு சற்று ஆறுதல் தந்தது.

அப்போது–

கதவு தட்டப்பட்டது; அத்துடன் கோலிங் பெல்லும் அலறியது.

நடுக்கத்துடனேயே போய் கதவைத் திறந்தாள். அங்கு... எதிர்வீட்டுப் பெரியவர், பின்னாலே... அந்தத் தாடிக்காரன் அதிர்ச்சியில் கமலா சிலையாய் நின்றாள்.

"என்னம்மா கமலா உன் வீட்டுக்காரர் கந்தோரில் இருந்து வந்தாச்சா?" பெரியவர் கேட்டார்.

"இல்லைங்க... ஏன்?" ஈனசுரத்தில் சொன்னாள் கமலா.

"இதோ... இந்த பேர்ஸ் உன் வீட்டுக்காரருடையதா பார்! காலையில் பஸ்ரொப்பில் உன் கணவன் தவறவிட்டிருக்கார், இந்த ஆள் கையில் கிடைச்சிருக்கு. கொடுக்க முயற்சிப்பதற்குள் உன் கணவன் பஸ்சில் ஏறிவிட்டாராம்."

"பேர்ஸ்ல முகவரி எதுவும் இருக்கான்னு பார்த்திருக்கார், இல்லை. ஆனா உங்கள் படம் இருந்திருக்கு. தற்செயலா இப்போ பஸ்ஸிலிருந்து நீ இறங்கும்போது, உன்னைப் பார்த்ததும் பேர்ஸைக் கொடுக்க உன் பின்னே வர, நீ அவரை தவறாப் புரிஞ்சிட்டு ஓடி வந்திட்டியாம்" என்று பெரியவர் கூறியதும், நன்றிப் பெருக்குடன் அந்தத் தாடிக்காரரை நோக்கி கைகூப்பி, "வணக்கம்" கூறினாள்.



என். உஷாராணி

அவன் அதை சட்டை செய்ததாகவே தெரியவில்லை. விருட்டென்று பாதையில் இறங்கி நடந்தான்.

'இந்தக் காலத்தில் இப்படியும் ஒருவனா?' என்று சிந்தனையில் மூழ்கிய கமலாவுக்கு, அவனது போக்கு ஆச்சரியமாக இருந்தது.

# மாமியார்!

"சுமதி...ஏன் எப்போதும் சோகமாகவே இருக்க... உனக்கு என்ன குறை..? என்ன தேவைன்னாலும் என்னைக் கேளு!"

"இல்லைங்க... அன்பான கணவர்... ஆதரவான மாமியார்.... இதைவிட எனக்கு என்னங்க வேணும்?"

"என் அம்மாவை விழுந்து விழுந்து கவனிக்கிறியே... அவங்க மேல உனக்கு எப்படி இவ்வளவு பாசம் வந்தது?"

"நீங்க என்னை பெண் பார்க்க வந்தப்பவே, 'எனக்கு அம்மாதான் கண்கண்ட தெய்வம்! அவங்களைப் பிரிஞ்சு தனிக்குடித்தனம் போக சம்மதிக்க மாட்டேன். அவங்க மனசு வேதனைப்படும்படி நடக்கமாட்டேன்னு உங்க பொண்ணு வாக்கு கொடுத்தா போதும். வரதட்சணை கூட வாங்காம உடுத்தின சேலையோட கல்யாணம் பண்ணி அழைச்சுகிட்டு போகத் தயார்,'ன்னு சொன்னீங்க! என்னை எப்படி கரை சேர்க்கறதுன்னு என் அப்பா கண்கலங்கிட்டு இருந்தப்ப... எதையும் எதிர்பார்க்காம என்னை கல்யாணம் பண்ணிகிட்ட தெய்வம் நீங்க... அப்படிப்பட்ட உங்களுக்கு நான் செய்யற பிரதி உபகாரந்தான்," மாமிக்கு நான் செய்யற பணிவிடைகள்..."

"அப்பாடா... ஒரு லெக்சரே கொடுத்திட்டியே..." சிரித்தான் முரளி.

"உன் அம்மாவும், அப்பாவும் ஊர்ல இருந்து வர்றதா லெட்டர் போட்டிருக்காங்கன்னு சொன்னியே... எப்ப வர்றாங்க?"

"மூணாந்தேதியே வர்றதா லெட்டர் போட்டிருந்தாங்க... இன்னைக்கி தேத்தி ஆறு ஆச்சு இன்னும் வரலை... என்னங்க... நான் போய் ஒருமுறை பார்த்துட்டு வந்திரட்டுமா?"

"சரி... போயிட்டு வா," என்றவன் எழுந்தபோது பாத்ரூமிற்குள் அலறல் சத்தம் கேட்டது.

ஓடிப்போய் பார்த்தாள் சுமதி. மாமியார் வழுக்கி விழுந்து எழ முடியாமல் கிடந்தாள். அவளை தூக்கி நிறுத்தி கால்களை நீவி விட்டு அழைத்து வந்து சாய்வு நாற்காலியில் உட்கார வைத்தாள் சுமதி. அன்று இரவே மாமிக்கு 'ஹார்ட் அட்டாக்' வந்துவிட்டது. பதறிப் போனார்கள் முரளியும், சுமதியும்.

டாக்டர் வந்து மாமியை பரிசோதித்து விட்டு அவர் உடல் மிகவும் பலவீனமாகி விட்டதாகவும், 'பளிச்' சென்று சொல்ல முடியாமல் தயங்கித் தயங்கி இரண்டு நாட்களுக்கு கூட தாங்காதென்றும் கூறிவிட்டார்.

சுமதி அழுது புலம்பினாள். தன் தாயே இறக்கப்போவதாய் முட்டி மோதி அழுதாள். அவளால் அந்தப் பிரிவை தாங்கிக் கொள்ள முடியவில்லை. மருமகளாய் வந்த நாளிலிருந்து இன்றுவரை மாமியை ஒரு கைக் குழந்தை போல் கவனமாய் பராமரித்து வந்தாள். தாயாக தெரிந்த அவளை பிரிய மனமில்லை. கணவனின் கையைப்



தேவி

பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

"என்னங்க.. எப்படியாவது பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் அம்மாவை குணப்படுத்துங்க... அவங்க இல்லாம என்னால இருக்க முடியாது... என்னோட வேதனைக்கெல்லாம் அவங்கதான் வடிகால்... வடிகால் இல்லாம என்னால வாழ முடியாது!" என்ற சுமதியின் தோள்களை ஆதரவாய் தொட்ட முரளி, கண்களில் நீர் மல்க சொன்னான்:

"அம்மா... உன்னைக் கூப்பிடுறாங்க..."

எழுந்து வேகமாய் போய் மாமியாரின் காலடியில் அமர்ந்தாள்.

"என்ன மாமி வேணும்?"

மெல்ல விழி திறந்து மருமகளை பார்த்தாள்.

"நான்தான் மாமி சுமதி... ஏன் இப்படி தட்டுத் தடுமாறி பார்க்கறீங்க... பேச முடியலையா?" அழுதே விட்டாள்.

"அ...ம்...மா...சு...ம...தி...ஏதோ வேதனைன்னு புலம்புனியே... என்னம்மா உன் வேதனை? உன் வேதனைக்கு வடிகாலா... இருந்த நான் இனி போயிடுவேன்...அதுக்கு முன்னாடி உன் வேதனைக்கு தீர்வை நான் தர்றேம்மா... என்னன்னு சொல்லும்மா," ஆதரவாய் கேட்டாள் மாமி.

அவள் எழுந்துபோய் எதையோ வெறித்துப் பார்த்தவளாய் கண்களில் நீர் பொங்க சொன்னாள்...

"வேண்டாம் மாமி! என் வேதனை என்னோட போகட்டும் அதைச் சொல்லி உங்களையும் கஷ்டப்படுத்தணுமா?" என்றவாறே வாசல் கதவை திறந்தவள் அதிர்ந்தாள். அங்கே இவளின் அம்மாவும், அப்பாவும் நின்று கொண்டிருந்தனர்.

"மாமி... இவர்கள்தான் என் வேதனை... இவர்களுக்கு நான் மட்டும்தான் பிள்ளை... இவர்களை என்னால் கடைசி காலத்தில் கவனிக்க முடியவில்லை. பெண்ணாக பிறந்துவிட்ட பாவத்திற்கு நம் வீட்டோடு என் பெற்றோரை வைத்துக்கொள்ளவும் முடியாமல், தள்ளாத காலத்திலும் என் தந்தை உழைத்துக் கொண்டுவரும் கூலியை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தும் அம்மா, இவர்களது கடைசிகால கதியை நினைக்கும்போதெல்லாம் என் வேதனை அதிகரிக்கிறது. இவர்களுக்கு நான் செய்ய முடியாத கடமையை, பணிவிடைகள் மூலம் உங்களுக்கு செய்து திருப்தியடைகிறேன்," என்ற மருமகளின் கரங்களை ஆதரவாக பற்றினாள் மாமி.

"சுமதி... மகன்தான் தன் பெற்றோரை கவனித்துக் கொள்ள வேண்டும். மகளுக்கு அந்த கடமை இல்லைன்னு யார் சொன்னது.

என் மனசு சாந்தியடையணும்னா சம்மந்தி வீட்டுல நம் பெற்றோரை வைத்துக் கொண்டால் கவுரவக் குறைச்சல் என்ற சம்பிரதாயம் பார்க்காமல், அவர்கள் இருவரையும் நம் வீட்டிலேயே வைத்துக் காப்பாற்று. இதுதான் என்னோட கடைசி ஆசை!" என்ற மாமியாரின் தலை சாய்ந்தது.

"மாமி..!" என்ற சுமதியின் அலறல் அந்த பிராந்தியத்தையே அதிரவைத்தது.

# உபசாரம்!

அவர் மகன் படிப்பு சம்பந்தமாக ஆலோசனை கேட்க தணிகாசலத்தை அழைத்திருந்தார் செல்வராஜ்.



ஐ.கே.

வெகுநேரம் விசாரணை நடத்தினார்.

ஒரு கப் டீயாவது கிடைக்குமென்று தணிகாசலமும் வெகு நேரம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எவ்வளவு விஷயங்கள்?

அவ்வளவையும் வெகு ஆர்வமாக கேட்டு முடித்த செல்வராஜ் கடைசியாக கை கூப்பினார்: "அப்பப் போயிட்டு வாங்க. பையன்கிட்டேயும் ஒரு தடவை கன்சல்ட் பண்ணிக்கிறேன்."

தணிகாசலத்துக்கு எரிச்சல்.

'சே... செல்வந்தராக இருந்து என்ன பிரயோஜனம். ஒரு உபசார மரியாதைகூடத் தெரியாமல்?' என்று எழுந்தார்.

அவருடன் செல்வராஜும் எழுந்தார்.

வாசல் வரை மட்டுமில்லை. முன் கேட் வரைக்கும் வந்தார். இது தணிகாசலத்தை திருப்திப்படுத்திற்று. 'தேனீர் கொடுக்காவிட்டாலும், நம்மோடு கேட்வரை வந்து வழியனுப்புகிறாரே...' என்று அந்தப் பெரிய மனிதரின் பண்பாட்டை வியந்தார்.

"உதவிக்கு யாருமே இல்லை. அதனாலதான் நானே வந்து கேட்டையும் அடைக்க வேண்டியிருக்கு! பாருங்க என் நிலைமையை!" என்றார் செல்வராஜ்.

தணிகாசலம் அப்புறம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை! ◘


படிப்பகம்



# இலக்கிய நயம்

## பாட்டும் பிரிவும்

### தருவது ரசிகன்

**மா**தவி
கரத்தில் கோவலன்
குழந்தையானான்!

"விளக்குக்கு
ஒளி வேண்டும்!
மக்களுக்கு
உரிமை வேண்டும்!
மண்ணுக்கு
விடுதலை வேண்டும்!
கண்மணியே!
எனக்கு நீ வேண்டும்!"

என்றான், இழைந்தான்
கோவலன்.

"கண்ணுக்கு
மை வேண்டாம்!
காதுக்கு
வளையல் வேண்டாம்!
கழுத்துக்கு
நகை வேண்டாம்!
வாழ்வுக்கு
நீங்கள் போதும்!"

என்றாள், இசைந்தாள்
மாதவி.

"மனிதனுக்கு
மானம் வேண்டும்!
மண்ணுக்கு
கௌரவம் வேண்டும்!
பெண்ணே எங்களுக்கு
காதல் வேண்டும்!"

"மனதுக்குள்
கபடம் வேண்டாம்!
உதட்டினில்
பொய்மை வேண்டாம்!
கரங்களில்
விலங்கு வேண்டாம்!
கால்களுக்கு
தடைகள் வேண்டாம்!
சுவாசிக்க
சுதந்திரக் காற்று வேண்டும்!
காதல் வாழ
கபடற்ற அன்பு வேண்டும்!"

"வேண்டுவது
கிடைக்கும் கண்ணே
விரும்புவது
தருவேன் கண்ணே!
தீண்டுவது இன்பம்-உன்னை
தீண்டவிடு கொஞ்சம்!"

கோவலன் கைகள்
தேடுதல் வேட்டையில்!
மாதவி மனமோ
மட்டற்ற ஆசையில்!

கண்ணால் எரிக்கவில்லை
கைகள் தடுக்கவில்லை
இதழ்கள் மறுக்கவில்லை

எதைப் பெறவும்
எந்தத் தடையுமில்லை!

வேலிகள் விலகியதால்
வெள்ளாடானான் கோவலன்
வேட்டையென மேய்ந்தான்.
விரும்பும் வரை சென்றான்!

பாதம் முதல்
உச்சி வரை-அவளை
வீணையென இசைத்தான்!

"மூக்கழகும்
முன்னழகும்-அடியே
முறுவலிக்கும் முகத்தழகும்
மூட்டுதடி மோகத்தை!
மூர்ச்சித்து போகாமல்
முத்தத்தால் உயிரூட்டு!"

கோவலன்
மோகத்தால் தவித்தான்!

"தண்ணீரில் மீன்போல
நான் இருந்தேன் முன்னாலே!
தரைக்கு வந்த மீனாக
துடிக்கிறேனே உம்மாலே!"

மாதவியும்
தன் தாபம் சொன்னாள்!
நெருப்பு உலையாக
மூச்சு விட்டாள்!

"நீரில் விளையாடும்
மீன்போல-என்
நெஞ்சில் விளையாடும்
மீன் நீயே!
கடலும் நானேதான்
துடிக்காதே துள்ளியிரு!"

கோவலன் கரத்தில்
மாதவி குழந்தையானாள்!
மடிமீது
தாவித் தவழ்ந்தாள்!

"உனக்கு
நான் குழந்தை!
எனக்கு
நீ குழந்தை!
உனக்கு
நான் ஆசான்!
எனக்கு
நீ ஆசான்!
நினைப்பு எப்படியோ
மனக் கணக்கு அப்படியே!
பிணக்கே இல்லாமல்
மணக்கட்டும் நம் உறவு!"

மோகப் புயலடிக்க
ஆசைக் கடல் பொங்க
தேகங்கள் தேய அங்கே
யாகம் விடியும் வரை!

பட்டு மேனி சிவந்தது-அதில்
பட்ட மேனியும் சிவந்தது!
கட்டிக் கொள்ள கனிந்தது
கட்டிய மேனியும் கனிந்தது!

வேள்வியில் உருகி
விடிந்த பின்னர் கண்ணயர்ந்தனர்!

மாலையில்
கை கோர்த்து
மணல் மீது நடந்தனர்.
காவிரிக் கரை ஓரத்திலே
காதலர் இருவரும் அமர்ந்தனர்!

மாதவியின் கரத்தில்
மகர யாழ் இருந்தது!

"நாயகனே!
இசை மீட்ட ஆசை
பாட்டொன்று தாரும்"
என்றாள் மயக்கும் விழியாள்!

காவிரி நதி
கரை புரண்டோடியது.
கண்ட கோவலனுக்கு
கண்ணகி ஞாபகம்
மடை திறந்தது!

மாதவியை மறந்துபோனான்
சூழ்நிலையை மறந்து போனான்!

"காவிரியே! காவிரியே!
சோழன்
கங்கை நதி நாட்டையும்
கைப்பிடித்தானே!
காவிரி நான் இருக்க
கங்கை உனக்கெதற்கு
என்று நீ கேட்டாயோ?
கேள்வி நீ தொடுத்தாயோ?"

நதி பாய்ந்த திசையில்
பாட்டில் வினா பாய்ந்தது!

மாதவி துணுக்குற்றாள்.
"நான் இங்கே
இவர் எங்கே?"

கோவலன்
அத்தோடு நிறுத்தவில்லை.

மான் என்றும்,
மயில் என்றும்,
தேன் என்றும்
நேற்றிரவு சொன்ன வாயால்
கண்ணகியின்
அழகையன்றோ புகழ்ந்தான்!

"வெண்ணிலவே, ஏய் நிலவே!
என்னவள் முகம் போல
உன் முகம்
சிறக்க வேண்டுமா?

உன் முகத்தில்
மீன் இரண்டு கீறிக்கொள்
என்னவள் கண்போல் இருக்கும்.

வில் போன்றும் கீறிக்கொள்
என்னவள் புருவம் போல் ஆகும்!

கார் முகிலை பிடித்து
கார் கூந்தல் போல் சுமந்து கொள்!

அத்தனையும் செய்தாலும்
பித்தாக அலையவைக்கும்
முத்தான அவள் முகத்து
காந்த ஒளி பெற்றால் மட்டும்தான்
ஒப்பாவாய், ஈடாவாய் அவளுக்கு!"

பாடி முடித்தவன்
திகைத்துப் போனான்
மாதவியைக் காணவில்லை!
பிரிவுக்கு பாடல்
விதையானது!

கோவலன் கண்ணகியை
புகழ்ந்ததாய்
மாதவி கோபித்த
பாடல் இதுதான்.

**"கயலெழுதி வில்லெழுதி
காரை முதிக் காமன்
செயலெழுதி தீர்ந்தமுகம்
திங்களோ காணீர்"**

எழுதியவர் இளங்கோ அடிகள்
சிலப்பதிகாரம் (கானல் வரி பாடல்கள்)

ஸ்போர்ட்ஸ்

## முன்னாள் பயிற்சியாளர் மாற்றப்பட்டது ஏன்?

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் வட்மோர் மாற்றப்பட்டது ஏன்? இப்போது உண்மையைச் சொல்கிறார் கப்டன் அர்ஜுன ரணதுங்கா.



**கேள்வி:** உங்கள் அணி கோச் வட்மோர் மாற்றப்பட்டு, புரூஸ் யார்ட்லி வந்ததற்கு என்ன காரணம்? உங்களுக்கும், அவருக்குமான தனிப்பட்ட தகராறா? உங்களின் உலகக்கோப்பை வெற்றிக்கு வட்மோரின் பங்கு முக்கிய காரணம் இல்லையா?

**அர்ஜுன:** வட்மோரால்தான் உலகக் கோப்பையை வென்றோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஜெயசூரியவும், அரவிந்தவும் ரன் எடுத்தது வட்மோராலா என்ன?

ஒரு கோச் என்பவர், ஆட்டக்காரர்களுடைய குறைகளைப் போக்கி, நம்பிக்கையை வளர்த்து ஆட வைப்பவராக இருக்க வேண்டும். அதற்குத்தான் அவர் சம்பளம் வாங்குகிறார்.

அப்படித்தான் வட்மோரும் எங்களுக்கு ஆலோச்னைகள் வழங்கினார். நாங்களும் வெற்றி பெற்றோம். அதனாலேயே வெற்றிக்கான முழுப்பங்கும் தமக்கே சொந்தம் என்று அவர் நினைப்பதா? அப்படி நினைத்ததால்தான் அவர் மாற்றப்பட்டு யார்ட்லி வந்துள்ளார்.

அணியின் கப்டனும் கோச்சும் ஒரே கருத்தில் இருந்தால்தான் வெற்றி பெற முடியும். கருத்து மாறுபடும்போது எதிர்க் கருத்துக் கூறுபவர் மாறவேண்டியது தான்.

நீயா நானா என்கின்ற பிரச்சனையால் தான் வட்மோர் மாற்றப்பட்டார். கிரிக்கெட் சபையும் என்னை ஆதரித்தது. இப்போது நானும் யார்ட்லியும் எல்லா முடிவுகளையும் சேர்ந்தே எடுக்கின்றோம்.

**கேள்வி:** இப்போது உங்கள் அணியில் நன்றாக ஆடக்கூடிய அனைவருமே ஓய்வு பெறக் கூடிய வயதில் உள்ளீர்கள். அடுத்த வரிசைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்.

**அர்ஜுன:** நான், ஜெயசூரிய, டி சில்வா, மகாநாம ஆகியோர் அந்தக் கால கட்டத்தில் இருக்கிறோம் என்பது உண்மை தான். நாங்கள் அனைவரும் 1999ல் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கோப்பைப் போட்டிவரை ஆடுவதாக உத்தேசம். நாங்கள் சாம்பியன் தான் என்பதை மறுபடியும் ஒருமுறை நிரூபித்துவிட்டே ஓய்வு பெறுவோம்.

மற்றப்படி எங்கள் பொலர்கள் அனைவருமே இளைஞர்கள்தான். அதனால் அதுபற்றிக் கவலையில்லை. பேட்டிங் பற்றித்தான் கவலைப்படுகின்றோம். அதனாலேயே புதியவர்களைச் சேர்த்து, அவர்களுடைய திறமைகளைச் சோதித்து, அவர்களை அடையாளம் காணுகிற முயற்சியில் இறங்கியிருக்கிறோம்.

நன்றி-கல்கி

## இவர்கள்தான் அவர்கள்



சௌகார் ஜானகி



விஜயகுமாரி

## சிந்தியா பதில்கள்

*** ரஜினி, கமல் ஆகியோரிடம் உங்களுக்கு பிடித்தது?**

கே. ரவி, ஹெந்தளை.

முன்னவரிடம் உயர்விலும் பணிவு, பின்னவரிடம், பகுத்தறிவில் உறுதி.

*** பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்புக் கிட்டுமா?**

மு. மகாலிங்கம், சிலாபம்.

வாய்ப்புக் கிடக்கட்டும் விடுங்கள், பாரதிய ஜனதாவுக்கும் ஒருமுறை வாய்ப்புக் கொடுத்துத்தான் பார்க்கலாமே என்ற அபிப்பிராயம் இந்திய வாக்காளர்களிடம் கணிசமானளவு உயர்ந்திருப்பது உண்மையாம்! அது இலாபம்தானே!

✉ ✍

*** மனைவிதான் மந்திரி என்பது உண்மை தானா?**

கா. சௌந்தரநாயகம், கொட்டாஞ்சேனை.

நெப்போலியன் காதலித்து கைப்பிடித்தவர் ஜோசபின்.

நெப்போலியனும் மனைவியும் போர் பற்றியும், நாட்டு நிலவரம் பற்றியும் அடிக்கடி விவாதிப்பார்கள். மனைவி கூறும் ஆலோசனைகள் அபாரமாக இருக்கும்.

ஒரு கட்டத்தில் நெப்போலியனுக்கும் மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துபோனார்கள்.

அதன்பின்னர் நடைபெற்ற போர்களில் நெப்போலியனின் தோல்விகள் ஆரம்பமாகின. இது வரலாறு. இதனைப் புரியாவிட்டால் ஏற்படுவது தகராறு.

✉ ✍

*** இந்நாள் அமைச்சருக்கு முன்னாள் அமைச்சர் அஷ்வர் கொடுத்தது அடியா, கடியா?**

மா. உதயா, வவுனியா.

அடியாவது, கடியாவது, முதலில் தனது கட்சியில் உள்ள முன்னாள் ஹெல உறுமயக்காரர்களை கடிக்கட்டும் பார்க்கலாம்!

✉ ✍

*** நெத்தியடியாக கருத்துச் சொல்வது என்றால் எப்படி?**

எம்.என். சுபைர்கான், கல்முனை.

(முரசிடமா இந்தக் கேள்வி?!)

இந்தியாவின் பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங் ஆசிரியராக இருந்த பத்திரிகை கருக்கலைப்புப் பற்றி தனி இதழ் ஒன்றைக் கொண்டு வந்தது.

அதன்பின்னர் ஒரு வாசகி எழுதிய கடிதம்: "உங்கள் தாயாருக்கு இந்த நல்ல புத்தி இருந்திருந்தால், இப்படியொரு பத்திரிகை ஆசிரியரை சகித்துக் கொள்ளும் கொடுமை எங்களுக்கு நேர்ந்திருக்காது"

(அவரே சொன்ன தகவல்)

✉ ✍

*** ஜெயின் கமிஷன் அறிக்கையில் புலிகளுக்கு உதவியதாக கருணாநிதிமீது புகார் கூறப்பட்டுள்ளதே, வை. கோபாலசாமியின் நிலை?**

ஜே. சாரங்கன், கொழும்பு-05.

மௌனம்!

✉ ✍

*** சிந்தியா! செல்வநாயகம் சமஷ்டி ஆட்சி கோரியதாக மறுபடியும் சிவசிதம்பரம் கூறியுள்ளாரே?**

இ. தேவதாஸ், தெகிவளை.

இனி உதவாது என்று மூதறிஞர் செல்வநாயகம் தூக்கியெறிந்த துடுப்பைத் தேடி எடுத்து வைத்துக்கொண்டு, தற்காப்பு ஆட்டம் ஆடுகிறார் மிஸ்டர் சிவசிதம்பரம். அதாவது மட்டை போடுகிறார். எங்களுக்கு மொட்டை போடப் பார்க்கிறார்!

✉ ✍

*** மட்டக்களப்பில் மாணவர்கள் கடும் சோதனைக்கு உள்ளானது பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

சி. குணராசா, மட்டக்களப்பு.

புலி வளர்க்கிறார்கள்!

✉ ✍

*** சிந்தியா! ஒரு பிரபாகரன் ஒழிந்தால், எத்தனையோ பிரபாகரன்கள் உருவாகுவர் என ஜனாதிபதி கூறியிருக்கிறாரே?**

என். மீனலோஜினி, வவுனியா.

படித்தேன்! பொதுக்கூட்டத்தில் கூறியிருக்கிறாராம்! முப்படைக் கூட்டத்தில் கூறியிருந்தால் நியாயம். மக்களிடம் கூறி என்ன பயன்? அவர்களா போர் நடத்துகிறார்கள்?!

✉ ✍

*** நடிப்பு ஒரு போதை என்று ரஜினி கூறியுள்ளார்? அது சரியா?**

எம். ஹசன், கண்டி.

அப்படியானால் நடிகர்கள் எல்லாம் வெறியர்கள் என்று அர்த்தமா? கூறியது ரஜினி என்றாலும் அக் கூற்றில் பிழை உண்டு!

✉ ✍

*** டியர் சிந்தியா! ஜெயின் கமிஷன் அறிக்கை நியாயமானதா? அநியாயமா?**

பி. ஜெயராமன், பண்டாரவளை.

பக்கச்சார்பானது! பாரதிய ஜனதாக் கட்சியின் ஆசாமிதான் ஜெயின் என்று திடுக்கிடும் தகவல் ஒன்று வெளியாகி இருக்கிறது! மத்திய ஆட்சியில் மாபெரும் குழப்பத்தை தோற்றுவிக்க பாரதிய ஜனதா ஏவிய பிரம்மாஸ்திரம்தான் ஜெயின் அறிக்கையாம்!

✉ ✍

*** ரஜினி அரசியலுக்கு வந்தால் தமிழக அரசியல் நிலை என்னாகும்?**

ஆர். ஆனந்தராசா, செங்கலடி.

அங்குள்ள அரசியல்வாதிகள் ரஜினியிடம் புகலிடம் தேடுவர். கிடைத்தவர் புகழ்வர். கிடைக்காதவர் இகழ்வர்.

✉ ✍



'இதுதான் காதல்' படத்தில் அப்பாஸ்-அமுல்யா (ரம்பாவின் தங்கை?)

*** நடிகை ரம்பாவின் தங்கையும் நடிக்க வந்துள்ளாராமே?**

செல்வி இ. பத்மா, திருமலை.

அவளா சொன்னாள், இருக்காதே, எனக்கு தங்கையே இல்லையே என்ற கோதாவில் பேட்டி கொடுத்துள்ளாரே ரம்பா.

✉ ✍

*** மூட நம்பிக்கை பரவ யார் காரணம்?**

பி. மாதவன், மட்டக்களப்பு.

நாம்தான்! நம் அரசியல் தலைவர்கள் விடும் அறிக்கைகளையும், உரைகளையும் நம்பிக்கொண்டிருப்பதில் நம் மூடநம்பிக்கை ஆரம்பமாகிறது. அந்த அமைச்சரைப் பார்த்தோம். இந்த அமைச்சரைப் பார்த்தோம். எடுத்துரைத்தோம். காதுகொடுத்துக் கேட்டார்கள். நடவடிக்கை எடுக்க ஆணையிட்டார்கள் என்றெல்லாம் கூறுவதை கேட்டு கேட்டு அந்த மூடநம்பிக்கை வளர்கிறது!

✉ ✍

*** கமலின் 'மருதநாயகம்' படத்திற்கு இசை யார்?**

எஸ். கலிஸ்ரா, நீர்கொழும்பு.

'கார்த்திக்ராஜா, ஜாகீர் உசேன் இருவரும் இணைந்து இசை அமைக்க உள்ளனர்' என்று ஒரு பட்சி கூறுகிறது.

*** டியர் சிந்தியா! என் காதலிக்கு கடிதம் எழுத 'விரும்புகிறேன். எப்படி ஆரம்பிப்பது?**

வி. செபஸ்டியன், களுபோவில.

ஆரம்பமே தடுமாற்றமா? பரவாயில்லை. அடுத்த நூற்றாண்டில் கம்பியூட்டரே (கணனி) காதல் கடிதம் எழுதித்தருமாம். எழுத்தாளர் சுஜாதாவின் கற்பனையைப் பாருங்கள்:

**கணனி :** காதல் கடிதம் கவிதையிலா? உரைநடையிலா?

**நீங்கள்:** உரை நடை

**கணனி:** எப்படி ஆரம்பிப்பது? இனிய காதலிக்கு! என் உயிரினும் இனிய ஸ்நேகியே! அன்பே.

**நீங்கள்:** அன்பே

**கணனி:** எந்த நடை கண்ணியமான நடையா? கவிதை கலந்த நடையா? அல்லது அந்தரங்க நடையா?

**நீங்கள்:** அந்தரங்கம்.

**கணனி:** எத்தனை வரிகள்?

**நீங்கள்:** பதினெட்டு, ஒரு பாரதியார் கோட்டேஷன் வேணும்.

**கணனி:** எந்தக் காதலிக்கு அனுப்ப வேண்டும்? சுலோசனா, கஸ்தூரி, கமலா, அல்லது ஜெனிஃபர்.

**நீங்கள்:** பாஞ்சாலிக்கு! லிஸ்டில் சேர்த்துக் கொள்.

**கணனி:** உங்களுக்கு விவஸ்தையே கிடையாதய்யா. "என் லேசர் விழிக் காதலி நீ இல்லாத வாழ்வு, அலைவரிசை முடிந்த டெலிவிஷன் போல இருக்கிறது. எப்போது உன் சம்மதம் கிடைக்கும்? நீ கிடைத்தால் வாரக் கணக்கில் சந்தோசம். சம்மதம் இல்லையேல் ப்ளாட்டின் மோதிரத்தை டி.எச்.எல்.மூலம் அனுப்பி விடவும். இப்படிக்கு உன்னையே சில சமயம் எண்ணும் பரஞ்சோதி."



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 111

## போர்க்கோலம் பூண்டார் இராமபிரான்

இராமபிரான் அருகில் ஆஞ்சநேயர் நின்றிருந்தார். விபீடணரும் அங்கதனும் எதிர்ப்புறத்தே நின்றனர். இலக்குவன் இராமபிரானின் அம்பறாத்தூணியை எடுத்துக் கொடுக்க ஆஞ்சநேயரும் விபீடணரும் அதனை அண்ணலின் இடது புறத்தின் பின்புறமாகச் சேர்த்துக் கட்டிவிட்டனர். அதனுள் ஒவ்வொரு கணையாக- மிகப் பக்குவமாக அடுக்கிவிட்டனர். கோதண்டத்தை பயபக்தியோடு பணிந்து பிரார்த்தித்த வண்ணம் இராமபிரான் தனது வலது கையிலேந்தியதும், ஆஞ்சநேயர், "ஸ்ரீ ராம ஜெயம்!" என்று உரத்த தொனியில் உச்சரிக்க, எதிரே நின்ற வானர வீரர்கள் அனைவரும் ஒரே குரலில் அம்மந்திரத்தை ஜெபித்தனர். அந்த ஒலி இலங்காபுரி எங்கும் எதிரொலித்தது.

அசோக வனத்திலிருந்த சீதாப் பிராட்டியாரின் செவிகளிலும் அவ்வோசை புகுந்தது. அதனால் அவருள்ளம் பரவசமடைந்தது.

போர்க்களத்தில் அசுரர்படை ஆர்ப்பரித்த வண்ணம், அணியணியாக வந்து திரள்வதையும் இடையிடையே இராவணனின் மூலபலப் படை நெருங்கி வருவதையும் கண்ட வானரப் படை நடுநடுங்கிப் புறமுதுகிட்டோடத் தொடங்கியதைக் கண்ட வாலி மகன் அங்கதன் கடும் சினம் கொண்டவனாக, அப்படைகளைத் தடுத்து நிறுத்தினான். அப்படைகளுடன், முதியவரான ஜாம்பவனும் தயங்கித் தயங்கிச் செல்வதைக் கண்ட அங்கதன் துணுக்குற்றான்.

"ஐயா ஜாம்பவரே! சூரிய தேவனிடம் வேதம் கற்றவரான ஆஞ்சநேயருக்கு நிகரான வரல்லவா தாங்கள்? திருமாலின் அவதாரமே இராமபிரான் என்ற உண்மையை எங்களுக்கு எடுத்துக் காட்டியவராயிற்றே! சஞ்சீவி பர்வதம் இருக்குமிடத்தை மாருதிக்கு எடுத்துக்கூறி, அம்மலையைத் தருவித்து, இளையபெருமாளாகிய இலக்குவனையும், எப்போதோ மாண்டு மடிந்த எண்ணற்ற வானரப்படைகளையும் உயிர் பெற மீட்டுத் தந்தவரல்லவா? அர்ப்ப அசுரர்படை கண்டு தாங்களும் அஞ்சி ஓடத் துணியலாமா? இராமபிரானது ஆற்றலும் இளையபெருமாளது திறமையும், ஆஞ்சநேயர், மாமன்னன் சுக்கிரீவன் ஆகியோரது வீரமும் எம்மனை வரையும் காப்பாற்ற மாட்டா என்று துணிந்து விட்டீர்களா...?"

### "சாதல் நன்றே!"

அங்கதன் வேதனையும் வெஞ்சினமும் கொண்டு கூறிய வார்த்தைகள் ஜாம்பவனின் உள்ளத்தைத் தைத்தன. அங்கதன் மேலும் கூறியதாக கம்பர் பெருமான் இவ்வாறு கூறுகிறார்:

அஞ்சினாம் பழியும் பூண்டாம்
அம் புவி ஆண்டும் ஆவி
துஞ்சுமாறு அன்றி வாழ
ஒண்ணுமோ நாள் மேல் தோன்றின்
நஞ்சுவாய் இட்டாலன்ன
அமுது அன்றோ நம்மை அம்மா
தஞ்சம் என்று அணைந்த வீரர்
தனிமையில் சாதல் நன்றே!

(யுத்த காண்டம்-3284)

பொருள்:

"அச்சமுற்றதால் இவ்வுலகத்தில் பெரும்பழியினையும் தேடிக்கொண்டோம். நாம் எங்குதான் ஓடிச்சென்று ஒளிந்து கொண்டாலும் சாவிலிருந்து நாம் தப்பி விட முடியுமா? எமது வாழ்நாள் நீடிக்க வேண்டும் என்ற விதி இருந்தால், நஞ்சினை எமது வாயில் கொண்டு வந்து ஊட்டினாலும் அது அமுதமாகிவிடாதோ? எம்முடன் ஒன்று சேர்ந்தவர்களை விட்டு நாம் தனியாகத் தப்பிச் செல்லப் பார்ப்பதிலும் இறந்து விடுவதே மேலாகும்!"

அங்கதன் இவ்வாறு கூறியதும் ஜாம்பவன் தன்செயலை எண்ணி வெட்கப்பட்டான். புறமுதுகிட்டோட முனைந்த வானர வீரர்கள் முன்னிலையில் ஓடிச்சென்று அனைவரையும் தடுத்தான். அவர்களுக்குத் தைரியமூட்டும் வார்த்தைகளைக் கூறி போர்க்களம் நோக்கித் திருப்பி விட்டான்.

☆☆☆

இராமபிரான் போர் வீரனுக்குரிய சகல அணிகளையும் அணிந்தவராக முன்வர, அவர் பின்னே- நிழல் போல் இளைய பெருமாள் இலக்குவனும் நடந்தார். ஆஞ்சநேயர் இராமபிரான் முன்னால் ஓடி வந்து தாள் பணிந்து, "ஐயனே! என்னுடைய ஒரே யொரு கோரிக்கையைக் கருணை கூர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்திரஜித்துவுடன் போரிட இளையபெருமாளை என் தோள்மேல் சுமந்துச் சென்றேன். அதேபோல் இராவணனுடன் பொருதப் புறப்பட்டுள்ள தங்களையும் இவ்வடியேனின் தோளில் சுமந்துச் செல்லத் தயவுகூர்ந்து அருள்புரிய வேண்டுகிறேன்!" என்று விண்ணப்பித்தார்.

### "கோதண்டமே துணை!"

இராமபிரான் புன்முறுவல் காட்டிய வண்ணம் கூறியதாவது:

"அருமைக்குரிய ஆஞ்சநேயா! மாபெரும் ஆற்றலுள்ள உம்மை என் வாகனமாக்க நான் விரும்பாமலில்லை. ஆனால் எனக்கு எவ்வித வாகனமும் தற்போது வேண்டாம். இந்திரஜித்துவை இலக்குவன் வெல்ல



உதவியவன் நீ! ஆகவே இளையபெருமாளுடன் சென்று அவனுக்குத் துணையாக நிற்க வேண்டும்!"

விபீடணரைப் பார்த்து, "விபீடணரே! உமது தம்பியாகிய இலக்குவனுடன் சென்று துணை புரிக! அரக்கர் படையினர் புரியும் மாயாலீலைகளை அறியும் ஆற்றல் தங்களிடம் உண்டு. அவற்றை அவ்வப்போது அறிந்து இலக்குவனுக்கு அறிவுறுத்த வேண்டும். சூரியன் மகனான சுக்கிரீவன், வாலிமகனான அங்கதன் ஆகியோரும் இலக்குவனுடன் செல்லட்டும், நான் தனித்து நின்றே என் கோதண்டத்தின் துணையுடன் அரக்கர் படையை அதம் செய்வேன்!"

இராமபிரான் இவ்வாறு கூறியதும் இலக்குவன் தன் அண்ணன் தாள் தொட்டெழுந்தான். இருவரும் ஆலிங்கனம் செய்து கொண்டனர். விபீடணர் சுக்கிரீவன், ஆஞ்சநேயர் ஆகியோரும் அவ்வாறே இராமபிரானைத் தொழுதெழுந்து புறப்பட்டனர். புயலெனப் புறப்பட்ட இலக்குவனைத் தொடர்ந்து ஏனையோரும் வானரப்படைகளின் அணிகளுடன் இணைந்தனர்.

இலங்காபுரியிலிருந்து போர் முழக்கம் எழுந்தது. போர் முரசுகள் இடிபோல் எழுந்தன. அணி அணியாக அசுரர் படை முன்புறமும் இருமருங்கும் சூழ்ந்துவர இலங்கையர் கோன் இராவணன் தகதகவென ஒளிவீசும் தேரிலேறி முன் வந்தான்.

இராமபிரான் தனக்கெனத் தனியானதோர் இடத்தினைத் தேர்ந்தெடுத்து, நின்ற வண்ணம் தன் கோதண்டத்தில் நாணேற்றினார். புயல் போன்று அம்புகளைத் தொடுத்து அரக்கர் படையினரைத் திணறடித்தார். இராவணனுக்கு வெற்றியை ஈட்டித்தரும் வல்லமை படைத்த படை என்று கருதப்பட்ட மூலபலப் படை சின்னாபின்னப்பட்டுச் சிதறியது. இராமபிரானின் ஒவ்வொரு கணையும் ஓராயிரம் கிளைகள் போன்று தீயினைக் கக்கிக் கொண்டு அரக்கர் சேனையைத் தாக்கியமையினால், மாண்டு மடிந்தவர்கள் போக, எஞ்சியவர்கள் சிதறி ஓடினர்.

### மோகக் கணை

ஒப்புவமையற்ற தனது பெரும்படை இராமபிரானின் பாணங்களால் ஒருபுறமும் இலக்குவனின் கணைகளால் மறுபுறமும் சரிந்துவிழுதல் கண்ட இராவணன், இனிப் பொறுத்துப் பயன் இல்லை என்று கருதியவனாக இலக்குவனை முதலில் எதிர்க்கத் திட்டமிட்டான்.

இளைஞனான இலக்குவனை வீழ்த்துவதற்கு மோகக் கணையைப் பயன்படுத்தலாம் என்பதுதான் இராவணனின் எண்ணம். இக்கணை சிவபெருமானையே திக்குமுக்காடச் செய்யவல்லது; உருவமற்றது. உரிய மந்திரங்களை பக்தியோடு ஜெபித்தால் மோகக்கணை தானாகவே வந்து நாணில் ஏறிக் கொள்ளும் இந்தக் கணைக்கான மந்திரத்தை இராவணன் ஜெபிக்கத் தொடங்கியதும். இலக்குவன் அருகில் நின்ற விபீடணர் தன் அண்ணனின் நோக்கத்தை உணர்ந்து கொண்டார். மோகக் கணையை முறியடிக்க, திருமாலின் பெயர் கொண்ட பாணத்தை விடுவதே நல்லது என்று இலக்குவனிடம் விபீடணர் உரைத்தார். இராவணனின் வில்லிலிருந்து மோகக்கணை புறப்பட்ட அதே வினாடியில், இலக்குவனின் வில் லிலிருந்து திருமால் கணை சீறிப் பாய்ந்தது. இருகணைகளும் இடைவெளியில் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு மறைந்தன.

தான் வீசியகணை செயலிழந்து போனமையினால் ஏமாற்றமடைந்த இராவணன், தனது தம்பியான விபீடணரால்தான் தனது சிறப்பான பாணம் சிதைந்து போனது என்று கடும் சீற்றம் கொண்டான். தனது மனைவியான மண்டோதரியை மணம் முடிக்கும்போது, அவளுடைய தந்தை மயன் இராவணனுக்கு ஒரு வேலாயுதத்தினைப் பரிசாக அளித்திருந்தான். இந்த ஆயுதம் தாக்கினால் படைப்புக் கடவுளான பிரம்மாவினால்கூட உயிருடன் தப்பமுடியாது. இவ்வாயுதம் பிரம்மதேவனாலேயே உருவாக்கப்பட்டது. அந்த ஆயுதத்தை விபீடணர் மீது இராவணன் ஏவினான். அவ்வேலும் விரைந்து வந்து கொண்டிருந்தபோது, விபீடணர் இலக்குவனிடம், "தம்பி இலக்குமணா! என் உயிரைப் பறிக்க அதோவருகிறது வேலாயுதம். இதிலிருந்து என்னால் தப்பவே முடியாது!" என்று வணங்கினார்.

இலக்குவன், "தஞ்சமென்று வந்த தங்களை என் உயிர் கொடுத்து காப்பேன், அஞ்சவேண்டாம்!" என்று விபீடணரைப் பின்னே தள்ளி, வேலாயுதத்தைத் தன் மார்பிலே வாங்க முன்பாய்ந்தார். 'இலக்குவனைக் காப்பாற்றியாக வேண்டும்! அவர் வேலால் மடிந்தால், இராமபிரானும் உயிர் வைத்திருக்க மாட்டார்' என்று கருதிய அங்கதன் இலக்குவனுக்கு முன்னால் ஓடிச்சென்று நின்றான். அங்கதனை விலக்கிவிட்டு சுக்கிரீவன் முன் பாய்ந்தான். இவர்களனைவரையும் முந்திக் கொண்டு ஆஞ்சநேயர் பாய்ந்து சென்று, வேலினைத் தன் மார்பில் வாங்க ஆயத்தமானார். இலக்குவனோ இவர்கள் அனைவரையும் ஒரே வீச்சில் ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னோடி வரவும் அவர் மார்பில் வேல் பாயவும் சரியாக விருந்தது.

இலக்குவனின் மார்பில் பாய்ந்த வேல் அவருடைய முதுகுப்புறத்தால் வெளியேறிச் சென்று விட்டது. இலக்குவன் அடியற்ற மரம்போல் தரையில் சாய்ந்தபோது, ஆஞ்சநேயர் ஓடிச்சென்று தாங்கி இலக்குவனின் உயிரற்ற உடலைத்தன் மடிமீது கிடத்தினார்.

இராஜகுமாரன்

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 109**
**சரியானவிடை:- மண்டோதரி**

1. நிஸானா ஃபாத்தி,
497/10, மின்ஹாத் மாவத்தை, திஹாரிய.
2. ரீ.ஜே. அகமத் ஜான்,
163, மகூதி வீதி, திருகோணமலை.
3. சி. ரவிச்சந்திரன்,
உப்போடை வீதி, வந்தாறுமூலை.
4. புஸ்பகாந்தன்,
பிரவுன்ஸ்வீக் தோட்டம், மஸ்கெலியா.
.. சு. சுபாஜினி, மகாவித்தியாலய வீதி, தேத்தாத்தீவு-02, மட்டக்களப்பு.

**போட்டி இல. 111** கேள்வி:- இலக்குவன் மீது இராவணன் ஏவிய ஆயுதங்களின் பெயர்களைத் தருக?

டிசம்பர் 13 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி– இல.111, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

# காதிலை பூ கந்தசாமி

## ஜெயினும் நானுமா?

**ஜெயின்:** கருணாநிதி என்பவர் நீர்தானே?
**கலைஞர்:** ஆம் என்று சொல்லும் நாடு!
**ஜெயின்:** நேரடியான பதில்தான் தேவை!
**கலைஞர்:** நெத்தியடியான பதில் தரவும் நான் தயார்!
**ஜெயின்:** இது விசாரணைக்கமிஷன், விசேஷ கூட்டமல்ல!
**கலைஞர்:** எங்களுக்கு தூக்கு மேடை, பஞ்சமெத்தை, விசாரணைக் கமிஷன், விசேஷ கூட்ட மேடை!
**ஜெயின்:** கிண்டல் வேண்டாம்!
**கலைஞர்:** உடன்பிறப்புக்களிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உங்களை சுண்டல் பண்ணி வடநாட்டுக்கு பொதியாக அனுப்பி வைத்துவிடுவார்கள்! ஆனால் நமது கழகம் வன்முறையை வரவேற்பதில்லை என்ற காரணத்தால், சுண்டல் பண்ணாமல் கிண்டல் பண்ணிக் கொண்டிருக்கிறோம்!'
**ஜெயின்:** கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்!
**கலைஞர்:** கேட்டால்தான் கேள்வி, கேட்கா விட்டால் கேள்வியே இல்லையே!
**ஜெயின்:** குதர்க்கம்.
**கலைஞர்:** இதன் பெயர் தர்க்கம்!.
**ஜெயின்:** உமது நோக்கம்தான் என்னவோ?
**கலைஞர்:** தற்போதைக்கு உமது கேள்விகளுக்கு தக்க பதில் செப்புவது!
**ஜெயின்:** கேள்விகளை கேட்கட்டுமா?
**கலைஞர்:** கேளும்!
**ஜெயின்:** புலிகளுக்கும் உமக்கும் என்ன தொடர்பு?
**கலைஞர்:** இந்திரா காந்திக்கும் புலிகளுக்கும், எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் புலிகளுக்கும், ஜெயலலிதா அவர்களுக்கும், புலிகளுக்கும், (மேலும் யோசிக்கிறார்) ராஜீவ் காந்திக்கும், புலிகளுக்கும் இடையே என்ன உறவு இருந்ததோ, அதே உறவுதான் இந்த முத்துவேலர் கருணாநிதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும்!
**ஜெயின்:** உங்கள் ஆட்சியில்தானே விடுதலைப் புலிகள் இங்கே சுதந்திரமாக நடமாடினார்கள்?
**கலைஞர்:** ஹாஹாஹா
**ஜெயின்:** என்ன சிரிப்பு?
**கலைஞர்:** ஏனையோர் ஆட்சியில் மட்டும், புலிகள் கூண்டுக்குள் நடமாடினார்கள் என்றோ நினைத்துக் கொண்டிருக்கிறீர்? தமிழக எல்லை தாண்டி பெங்களூரில்தானே கண்டுபிடிக்கப் பட்டனர்? அதனால் ஆளுநர் ஆட்சி ராஜீவ் கொலைக்கு செய்தது சூழ்ச்சி என்பீரா நீர்?
**ஜெயின்:** (முடியைப் பிய்க்கிறார்) புலிகளுக்கு ஆதரவளித்தது தேசத் துரோகம் மிஸ்டர் கருணாநிதி!
**கலைஞர்:** ஆதரவளித்ததே தேசத் துரோகம் என்றால், ஆயுதப் பயிற்சி அளித்த மத்திய அரசு தேசத்துரோக அரசு என்று அர்த்தமா கனம் நீதிபதியவர்களே?
**ஜெயின்:** இந்தியப் படையை புலிகள் எதிர்க்கத் தொடங்கிய பின்னர் ஆதரவளித்ததுதான் தேசத்துரோகம்!
**கலைஞர்:** இந்தியப் படையை புலிகள் எதிர்க்கத் தொடங்கியபோது ஆட்சியில் இருந்தது நானல்ல என்பது உமக்கு தெரியாதா? என் நாற்பதாண்டு கால நண்பர் எம்.ஜி.ஆர்.தான் ஆட்சியில் இருந்தார்!
**ஜெயின்:** எம்.ஜி.ஆர். புலிகளை வளர்த்தார் என்கிறீரா?
**கலைஞர்:** புலிகளை எம்.ஜி.ஆரும் வளர்க்கவில்லை, நானும் வளர்க்கவில்லை, இலங்கை அரசுதான் வளர்த்தது! இலங்கை அரசுதான் போராளிகளை உருவாக்கியது!
**ஜெ:** ஈழப்போராளிகளை நீர் ஆதரித்த நோக்கம்?
**கலை:** நெல்சன் மண்டேலாவை புதுடில்லி அரசு ஆதரித்த அதே நோக்கம்தான்! பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை புதுடில்லி அரசு போற்றிப் புகழ்ந்த அதே நோக்கம்தான்!
**ஜெ:** குற்றச்சாட்டுக்களை திசை திருப்பப் பார்க்கிறீர்.
**கலை:** திசை திருப்ப இது என்ன விமானமா? விசாரணைக் கமிஷன் அல்லவா?
**ஜெ:** திரும்பி வந்த இந்தியப் படையை நீர் ஏன் விரும்பி வரவேற்கச் செல்லவில்லை?
**கலை:** வெற்றி பெற்று வந்தால் வரவேற்கலாம்! வெளியேற்றப்பட்டு வரும் போது எதற்கு வரவேற்பு? எடுத்த பணியை முடித்துவிட்டு வந்திருந்தால், கை கொடுத்திருக்கலாம்! கெடுத்துவிட்டு வரும் போது எப்படி கை கொடுக்கலாம்?
**ஜெ:** புலிகள் பற்றிய இரகசியங்கள் உமக்கு தெரிந்திருந்தது என்கிறேன்?
**கலை:** தெரிந்துகொள்ள முடிந்திருந்தால் அதன் பெயர் இரகசியம் அல்லவே!



**ஜெ:** அலட்சியம் உமக்கு அதிகம்!
**கலை:** இலட்சியம், அதற்கு எதிரானவை மேல் அலட்சியம், அது என் கூடப்பிறந்த குணம்!
**ஜெ:** கமிஷன் அறிக்கை உமது நாட்களை எண்ணப்போகிறது?
**கலை:** என்ன வேண்டும் என்ற எண்ணத்தில்தான் கற்பனைக் கதைகள் பின்னப் போகிறீர் என்பதும், இன்றைய மத்திய ஆட்சியில் கன்னம் வைத்திருப்போருக்கு நீர் உதவ நினைப்பது திண்ணம் என்பதும் நான் அறிந்ததுதான்!
**ஜெ:** கட்டுக்கட்டாக என்னிடம் ஆவணங்கள் உள்ளன?
**கலை:** அடுக்கி வையும், அல்லது எடைக்கு நிறுத்துப் போடும்!
**ஜெ:** என் தீர்ப்பு திகைப்பாக இருக்கும்!
**கலை:** தீர்ப்புச் சொல்ல நீர் இந்நாள் நீதிபதி அல்ல, முன்னாள் நீதிபதி! உமது பணி 'குட்'டான பணி அல்ல, குட்டையைக் குழப்பும் பணி!
(பாடுகிறார்)

ஜெயின் !
நீயும்- நானுமா- ஜெயின்
நீயும்- நானுமா?
கமிஷன் கூறினால்
ஆட்சி கவிழுமா?....நெவர்!

கலைஞரின் கௌரவம்
கமிஷன் நடுவிலே
விடுக்கின்ற அறிக்கையோ
ஜெயினின் கையிலே!
ஆகட்டும் பார்க்கலாம்
ஆட்டத்தின் முடிவிலே...
ஹா ஹா ஹா!

(ஹாஹாஹா.)
**ஜெயின்:** நீதிபதியையே கேலி செய்கிறீரா?
**கலைஞர்:** நீதிபதி ஜோக் அடித்தால் சிரிக்கக்கூடாது என்று சட்டம் இருப்பதாகத் தெரியவில்லையே!
**ஜெயின்:** உமது ஆட்சிக் காலத்தில்தான் இங்கே கொலைகள் நடந்தன?
**கலைஞர்:** ஏனையோர் ஆட்சிக்காலத்தில் கலையா நடந்தது? மீனம்பாக்க விமான நிலையத்தில் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் அனுப்பிய குண்டு வெடித்தபோது, ஆட்சியில் இருந்தது யார் தெரியுமா?
**ஜெயின்:** யார்?
**கலைஞர்:** எம்.ஜி.ஆர்! அந்த குண்டு வெடிப்பை மறைக்கப் பார்த்தது யார் தெரியுமா?
**ஜெயின்:** யார்?
**கலைஞர்:** இந்திரா அம்மையார்!
**ஜெயின்:** இதெல்லாம் எனக்குத் தெரியாதே?
**கலைஞர்:** தெரியாமல் ஏனய்யா என் தலையை உருட்டுகிறீர்?
**ஜெயின்:** பத்மநாபா கொலை பற்றி உமது அபிப்பிராயம்?
**கலைஞர்:** கொலை! திட்டமிட்ட கொலை!
**ஜெயின்:** கொலையாளிகளை ஏன் கைது செய்யவில்லை?
**கலைஞர்:** கைது செய்வதும், கையில் விலங்கு மாட்டுவதும் முதலமைச்சரின் வேலையல்ல என்று தெரியாதா?
**ஜெயின்:** நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதாகத் தெரியவில்லையே? அது குற்றம் தானே?
**கலைஞர்:** நான் குற்றவாளி என்றால், ராஜீவ் கொலை நடந்தபோது தமிழகத்தை ஆண்ட ஆளுநரும் குற்றவாளிதான்!
**ஜெயின்:** அது எப்படி?
**கலைஞர்:** ராஜீவ் கொலை சூத்திரதாரிகள் என்ன தமிழ்நாட்டில் வைத்தோ கைதா



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகின் இரகசியம்! இதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

436331





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## பாலம்



மக்களின் போக்குவரத்தை துரிதப்படுத்தவும், இலகுபடுத்தவும், விரிவு படுத்தவும் உலக நாடுகளில் என்னமாய் பாடுபடுகிறார்கள்! நம்நாட்டில் பாருங்கள் பக்கத்தில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு கொழும்பில் இருந்து செல்ல எத்தனை தடை? (பணம் இருந்தால் தடை விலகும்)

படத்தில் இருப்பது அமெரிக்காவில் கடல் நடுவே கட்டப்பட்டுவரும் பிரமாண்டமான பாலம். அமெரிக்க மாநிலமான வெர்ஜினியாவின் பிரதான நிலப்பரப்பை கிழக்கு கரையோரப்பகுதியுடன் இணைக்கத்தான் இந்தப் பாலம் கட்டப்படுகிறது.

பலம்மிக்க உருளை வடிவத் தூண்களை கிரேனின் உதவியுடன் கடல் நடுவே செங்குத்தாக நிறுத்தினார்கள். அதன்மேல் கேடர்கள் பொருத்தப்பட்டு பாலம் கட்டப்பட்டு வருகிறது.

எதிரும் புதிருமாக கட்டிக் கொண்டுவந்துவிட்டார்கள். நடுப் பகுதியை இணைப்பதுதான் பாக்கியுள்ளது. 1999ம் ஆண்டு பாதை தயார்.

இச்சாலை திறக்கப்பட்டால் சராசரியாக நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் வாகனங்கள் இதன்மேல் பயணம் செய்யும். இப்பாதையின் நீளம் 17.6 மைல்கள்.

நவீன தொழில் நுட்ப உதவிகள் பாரிய பாலங்களை அமைக்க உதவுகின்றன. நாம் இன்னமும் ராமர் பாலம் அமைக்க அணில் உதவிய கதையைப் பேசிக்கொண்டு இருக்கிறோம்.

## சின்ன சின்ன



இந்த இரண்டு படங்களும் நம்நாட்டு அதிசயங்கள்.

கல்முனையில் எடுக்கப்பட்ட படம் மேல் உள்ளது. முரசின் வாசகர்களான தங்கள் வீட்டு அதிசயத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளனர்.

ஒட்டு மாங்கன்று சிறிசாக இருக்கும்போதே காய்த்துவிட்டது. கனி இருக்க காய் கவரக்கூடாது என்பர். இதில் அந்தத் தொல்லையே இல்லையே. பக்கத்தில் அமர்ந்து பதம் அறிந்து கவர்ந்து விடலாம். கனி கொய்ய கைகளே போதும். தடி தேடும் வேலை மிச்சம்.

---

ஒரு மரத்தில் இரண்டு குலைகள். இப் புகைப்படத்தை அனுப்பிய அன்பு வாசகர் முகவரி கூற மறந்துவிட்டார்.

இவ்வாறு ஒரு வாழை மரத்தில் இரண்டு குலைகள் தோன்றுவது அபூர்வம். வாழையை வளர்த்தவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. மனிதர்களைவிட மரங்கள் நன்றியுள்ளவை. பயன் தந்து மகிழ்விப்பவை.



## ஒன்றில் இரண்டு



## மறக்க முடியவில்லை

அமெரிக்கா செய்யாத கொடுமையும் இல்லை, அதே அமெரிக்கா எழுப்பாத சமாதான முழக்கங்களும் இல்லை. எல்லாம் வேசம். அரோகரா என்று கத்திக் கொண்டே திருவிழாவில் கொட்டமடிக்கும் திருடர்களுக்கும், மனித உரிமை, சமாதானம், பேச்சுவார்த்தை என கூறிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கும் வித்தியாசம் இல்லை.

படத்தில் இருப்பது அமெரிக்காவின் கொடுரங்களில் சிறு துளி மட்டும். வியட்நாம் பூமியை ஆக்கிரமித்த அமெரிக்காவின் இராணுவம் 'மை லேய்' என்ற கிராமத்திற்குள் புகுந்து நாசம் செய்தது. தாய்மார்கள், குழந்தைகள், பெண்கள், குடுகுடு கிழவர்கள் என்ற பேதமே இல்லாமல் சுட்டுத் தள்ளியது. அங்கே இரத்தம் கொப்பளித்தது.

இளம் பெண்கள், வயதான பெண்கள் அனைவரும் அமெரிக்க இராணுவ சதைப் பசிக்கு இரையாகினர். சோகம் தாங்காமல் விம்மியழுகிறார் ஒரு பெண்மணி. இப் புகைப்படங்கள்தான் அமெரிக்க மக்களை தங்கள் அரசுக்கு எதிராகவும் வெகுண்டெழச் செய்தன. 'போர் போதும் திரும்பிவாருங்கள்' என்று குரல் கொடுத்தனர் அமெரிக்க மக்கள்.

நம் நாட்டில் வடக்கு-கிழக்கு அனர்த்தங்கள், மக்களின் உயிரிழப்புக்கள் பற்றிய செய்திகள், புகைப்படங்கள் என்பவற்றை வெளியிடுவதில் சிங்கள சகோதர பத்திரிகைகள் ஏனோ அக்கறைப் படுவதில்லை என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டல் மெத்தப் பொருத்தம்.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



முகம்மது சனா (23.11.1997)

காத்தான்குடி இரண்டாம் குறிச்சி நவாஸ் ட்ரேட்ஸ் உரிமையாளர் ஏ.பி.எம். மிஹ்ழார் (ஜே.பி.) — சமீமா தம்பதியினரின் செல்வப் புதல்வன் முகம்மது சனா தனது இரண்டாவது பிறந்தநாளை 23.11.1997 அன்று தனதில்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடினார். முகம்மது சனாவை அன்பு வாப்பா, உம்மா, பாட்டி (மத்தம்மா), உம்மம்மா, சாச்சிமார், மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, நானாமார், ராத்தாமார், மச்சிமார், மச்சான்மார் மற்றும் — நவாஸ் ட்ரேட்ஸ் ஊழியர்கள் ஆகியோர் வல்ல அல்லாஹ்வின் அருளால் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

## வீச்சு



அவுஸ்திரேலிய அணியின் மந்திரப் பந்து வீச்சாளர் ஷேன் வோன். துடுப்பாட்டக்காரர்களின் கண்களுக்கு தண்ணி காட்டிவிட்டு, விக்கெட்டை கொத்திக்கொண்டு போய்விடும் ஷேன் வோன் வீசும் சுழற்பந்து.

டெஸ்ட் போட்டிகளில் சுழற்பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்தவர் லான்ஸ் கிப்ஸ். 309 விக்கெட்டுக்கள். இவர் மேற்கிந்தியத்தீவு வீரர்.

அடுத்த நிலையில் இருப்பவர் இங்கிலாந்தின் சுழற்பந்து வீரர் அன்டர்ஷட். இவர் கொய்தது 297 விக்கெட்டுக்கள்.

மூன்றாம் இடத்தில் இருக்கிறார் ஷேன் வோன். இவருக்கு முன்னால் உள்ள இருவரும் ஓய்வு பெற்றுவிட்டதால், முதலிடத்தை பிடிக்கும் வாய்ப்பு கைக்கெட்டும்.

டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்திய லான்ஸ் கிப்ஸின் இன்னொரு சாதனை சமீபத்தில் முறியடிக்கப்பட்டது. லான்ஸ் கிப்ஸ் பந்து வீச்சில் அதிக கேட்சுகள் பிடித்தவர் மேற்கிந்தியத்தீவு முன்னாள் கப்டன் கேரி சோபர்ஸ். 39 கேட்சுகள் பிடித்தார்.

ஷேன் வோன் பந்து வீச்சில் அவுஸ்திரேலிய கப்டன் மார்க் டெய்லர் 40 கேட்சுகள் பிடித்து விட்டார். இதுதான் புதிய சாதனை. அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இச் சாதனை கைகூடியது.